ஆத்தி சூடியுரை

பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

சேதுசமஸ்தான மகாவித்துவான்
இரா. இராகவையங்கார் எழுதியது

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ஆத்திசூடியுரை

சேதுசமத்தான மகாவித்துவான்
ரா. இராகவையங்கார் எழுதியது

பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 001

மைய அரசு நல்கைத் திட்டம்

இயக்குநர் :

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை,
தலைவர், ஓலைச்சுவடித்துறை.

இத் திட்டத்தில் பணிபுரிந்தோர் :

1. புலவர் ப. வெ. நாகராசன், தொழில்நுட்ப உதவியாளர்.
2. முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி. பதிப்பாசிரியர்.
3. செல்வி க. லலிதாம்பிகா, சுவடி. பெயர்ப்பாளர்.
4. செல்வி கோ. மணிமொழி, தட்டச்சர்.
5. திரு ப. சதாசிவம், கணிப்பொறி செய்திக்கூறு பதிவர்.
6. திருமதி ச. லதா, ,,

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 39

திருவள்ளுவர் ஆண்டு—2016—மார்கழி, திசம்பர்—1985

ஆசிரியர் : ரா. இராகவையங்கார்

நூல் : ஆத்திசூடியுரை

பதிப்பு : மறுபதிப்பு 1996

விலை : உரூ. 40.00

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம்
தஞ்சாவூர் 613 001.

இந் நூல் மையஅரசு கல்வி மற்றும் பண்பாட்டுத்துறை வழங்கிய நல்கையின்வழி வெளியிடப்பெறுகிறது.

Published with the financial assistance from the Ministry of Education and culture,
Govt. of India, New Delhi.

முகவுரை

'ஆத்திசூடி' என்னும் அறநூல் தமிழ்க்கல்விக்கு அடிப்படையான ஒன்று. அகரவரிசையில் ஔவை மூதாட்டியார் அளித்த இந் நூலையும் கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்பனவற்றையும் மாணவர் தொடக்க நிலையில் முறையே ஓதி மனனம் செய்து வருவது முன்பு வழக்கமாயிருந்தது. இப்பொழுது மேற்படி நூல்கள் முழுமையாய்த் தரப்பட்டாவிடினும் அவற்றுள் சிற்சில பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தொடக்கப்பள்ளி மாணவர்க்கு உரிய தமிழ்ப் பாடப் புத்தகங்களில் சேர்த்துவிடுகின்றனர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் நூல்களில் சிலவற்றைத் தேர்ந்து தருவதால் எழுத்து வரிசைமுறை அமைப்பு மாணவர் அறிய இயலாமற் போய்விடுகிறது. இன்றும் பாடப்புத்தகங்களில் இடம் பெறுவதால் இளைஞர் முதல் முதியோர் ஈறாக ஆடவர் பெண்டிர் அனைவருக்கும் அறிமுகமான நூலாக ஆத்திசூடி அமைகிறது.

நூற் பெயர்

'ஆத்திசூடி' என்னும் பெயர் இந் நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள,

''ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே''

என்னும் கடவுள் வாழ்த்தின் முதற்சொல். ஒரு நூலுக்குப் பெயரிடுமிடத்து நூலின் தொடக்கச் சொல்லைப் பெயராக அமைப்பதும் உண்டு. அவ் வகையில் ஆத்திசூடி என்பது முதற் குறிப்பால் பெற்ற பெயராம். ஔவையார் பாடிய கொன்றை வேந்தன், வாக்குண்டாம் என்பனவும் முதற்குறிப்பால் பெயர் பெற்றனவே.

நூலின் அமைப்பு

'அறஞ்செய விரும்பு' என அகர முதலில் தொடங்கி, 'அ... வோர்ந்து வழிபோ' என வகரவருக்கம் ஈறாக மொ...

எழுத்துகளைக் கொண்டு அகர வரிசையில் இந் நூல் அமைந்துள்ளது. முதற்கண் 'அ' முதல் 'ஔ' வரை உயிர்முதல் மொழி பன்னிரண்டும் அமைகின்றன (12). அதனை அடுத்து ஆய்த வெழுத்துப் (ஃ) பெற்றுவரும் 'அஃகம் சுருக்கேல்' என்பது இடம் பெறுகிறது (1). இதன் பின்னர்க் ககரம் முதல் னகரம் ஈறான 18 உயிர்மெய்யெழுத்துகளும் கொண்ட நீதிச்சொற்கள் காணப் படுகின்றன. இந்தப் பதினெட்டுள் மொழிக்கு முதலில் வராத 'ட,ண,ய' என்பன ழுகரமும், 'ர' என்பது அகரமும், 'ல' என்பது இகரமும், 'ழ' என்பது அகரமும், 'ள' என்பது இகரமும், 'ற,ன' என்பன அகரமும் வரச் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன (18). இவற்றின் பின் க,ச,த,ந,ப,ம,வ எழுத்து வருக்கத்தில் ஔகாரம் ஒழியப் பதினோர் எழுத்துகளும் கொண்ட நீதிமொழி கள் நிரல்பட அமைந்துள்ளன (77). வகர வருக்கத்தில் மொழி முதலில் வராத வு,வூ,வொ,வோ என்னும் நான்கன் முன்னரும் 'அம்ம' என்னும் உரையசைச் சொல்லை முதலில் வைத்து இந் நீதிமொழிகளைத் தருகிறார் மகாவித்துவான் இராகவையங்கார் அவர்கள். ஏனையோர் இவற்றை உ,ஊ,ஒ,ஓ என உயிர் முதலாகவே அமைத்துள்ளனர். இதனால் வகர எழுத்து நிரல் மாறுபட்டு விடுகிறது. அதனைத் தவிர்க்கிறது 'அம்ம' என்னும் இடைச்சொற் சேர்க்கை.

இவ்வாறாக உயிர் 12, ஆய்தம் 1, உயிர்மெய் 18, மொழி முதலாகும் க,ச,த,ந,ப,ம,ய என்னும் ஏழிலும் ஔகாரம் நீங்க லாக 11 உயிரும் சேர்ந்து வரும் எழுத்துகளைக் கொண்ட மொழிகள்(77)ஆக 108 நீதிமொழிகளைக் கொண்டு அமைகிறது இந் நூல்.

நூற்றெட்டு நீதிமொழிகள்

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் ஆத்திசூடி உரைப் பாயிரத்துள், ''பரந்துபட்ட அறப் பகுதியுள் எல்லோர்க்கும் ஒப்பன இவை என்று ஒரு நூற்றெட்டறங்களையே எடுத்து ....தெய்வப்புலமை சீர்சால் ஔவையாரால் அருளிச்செய்யப் பட்டது இந் நூல்' என்று சுட்டியுள்ளார். மொழி முதலாம் உயிர்மெய் வருக்க வரிசையில் ஔகாரம் சேர்ந்த உயிர்மெய்யை முதலாகக் கொண்ட நீதிமொழி ஏனையோர் பதிப்புகளில் இல்லை யாகவும் மகாவித்துவான் அவர்கள் ககர வருக்கவரிசையில், 'கௌவை யகற்று' என்னும் ஒரு நீதிமொழியைச் சேர்த்துள்ளார். இதனைச் சேர்த்ததற்கான ஏது எதுவும் அவர்களால் குறிப்பிடப் படவும் இல்லை. இதனால் இவர்தம் உரை நூல் 109 நீதிமொழி

கள்ளக் கொண்டதாகக் காணப்படுகிறது. ஔவையார் பாடிய எழுத்துநிரல் நூலாகிய கொன்றை வேந்தனில், 'கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை' என்பது காணப்படுதலினால், ஆத்திசூடியிலும் 'கௌ' முதல் எழுத்தில் நீதிமொழி இருத்தல் இயல்பே என எண்ணுதற்கும் இடமாயுள்ளது. மற்றையோர் பதிப்புகளில் இஃது ஒன்று நீங்கலாக 108 நீதிமொழிகளே உள்ளன.

நூற்றெட்டு நீதிமொழிகளும், தெய்வங்களைத் துதிக்கும் 'அஷ்டோத்தர சதம்' என்னும் நூற்றெட்டு நாமங்களைப் போல உள்ளது என்னலாம். இதனால் இதனை, 'அஷ்டோத்தர நீதி' எனவும் வழங்குவது உண்டு. தெய்வத் திருநாமங்களை மறவாது போற்றுதல் போலவே ஔவையாரின் அறமொழிகளும் எல்லாரும் மறவாது போற்றத்தக்கன என்பது பெறப்படும்.

ஆத்திசூடிக்கு வழிகாட்டி

எழுத்து வருக்க முறையிலே செய்யுள் செய்தல் பண்டை வழக்கம் என்பது தேவாரப் பதிகம் ஒன்றனால் தெரிய வருகிறது. திருநாவுக்கரசர் அருளிய ஐந்தாம் திருமுறையாகிய திருக்குறுந் தொகையில் 'சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை,(திருமுறை 5, பதிகம் 221) என ஒரு பகுதி உள்ளது. இப் பதிகப் பாமாலையில் வரும் முப்பது பாடல்களும் அகரம் முதல் னகரம் வரை எழுத்து வரிசை முறையில் அமைந்துள்ளன. மொழி முதலில் வாரா எழுத்துகளும் எதுகையாய் அமைய அவற்றின்முன் உயிர்சேர்த்துச் சொல்முறை காட்டப்பட்டுள்ளது. இப் பகுதியில் ல,வ,ற என்னும் மூன்றெழுத்திற்கும் உரிய பாடல்கள் இல்லை. எழுத்து வரிசை முறையை நோக்கும் பொழுது அவற்றிற்கும் முன்பு பாடல்களிலிருந்து பின்னர் மறைந்துவிட்டிருக்குமோ என்று ஐயுறும் வகையில் இப் பதிகப் பாமாலை அகர நிரலில் அமைந் துள்ளது. இதனை ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய அகர நிரலில் அமைந்த நூல்களுக்கு வழிகாட்டியாகக் கொள்ளலாம். பின்னாளில் எழுத்து வருக்கங்களில் அமைந்த வருக்கக் கோவை, வருக்க மாலை என்னும் பிரபந்தங்களும் ஒப்புநோக்கிக் காணத் தக்கன.

நூற்பொருள் அடைவு

ஆத்திசூடி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை எளிய இருசீர் ஓரடிச் சூத்திரங்களால் உணர்த்து கின்றது. இந் நூலின் அமைப்பும் சிறப்பும் குறித்துச் சித்சார்-

சுப்பிரமணியாசாரியார் என்பார் தாம் எழுதிய 'ஔவையார் சரித்திரம்'* என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தரும் விளக்கம் வருமாறு:

''இதன் கட்டுரைகள் 'சுருங்கச் சொல்லல்,' விளங்க வைத்தல்' என்பனவாதிய பத்தழகும் பொருந்தியன. மானிட வாழ்க்கைப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தங்களைப் பற்றியும் இவை பேசும். 'அறஞ்செய் விரும்பு' முதலியன அறத்தைப்பற்றிக் கூறுவன; 'பொருடனைப் போற்றிவாழ்' முதலியன பொருளைப் பற்றிப் பேசுவன; 'மெல்லி நல்லாள் தோள்சேர்' முதலியன இன்பத்தைப் பற்றி இயம்புவன; 'வீடுபெற நில்' முதலியன மோட்சத்தைப்பற்றி மொழிவன. இவ்வளவு அரிய பெரிய நீதிகளைச் சுருங்கக் கூறுவதான இவ்வளவு சிறியநூல் வேறெப்பாஷையிலுங் காணுதலரிது. இந்த ஆத்திசூடியும் பின்வரும் கொன்றைவேந்தனும் உலகினர் யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ,நிதிகள் உரைப்பன. இவை வடசொல்மணம் சிறிதும் பெறாத செந்தமிழ் நூல்களாம்''

(ஔவையார் சரித்திரம், பக்கம். 22-23).

இச் செந்தமிழ் நூலின் நாற்பொருளும் அமைந்துள்ள வகையினை இவ்வுரை நூல் உரைப்பாயிரமும் பின்வருமாறு விளக்குகிறது:

''பண்டையோர் அறநூலோ டொப்ப அறம் பொருள் இன்பம் வீடென்று நான்கினையும் தப் நூலுள் தொகுத்து உணர்த்துவான் எடுத்துக் கொண்டு, 'அறஞ்செய விரும்பு' (1) முதலாகப்' புகழ்பட வாழ்' (81) இறுதியாக உள்ள சூத்திரங்களால் பெரும் பான்மை எல்லார்க்கும் ஒத்த அறமும், 'பூமி விரும்பு' முதலாக (82) 'மொழிவது அறமொழி' (97) இறுதியாகவுள்ள சூத்திரங்களான் இராசதருமமாகிய பொருளும், இதன்கண், 'மெல்லினல்லாள் தோள் சேர், (94) என்பதனால் கற்புடை மனையாட்டியுடன் வாழ்தலை விதித்து, 'மைவிழியார் மனையகல்' (96)

---

*இந் நூல் 1902-ல் வெளிவந்தது. இதனை வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் தாம் வெளியிட்டுவந்த 'கலாநிதி' நூல்வரிசையில் 11ஆவது கலையாக வெளியிட்டுள்ளார்.

என்பதனால் அல்லாதார் போகத்தை விலக்கியவாற்றான் இன்பமும், 'மோகத்தை முனி' முதலாக (98) 'ஓர்ந்து வழிபோ' (109) இறுதியாக வுள்ள சூத்திரங்களால் துறவறங்கூறி வீட்டிற்கு வாயில் காட்டியவாற்றான் வீடும் விளக்கிச்செல்லுதல் கண்டு கொள்க.''

மேலே எடுத்துக்காட்டப்பெற்ற ஔவையார் சரித்திர நூலாசிரியர் காட்டிய பொருள் விளக்கத்தை விடவும் தெளிவாகவும் விரிவாகவும் இராகவையங்கார் விளக்கம் அமைதல் காணலாம்.

நூலாசிரியர்

ஆத்திசூடியை அளித்தவர் ஔவையார்; பெண்பாற் புலவர்களிலே இவர் முதற்பெருஞ் சிறப்பினைப் பெற்றவராகிறார். ஔவை என்னும் சொல்லுக்குத் தாய், புலமையாட்டி, ஒரு தெய்வம் என்னும் பொருள்கள் உள. நீண்டநாள் வாழ்ந்திருந்தவராதலின் ஔவை மூதாட்டி எனவும் போற்றுவர். ஔவையாருக்குக் கோயில் எடுத்துத் தென்தமிழ் நாட்டில் வழிபட்டு வருகின்றனர். ஔவையார் என்னும் பெயரைப் பெண்களேயன்றி ஆண்களும் வைத்துக்கொள்ளும் வழக்கமும் இருந்து வருகிறது.

''ஔவைக் கிழவி நம்கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி,''

'கூழுக் காகக் கவிபாடும்
கூனக் கிழவி அவளுரையை
வாழும் வாழ்வில் ஒருநாளும்
மறவோம் மறவோம் மறவோமே'

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

சங்க நூல்களான குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு எனும் தொகை நூல்களில் இடம்பெற்ற ஔவையார் காலத்தால் முந்தியவர். இப் பெயர் கொண்ட புலவர் பலர் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என ஆய்வாளர் கருதுகின்றனர். ஔவையாரைப் பற்றி வழங்கும் கதைகளும் பலவாகும். செவிவழிக் கதைகளில் எதுஎது உண்மையான வரலாறு, எந்த வரலாறு எந்த ஔவையாரைக் குறித்தது

என்பன எல்லாம் திட்டவட்டமாக வரையறை செய்வதும் எளிதன்று. ஆய்வாளர் பல்வேறு கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

ஆத்திசூடியை வழங்கிய ஔவையார் பிற்காலத்தவர். இவர் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் ஆகியோரின் காலத்தவர். இப் புலவர்களோடு ஔவையாரைத் தொடர்பு படுத்தியுரைக்கும் தனிப்பாடல்களும் பல உள. இவற்றைத் தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடல் திரட்டு ஆகியவற்றில் காணலாம். ஔவையார் இயற்றிய நூல்கள் இந் நூல் தவிரக் கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், பந்தனந்தாதி, நவமணிமாலை, அசதிக்கோவை, கல்வியொழுக்கம் தரிசனப்பத்து முதலியனவாம் என்பர்.

ஔவையார் காலம்

ஔவையார் பாடிய நல்வழியின் இறுதிப்பாட்டு,

''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்''

என்பதாகும். இதில் மூவர் தேவாரம், மணிவாசகரின் திருவாசகம், திருமூலர் திருமந்திரம் என்பன சைவத்திருமுறைகளைச் சார்ந்தவை. இத் திருமுறைகளை அருளிய பெரியார்களுக்குப் பிற்பட்டவர் இந்த ஔவையார் என்பது தெளிவு. எனவே கி. பி. 10 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் இவர் என்பது தெரியவரும்.

பேராசிரியர் என்னும் உரையாசிரியர் 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராதல் வேண்டும் என்பர். இவர் தாம் எழுதிய தொல்காப்பியச் செய்யுளியலுரையில் ஔவையார் பாடிய மூதுரை, கொன்றைவேந்தன் நூல்களிலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டியுள்ளார்.

''அட்டாலும் பால்சுவையிற் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்''

என்னும் மூதுரைப் பாடலைச் (4) செய்யுளியல் 72 ஆம் நூற்பாவுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

''கொன்றை வேய்ந்த செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே''

என்னும் கொன்றைவேந்தனின் காப்புச்செய்யுளைச் செய்யுளியல் 149ஆம் நூற்பாவுரையில் எடுத்தாண்டுள்ளார். எனவே, பேராசிரியர் காலத்திற்கு முற்பட்டவர் ஔவையார் என்பது பெறப்படும். ஔவையாருடன் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோரைத் தொடர்புபடுத்தும் தனிப்பாடல்களைக் கொண்டு இவரெல்லாரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர் எனக்கொள்ளலாம். புலவர் புராணத்தில் தண்டபாணி சுவாமிகள்,

> ''முன்னௌவை கலிவருடம் மூன்றாவ தாயிரத்தாள்
> பின்னௌவை நாலாவ தாயிரத்திற் பிறந்திட்டாள்''

எனக் கூறுவது முற்கால பிற்கால ஔவையார் பற்றிய கருத்திற்கு ஒத்துக் காணப்படுகிறது. இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டு பார்க்குமிடத்துக் கம்பர் காலமாகிய 12ஆம் நூற்றாண்டில் ஆத்திசூடி அருளிய ஔவையார் வாழ்ந்தார் என்று கொள்ளலாம்.

ஆத்திசூடியுரை

ஆத்திசூடிக்கு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் ஆக்கியளித்த உரை காலத்தால் முற்பட்டது. இளம் மாணவர்க்கான பாலபாடங்களை ஆக்கி வழிகாட்டிய நாவலர் பெருமான் ஆத்திசூடி முதலிய பல நூல்களுக்கு உரைகண்டுள்ளார். இதன் பின்னரும் இவருரையைத் தழுவிப் பலர் உரைநூல் வெளியிட்டுள்ளனர். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரையுடன் ஆத்திசூடி முதலிய அறநூல்களைத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர்.

ஆத்திசூடியின் வழிநூல்கள்

ஆத்திசூடியின் நீதிமொழிகளைத் தனித்தனிக் கதைமூலமாகவும் பிறவாறும் பலர் அவ்வப்போது எழுதி வந்துள்ளனர். ஆத்திசூடி வாக்கியத்தை உளப்படுத்தி அதற்கு ஏற்புடைய உதாரணக் கதைகளை இதிகாச புராணங்களிலிருந்து எடுத்துரைக்கும் 'ஆத்திசூடி மாலை' என்னும் செய்யுள்நூல் ஒன்றும் உள்ளது. இதேபோல 'ஆத்திசூடிப் புராணம்' என்னும் ஒரு நூலும் உள்ளது. ஆத்திசூடி விளக்கங்கள், கதைகள் முதலியன பல பத்திரிகை வாயிலாகவும் நூல்களின் வழியும் வெளிவந்துள்ளன. இவை எல்லாம் ஆத்திசூடி அறமொழிகளின் பொருள்களை நமக்கு நன்கு விளக்குவனவாம்.

இராகவையங்காரின் உரைநூல்

இத்தகைய பெருஞ்சிறப்புடைய இந்நூலுக்குமகாவித்துவான் ரா. இராகவையங்கார் நுட்பமும் திட்பமும் வாய்ந்த அகலவுரை எழுதியுள்ளார். மகாவித்துவான் அவர்கள் சங்கநூல் முதற் கொண்டு இக்கால நூல்வரை எதனையும் நன்கு சுவைத்து உணரும் பெற்றியராயிருந்தார். தமிழ், வடமொழி என்னும் இரு மொழிகளிலும் வல்லவர். சேதுசமத்தான மகா வித்துவானாக விளங்கியவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் பல. இவர் பாடிய, எழுதிய நூல்களும் பல.[1]

மகாவித்துவான் அவர்கள் இந் நூலின் உரைகளை நாட் குறிப்பு ஏட்டில் அவ்வப்போது எழுதிவைத்து வந்தார்கள். இவ் வுரைப்பகுதிகளை மகாவித்துவான் அவர்களின் திருமகனார் வித்துவான் இராமானுஜையங்கார் அவர்கள்[2] தனியாக எடுத் தெழுதி வைத்திருந்தார்கள். அச்சில் வெளியிடப்பெறாத இந்த நூலின் மூலவரைவினை வெளியிடுவதற்காக என்னிடம் ஒப்படைத்திருந்தார்கள். அவர்கள் தந்த மூலப்படியினை நான் பெயர்த்து எழுதி ஒப்புநோக்கி வைத்திருந்தேன். மகாவித்துவான் அவர்களின் ஆய்வுரைகளையும் பிறநூல்களையும் போற்றி மீண்டும் வெளியிட முனைந்துவரும் திரு. என். எஸ். இராகவன் அவர்கள் இவ்வுரையின் தட்டச்சுப்படியினை அனுப்பியுதவினர். இந்தத் தட்டச்சுப்படியுடன் எனது புதிய கையெழுத்துப் படியும் மூலப்படியும் ஒப்பு நோக்கி இந்த உரைநூல் இப்பொழுது அச்சிடப்பட்டுள்ளது.

இராகவையங்காரின் உரைத்திறம்

இருசீர் ஓரடியாய்ச் சில்வகை எழுத்தினால் அளக்கலாகா அரும்பொருள் அடக்கிச் செய்யப்பெற்றதாகிய ஆத்திசூடி நீதி மொழிகளின் அரும்பொருள்களை நுட்பமாய் ஆழ்ந்து சிந்தித்துத் திருக்குறளுக்குப் பேருரை கண்ட பரிமேலழகரை ஒப்ப இராக வையங்கார் எழுதிய இவ்வுரை அகலவுரையாக உள்ளது. பரிமேலழகர் திருக்குறள் உரைத்தொடக்கத்தில் உரைப் பாயிரம் அமைத்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும்

1. மகாவித்துவான் இராகவையங்கார் அவர்களின் வரலாறு தனியாக இவ்வுரை நூலுள் தரப்பட்டுள்ளமை காண்க.

2. இவர்கள் 28-3-84-இல் ஆசாரியன் திருவடியடைந்தார்கள்.

நாற்பொருளையும் விளக்கி நூற்பொருளைத் தொடர்புபடுத்திக் காட்டியுள்ளமை போலவே இவ்வுரை நூலும் உரைப் பாயிரத்துடன் தொடங்குகிறது.

பரிமேலழகர் அதிகாரங்களுக்கிடையே அவற்றின் வைப்பு முறைக்குக் காரணம் காட்டியும், குறட்பாக்களின் பொருளியை பினை அதிகாரந் தோறும் தொடர்புபடுத்திக் காட்டியும் செல்லு மாறு போல ஆத்திசூடி அறமொழிகளின் அடைவுமுறையை இவ்வுரை நூலும் எடுத்துரைக்கின்றது.

பாடற்பொருளைப் பொழிப்புரையாகத் தந்து பொருள் விளக்கத்திற்கு வேண்டும் குறிப்புகளும் சொற்பொருள்விளக்கம், இலக்கண அமைதி, அணிநலன் முதலியனவும் காட்டித் தமக்கு மாறுபட அமைந்த ஏனையரின் பாடம், உரைகளையும் எடுத்து விளக்கி உடன்படலும் மறுத்தலுமாய்ப் பரிமேலழகர் உரை யமைப்புக் காணப்படுமாறே இவ்வுரையும் அமைந்திருக்கின்றது.

பல்வேறு இடங்களில் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலியோர் உரைகளைத் தாம் கொண்ட பொருளுக்குச் சான்றாக இராகவையங்கார் எடுத்துக் காட்டி விளக்கம் தந்துள்ளார்.

சங்கநூல்கள், திருக்குறள் நாலடியார் முதலிய அறநூல்கள், தேவாரம் முதலிய திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம் முதலிய அருளிச்செயல்கள், சிந்தாமணி கம்பராமாயணம் முதலிய காவியங்கள், வேறும் பல நூல்கள் ஆகியவற்றிலிருந்து தக்க மேற்கோள்காட்டி ஐயங்கார் அவர்கள் உரை வரைந்து செல்லு கிறார்கள். வேண்டும் இடங்களில் இலக்கணக் குறிப்புகளும் அணிநலன்கள் முதலியனவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மகா வித்துவான் அவர்களின் ஆழ்ந்த சிந்தனையையும் பலதிறப்பட்ட நூற்பயிற்சியையும் தெற்றென வெளிப்படுத்தி நிற்கிறது இப் பேருரை.

வடமொழி நூல்களாகிய வேதம், உபநிடதம், பகவத்கீதை, காளிதாச மகாகவியின் வாக்குகள், வான்மீகி வியாசர் மொழிகள் முதலியனவும் பொருள் விளக்கத்திற்காக எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

'சொல்லியது கொண்டு சொல்லப்படாத பொருளை அறித லாகிய' அருத்தாபத்தி நியாயத்தால் ஒவ்வோர் அறமொழிக்கும்

இவர்கள் எழுதியுள்ள கருத்துவிளக்கம் இவ்வுரையின் தனித் தன்மையாகும்.

பல அறமொழிகளுக்கு இருவகையான வேறுபட்ட உரை விளக்கங்களைச் சொற்பிரிப்பு முறையாலும் பிறவாற்றாலும் நுட்பமாய்க் கண்டு கூறியுள்ளார்கள். ஒரு சிலவற்றிற்கு மூன்று வகையான கருத்துரைகளும் தந்துள்ளார்.

பிறர் கொண்ட பாடங்களையும் உரைகளையும் சிற்சில இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். ஒருசில இடங்களில் பிறருரை பொருந்தாது எனக் காரணம் காட்டி மறுக்கின்றார். 'ஆசிரியர்க்குக் கருத்தன்றென்க' என்று இவர் கூறும் மறுப்புரை பண்டை உரையாசிரியரின் மரபினை நினைவூட்டுவதாகும். நூற்பொருளுக்கும் வரும் இடத்திற்கும் முன்பின் வரும் உரைகளுக்கும் ஏற்ப இவ்வாறு உரை கொள்ளுதலே தக்கது என வலியுறுத்திக் கூறுதலையும் சில இடங்களில் காண்கிறோம்.

இவ்வாறாக இராகவையங்காரின் இந்த உரை திட்ப நுட்பம் செறிந்த அரியதோர் ஆய்வுரையாகவும் விளக்கவுரையாகவும் அமைந்துள்ளது.

மூலபாடம்

ஆத்திசூடி மூல பாடம் முந்திய பதிப்புகளினின்றும் ஒருசில இடங்களில் மாறுபடக் காண்கிறோம். ஆத்திசூடிக்குத் தமக்குக் கிட்டியுள்ள ஓலைச்சுவடிகளை ஆராய்ந்தே இப் புதிய பாடங்களை அவர்கள் கொண்டுள்ளார்கள். 'நுண்மை நுகரேல்' என்னும் ஏனையோர் பாடத்தினும் வேறுபட்டு, 'நுண்மை நுவலேல்' என்பது இந் நூற்பாடம். இதன் உரையில், 'நுவலேல் என்பதே பழைய ஏடுகளிற் கண்ட பாடம்' என்று சுட்டுவது கொண்டு ஏடுகளை இவர் ஆராய்ந்து பாடம் தேர்ந்தமை தெளிவாம். மேலும் 73 ஆம் பாடல் உரையில் 'நேர்பட ஒழுகு' என்பதற்கு 'நேர்கோலென நில் என்பதும் பாடம், என்று குறிப்பிட்டுள்ளார், ஓலைச் சுவடித் துறையில் உள்ள 10 ஆத்திசூடிச் சுவடிகளை ஒப்புநோக்கியதில் மூன்று ஏடுகளில் இப் பாடவேறுபாடு காணப்படுவது குறிக்கத் தக்கது. ஒரு சில இடங்களில் பிறர் கொண்ட பாடங்களை எடுத்துக் காட்டி அவற்றைத் தாமும் அடுத்த நிலையில் ஒருப்பட்டமை தோன்ற நூலின் இறுதியில் தரப்பட்டுள்ள உரைவேறுபாடு என்னும் பகுதியில் பாடவேறுபாடுகளும் சுட்டிக் காட்டப்

பட்டிருக்கின்றன. இதன் துணையால் இந் நூலாசிரியர் பாட்டும் பிறர் கொண்ட பாடமும் முற்றுமாய் அறியலாகும்.

ஆத்திசூடி அறமொழிகள் திருக்குறள் போல ஒருவகையான நிலைபேறுடைய பாடங்களைப் பெற்றனவாம். எனினும் திருக் குறளில் மூலபாட வேறுபாடுகளை அந் நூலுரையாசிரியன்மார் முதலியோர் கண்டுள்ளமை போல இந் நூலிலும் சில உள. தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித் துறையில் இதுவரை தொகுக்கப் பெற்ற 2254 சுவடிகளில் 10 ஆத்திசூடிச் சுவடிகள் உள்ளன. அவற்றை இராகவையங்கார் மூலபாடத்துடன் ஒப்பு நோக்கியதில் அவர் தம் உரையுள்ளும் எடுத்துக்காட்டாத பாட வேறுபாடுகள் சில காணப்பெற்றன.

பத்து ஏடுகளில் ஓரேவகையான ஒப்புமை கொண்டவை ஐந்து (1135,1146,1225,1286,1298).இவற்றில் கரவேல்,விலக்கேல் என்றாற்போல வரும் எதிர்மறை முன்னிலைவினை அறமொழிக ளெல்லாம் கரவேன், விலக்கேன் என்றாற்போலத் தன்மை யொருமைச் சொல்லாய்க் காணப்படுகின்றன. 9 ஆவது அற மொழி 'ஐயமிட்டுண்' என்பது. இதனை ஐயமிட்டுண், ஐய மிட்டுண்ணும் என்றும் காணப்பெற்றன. 11 ஆவது அறமொழி 'ஓதுவது ஒழியேல்'—இது 'ஓதுவது ஒளியேல்' என்று 6 ஏடுகளில் காணப்பெற்றது.சிறப்பு ழகரத்திற்குப் பதில் பொது ளகரம் இட்டு எழுதியது எழுதியோர் பிழை எனலாம். ஆயினும் — 'ஒளியேல்' என்பது 'மறையாத' என்னும் பொருள் தருதலின் பொருளுடைய பாடமாகவும் காண்கிறது. 16 ஆம் அறமொழி 'சனி நீராடு' என்பது. இது, 'சனிபுத னீராடு' என ஐந்து ஏட்டிலும், 'சனிபுத னீராடும்' என மூன்று ஏட்டிலும் மாறிக் காண்கிறது.இது நாட்டு வழக்குப் பற்றியமைந்த மாற்றம் போலும்.

46 ஆம் அறமொழியாகிய 'சித்திரம் பேசேல்' என்பது 'சித்தம் பேசேன்' என்று உள்ளது. 57 ஆம் அறமொழி 'திருமாலுக் கடிமை செய்' என்பது. 'இதில் 'அடிமை' என்பத தற்குப் பதிலாக 'அடுமை' என்று எட்டு ஏடுகளில் காணப்பெற்றது. 'தொன்மை மறவேல்' என்பது (64) 'தொன்மை தொடர்ந்திரு' என்று நான்கு ஏடுகளில் வரக் காண்கிறோம். 'புகழ்பட வாழ்' (81) என்பது 'புகழ்ந்தாரைப்போற்றிவாழ்' என ஐந்து ஏட்டிலும் 'புகழ்மைபட வாழ்' என ஐந்து ஏட்டிலும் காணப்பெற்றது. 'போர்த்தொழில் புரியேல்' (86) என்பது 'போற்றடிப் பிரியேன்' என ஐந்து ஏடுகளில் உள்ளது. 'மீதூண் விரும்பேல்' என்பது 'மீதூணி விரும்பு' என்றும் 'மீதூணி விரும்பேன்' என்றும் சில

ஏடுகளில் காணப்பெறுகிறது. 'மெல்லில் நல்லாள் தோள் சேர்' (94) என்பது இந்த ஏடுகள் இரண்டில் 'மெல்லியாள் தோள் சேர்' என்றும் பிறவற்றில், 'மெல்லியலார் தோள் சேர்' என்றுமே காணப்படுகிறது. 'மேன்மக்கள் சொல்கேள்' என்பது 'மேமக்கள் சொல் கேள்' என நான்கு ஏடுகளில் காணப்படுகிறது. 'வாதுமுற் கூறேல்' என்பது 'வாதுமை கூறேல்' என்றும் 'வாதுமை கூறேன்' என்றும் உள்ளது. 'கடிவது மற' (32) என்பது 'கடுவது மகம்', 'கடுவதுமறம்' எனச்சொல்வடிவமும் பொருளும் மாறுபட்டுள்ளது. 'வல்லமை பேசேல்' (99), 'வீடு பெறநில்' (102), 'அம்ம வோர்ந்து வழி போ' (109) என இவை முறையே 'வளமைபட வாழ்', 'வீரியம் பேசேல்', 'வோதுவது வேதம்' என முழுமையாய் வேறு பட்டுக் காண்கின்றன. 'கௌவை அகற்று' என இவ்வுரை நூலில் கொள்ளப்பெற்ற 43-ஆம் அறமொழி இங்குள்ள பத்து ஏடு களிலும் காணப்பெறவில்லை.

இங்குள்ள சுவடிகளில் பெரும்பாலனவும் தொடக்கப்பள்ளி பயிலும் மாணவர் பயிற்சியின் பொருட்டு எழுதிப்படித்த சுவடிக ளாகவே தோன்றுகின்றன. எழுத்து மாற்றப் பிழைகள் முதலிய மிக அதிகமாகவேயுள்ளன. இன்னும் பிற இடங்களில் உள்ள சுவடிகளையும் தமிழ்க்கடல் கா. நமசிவாய முதலியார் முதலிய புலவர் பெருமக்கள் பதிப்பித்த பதிப்புகளையும் வைத்து ஒப்பு நோக்குவோமானால் இன்னும் பல சொல் மாறுபாடு, பொருள் மாறுபாடுகளைக் காணுதல் கூடும்.

பதிப்புமுறை

ஆத்திசூடியுரை என்னும் இந் நூலின் தொடக்கத்தில் ஆத்திசூடி மூலபாடம் முழுமையும் தரப்பட்டுள்ளது. நூலினுள்ளே உரைப்பகுதியுள் மூலபாடம் பல்வேறு பக்கங்களின் அமையு மாதலின் நூல் முழுமையும் ஒருசேரப் படித்தற்கு இது துணை செய்யும். இப்பகுதியில் தரப்பட்டுள்ள மூலபாடம் உரை யாசிரியர் இராகவையங்கார் ஏற்றுக்கொண்டபடியுள்ள மூல பாடமாகும்.

ஆத்திசூடியுரை விரிவுரையாய் அமைந்துள்ளமையால் ஒவ்வொர் அறமொழியின் பொருளும் தெளிவாகத் தனிப்படத் தெரியும் வகையில் பிற உரைப் பகுதியினும் வேறுபட்ட பெரிய எழுத்தில் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

நூலின் இறுதியில் உரைவேறுபாடுகளுடன் பாட வேறு பாடுகளும் காட்டும் இணைப்பு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

மகாவித்துவான் இராகவையங்கார் உரையுடன் ஒப்புநோக்கப் பழைய உரையாகிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் உரையும் புத்துரையாகிய நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரையும் எடுத்துக்கொள்ளப்பெற்றன.

நூலின் இறுதியில் ஆத்திசூடிச் சொல்லடைவு கணிப்பொறிவழி உருவாக்கப்பெற்றது.

மகாவித்துவான் ரா. இராகவையங்காரின் வாழ்க்கை வரலாறு நூலின் முதற்கண் சேர்க்கப்பட்டுள்ளது.

நன்றியுரை

தம் தந்தையார் இராகவையங்காரின் நூல்களைப் பாதுகாத்து அவற்றை எவ்வாறாயினும் அச்சில் வெளிப்படுத்த வேண்டும் என்னும் பேரவாக் கொண்டிருந்தவர் மகாவித்துவானின் புதல்வர் வித்துவான் ரா. இராமானுஜையங்கார் அவர்களே இதன் மூலப்படியை அன்புடன் உதவினார்கள். அவர்கள் மறைந்தபின் மகாவித்துவான் அவர்களின் பெயரர் பேராசிரியர் ரா. விஜயராகவன் (பம்பாய் அணுசக்தி ஆராய்ச்சி நிலையம்) அவர்களும் பேரீடுபாட்டுடன் தாத்தாவின் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதில் பேரார்வம் காட்டி வருகிறார்கள். ஆத்திசூடியுரையின் மூல உரைப்படியைப் பாதுகாத்து அளித்த மகாவித்துவான் குடும்பத்தாருக்கு முதற்கண் என் நன்றி உரித்தாகிறது.

இந்த நூல் மைய அரசு கல்வி, மற்றும் பண்பாட்டுத்துறை தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறைக்கு அளித்த நல்கை இரண்டு இலக்க ரூபாயின் துணைக்கொண்டு வெளிவருகிறது. மைய அரசு கல்வி-பண்பாட்டுத்துறைக்குத் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறை நன்றி பாராட்டுகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் திட்டப் பணிகள் முறையாகவும் விரைவாகவும் நடைபெறத் தக்க ஆலோசனைகள் கூறி ஊக்கி வந்துள்ளார்கள். அவர்களுக்கும் ஓலைச்சுவடித்துறை நன்றி தெரிவிக்கிறது.

உரையின் தட்டச்சுப்படியுடன் கையெழுத்துப் படிகளை ஒப்புநோக்கியும் ஏனைய உரைகளுடன் ஒப்பிட்டு உரைவேறுபாடு, பாட்டுவேறுபாடுகளைத் தொகுத்தும் சொல்லடைவு அமைத்தும்

இந் நூலை அச்சகத்திலிருந்து பதிப்பித்தும் உதவியவர் திட்டத்தின் பதிப்பாசிரியர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி. அச்சுக்குரிய படிவத்தை முடிவாகத் தட்டச்சு செய்தவர் செல்வி கோ. மணிமொழி. தட்டச்சுப்படிகளை ஒப்பிட்டு நோக்குதற்குப் பதிப்பாசிரியருக்குச் செல்வி க. லலிதாம்பிகா உதவி புரிந்தார். இவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியும் வாழ்த்தும் உரியனவாகுக.

தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் உள்ள ஆத்திசூடி ஏடுகளை ஒப்பு நோக்க இணைப்பேராசிரியர் முனைவர் த. கோ. பரமசிவம் அவர்களும் தொழில்நுட்ப உதவியாளர் திரு சி. இலட்சுமணன் அவர்களும் உடனிருந்து உதவினர். இவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

குறித்த காலத்தில் அச்சுப் பணியை விரைவில் செய்துதந்த புதுக்கோட்டை சர்மாஸ் சானடோரியம் அச்சகத்தாரின் பணி பாராட்டுக்குரியது. இவ்வாறாக இந் நூல் நல்ல முறையில் வெளிவர ஒத்துழைத்த எல்லோருக்கும் நன்றி.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
25-12-85

மு. சண்முகம்பிள்ளை

சேது சமத்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார்

(1870 — 1946)

மு. சண்முகம் பிள்ளை

தமிழுலகில் மகாவித்துவான் என்றால் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் திருப் பெயரே முன்னிற்கும். அதுபோலவே சேதுசமத்தான மகா வித்துவான் என்றால் ரா. இராகவையங்கார் நம் எண்ணத்தில் முற்படுவார். எத்தனையோ மகாவித்துவான்கள் சேது வேந்தர் அவையை அலங்கரித்த போதிலும் ரா. இராகவையங்கார் அம் மகாவித்துவான்களுள்ளே முன்னணியில் வந்து நிற்கிறார்.

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் 20–9–1870ல் தோன்றினார். இவர் பிறந்த ஊர் சிவகங்கைச் சீமையைச் சார்ந்த தென்னவராயன் புதுக்கோட்டை. இவருடைய தந்தையார் இராமாநுஜையங்கார்; தாயார் பதுமாசனி அம்மையார். இவர் பிறந்த கோத்திரம் நைத்துருவகாசிப கோத்திரம் ஆகும்.

இளமையில் ஐந்தாம் வயதிலேயே தம் தந்தையாரை இழந்தார் இராகவையங்கார். இவருடைய தாய்மாமனார் சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் இராமநாதபுரம் சமத்தானத் தில் அரசவைப் புலவராய் அந் நாளில் சிறப்புடன் விளங்கினார். இவர் தமிழிலும், வடமொழியிலும், கன்னடம் முதலிய பிற மொழிகளிலும் வல்லவர். சதாவதானி என்பது இவர்தம் கல்வி யின் மிகு சிறப்பால் பெற்ற விருதுப் பெயராகும். இத்தகு பெருமை பல கொண்ட தாய்மாமனாரின் ஆதரவில் இராக வையங்கார் இராமநாதபுரத்தில் கல்வி பயின்றார். மெட்ரிக் குலேசன் வரை பள்ளிக்கல்வி பெற்றதோடு தம் அம்மானிடமும் சமத்தானப்புலவர்களிடத்தும் தமிழும் வடமொழியும் பயின்றார். இளமையிலேயே கூரிய அறிவும் கவிபாடும் திறமையும் பெற்று இவர் விளங்கினார்.

இராகவையங்கார் தம் 18 ஆம் அகவையிலேயே மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணிபுரியத் தொடங்கினார். இச் சமயம் ஜானகி அம்மாளை வாழ்க்கைத் துணையாகப் பெற்றார். திருச்சியில் உள்ள சேஷையங்கார் பள்ளியிலும் சிலகாலம் இவர் தமிழாசிரியராக இருந்தார்.

மாண்புமிகு பாஸ்கர சேதுபதி மகாராசா அவர்கள் இராகவையங்காருடைய புலமைத் திறத்தை மெச்சித் தம் அவையில் தலைமை மகாவித்துவானாக்கினார். இவருக்குப் பல்லக்கு முதலிய வரிசைகளையும் நல்கினார். சமத்தான தர்ம மகமை நிதியிலிருந்து பசலிதோறும் ஆயுட்கால பரியந்தம் ரூபாய் 635 சம்மானமாகத் தரவும் உரிமைப் பத்திரம் பதிவுசெய்து தந்துள்ளார். அப் பத்திரத்தில் இராகவையங்கார் அவர்களுடைய பலதுறைப் புலமையையும் பாஸ்கர சேதுபதி அவர்கள் எடுத்துரைத்துப் பாராட்டியிருப்பது ஈண்டுக் காணத்தக்கதாம்.

"நமது சமஸ்தானத்தில் பிறந்து வளர்ந்து நமது சமஸ்தானத்து அன்னப் பிரபாவத்தினாலேயே தமிழ்க்கல்வியில் பூரண பாண்டித்தியமுடையராய், ராவ்பகதூர் பி. அரங்கநாத முதலியார் முதலிய பல கல்வியிற் பெரியோர்கள் மிகச்சிறப்பித்து எழுதிய மகாவித்துவானாய் அநேக வருடங்களாக நமது சமஸ்தானத்துத் தலைமைத் தமிழ் வித்வானாயுள்ள தாங்கள் தமிழ் நூலுரைகள் முதலியன செய்கின்றதனாலும் தமிழிலுள்ள அரிய பெரிய விஷயங்களைப் பலர்க்கும் உபந்நியசித்தலாலும் அனேகர்க்குப் பூர்விகத் தமிழ்ப்பாஷையைப் போதித்து வருதலாலும் கிடைத்தற்கருமையாயுள்ள பழைய தமிழ் நூல்களைத் தேடிச்சேர்த்தலாலும் அவற்றைப் பரிசோதித்தலாலும் வெளியிடுதலாலும் இன்னும் பல நன்முயற்சிகளாலும் தமிழ்ப் பாஷையை நன்றாய் வளர்ப்பவர்களாயும் நமது சமஸ்தானத்துச் செந்தமிழ்ப் பரீக்ஷாதிகாரத் தலைவராயும் நமது சமஸ்தானத்து வித்வத் அங்கத்தில் பரம முக்கியராயும் இருத்தலை ஆலோசித்து ......திரமான சம்மானமான இப் பத்திரத்தின் மூலம் நம்மால் கொடுக்கலாயிற்று"

இப் பத்திரத்தில் பாஸ்கர சேதுபதி அவர்கள் இராகவையங்கார் அவர்கள் தமிழ்ப் புலமையிலும் தமிழ்ப்பணியிலும் சேதுசமஸ்தானத்தில் எவ்வளவு சிறப்புடையராய் விளங்கினார் என்பதனை எடுத்துக்காட்டியிருத்தல் காணலாம்.

சேதுவேந்தர் பேரவைக்கு வடமொழி, தமிழ், இசை முதலிய பல துறைகளிலும் வல்ல பெரும்புலவர்கள் அடிக்கடி வந்து தத்தம் கல்வித்திறத்தை வெளிப்படுத்திப் புகழொடும் சேதுபதிகளிடமிருந்து பெற்ற பெரும் பொருளொடும் திரும்பிச் செல்வது வழக்கமாயிருந்தது. அக் காலங்களில் இராகவையங்காரும் உடனிருந்து மகிழ்ந்து தம் கல்வி நலனைப் பலரும் வியக்கும்

வண்ணம் வெளிப்படுத்தியும் வந்தார். இத்தகு கல்வியனுபவம் பிற்காலத்தில் அவருக்குப் பெரியதோர் துணையாய் அமைந்தது.

சேதுசமத்தானவித்துவானாக இவர்கள் விளங்கிய காலத்தில் தான் சுவாமி விவேகானந்தர் அங்கு வந்து சேதுபதிகளின் ஆதர வினால் மேல்நாடுகளுக்குச் சென்று திரும்பினார். சுவாமி விவேகானந்தர் போன்ற பெரியோர்களின் பழக்கம் இவருக்கு ஏற்பட ஒரு வாய்ப்பாயிற்று. சேதுபதியை நாடிவந்து பொருளுதவி பெற்ற புலவர் பெருமக்கள் பலராவர். அப் புலவர்களுடனும் கலந்து பழகும் வாய்ப்பும் இவருக்கு நேர்ந்தது.

பாஸ்கர சேதுபதிகளின் ஆதரவில் பாண்டித்துரைத் தேவரவர் களின் முயற்சியால் மதுரை மாநகரில் தமிழ்ச் சங்கம் 1901 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் நாள் நிறுவப் பெற்றது. இச் சங்கத்தை நிறுவும் பணியில் இராகவையங்கார், தேவர் அவர்களுக்குப் பெருந்துணையாயிருந்தார் நான்காம் தமிழ்ச் சங்கம் என இது போற்றப்பெற்றது. சங்கத்திலிருந்து தமிழ்ப்பணி புரியத் தம் அவைப் பெரும் புலவரான இராகவையங்காரைச் சேதுபதி யவர்கள் அனுப்பி வைத்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நூற்பதிப்பு, ஆராய்ச்சித் துறை களின் தலைவராய் இராகவையங்கார் அவர்கள் விளங்கினார்கள். மதுரைத் தமிழ்ச் சங்கமும் செந்தமிழ்ப் பத்திரிகையும் பெரும்புகழ் பெற்று விளங்குவதற்கு இவரே காரணமாயிருந்தார். இலக்கிய ஆராய்ச்சியும் சரித்திர ஆராய்ச்சியும் இவரால் பெரிதும் ஊக்கு விக்கப்பட்டன.

அந் நாளில் பல இடங்களுக்கும் சென்று பழஞ்சுவடிகள் தேடிச் சேர்த்துச் சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் தொகுத்து வைத்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 1902 ஆம் ஆண்டிலே 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழ் தொடங்கப் பெற்றபோது இப் பத்திரிகையின் முதல் இதழாசிரியராக இராகவையங்கார் பொறுப்பேற்றார். இப் பத்திரிகையில் 'ஆராய்ச்சி' என்னும் தலைப்பில் இவர்கள் தொடர்ந்து தமிழிலக்கிய இலக்கணம் முதலியன குறித்து ஆய்வுரைகள் எழுதி வந்தார். இவருடைய ஆழ்ந்த கல்வியும் நுண்ணிய ஆராய்ச்சித் திறனும் பொருள்களை முறைப்படப் பாகுபடுத்திப் பார்த்து விளக்கும் பேராற்றலும் இவர் எழுதிய கட்டுரைகளில் புலனாகின்றன.

செந்தமிழ் வாயிலாகப் பழஞ்சுவடிகளிலிருந்து எடுத்து இவர் பதிப்பித்த நூல்களும் பலவாகும். அவையாவன: ஐந்திணை,

யைம்பது உரை, களாநூல், வளையாபதிச் செய்யுட்கள், புலவராற்றுப்படை, இனியவை நாற்பது உரை, நேமிநாதம் உரை, திருநூற்றந்தாதி, முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், பன்னிருபாட்டியல், தொல்காப்பியச் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை முதலியனவர்கும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றைப் பதிப்பிக்கச் சங்கத்தின் வாயிலாக இவர் எடுத்த முயற்சி முற்றுப்பெறவில்லை. பின்னாளில் கம்பர் விலாசம் இராச. கோபாலையங்கார் இந் நூலை வெளியிட முன் வந்தபோது தாம் முன்பு தொகுத்து வைத்திருந்த குறிப்புகள் முதலியவற்றை அவருக்கு வழங்கி அந் நூல் சிறப்புற வெளிவர உதவினார். இவ்வாறு வேறு புலவர் சிலருக்கும் இவர் ஏடுகள் முதலியன தந்து உதவியுள்ளார்.

கைந்நிலைப் பிரதியை இ.வை. அனந்தராமையர் விரும்பிய போது இவர் மனமுவந்து அவருக்கு அதனை அளித்தார். இவ்வாறே தொல்காப்பிய இளம்பூரணம் செய்யுளியல் உரைப் பிரதியையும் நவநீதப் பாட்டியல் உரையையும் இவர் யாதொரு வகைக் கைம்மாறும் கருதாது பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களுக்குத் தந்தனர். பிள்ளையவர்கள் அவற்றைத் தம் பதிப்பில நனகு பயன்படுத்திக் கொண்டுள்ளார். தாம் கற்ற கல்வியைத் தம்முடன் மாய்ந்து போக விடாதபடி அறிஞர் பிறருக்கும் உதவவேண்டும் என்னும் பேரவா உடையார் இராகவையங்கார் என்பது மேற்கூறியவற்றால் தெரிய வரும்.

டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்களைப் போலவே இவரும் நம் பண்டை நூற் கருவூலங்களைத் தேடித்தொகுத்து வைப்பதில் பேரூக்கம் கொண்டிருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு இவர் தேடியளித்த சுவடிகள் பலவாகும். பின்னாளில் தம்மிடமிருந்த ஏட்டுச்சுவடிகள் பலவற்றைப் பலர்க்கும் பயன்படும் வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழக நூல் நிலையத்திற்கு இவர்கள் தந்துவிட்டமை குறிப்பிடத் தக்கது. அவர்தம் இல்லத்தில் எஞ்சியிருந்த சுவடிகளை (51) அவருடைய புதல்வர் வித்துவான் இராமானுஜையங்கார் சில திங்களுக்குமுன் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

பழைய சுவடிகளைக் காகிதத்தில் பிரதி செய்து இவர் படித்ததும் உண்டு. இராமநாதபுரத்தில் உள்ள அவர் மாளிகைக்கு நான் சென்றிருந்த போது மகாவித்துவான் அவர்களால் எழுதிப் பெற்ற நீலகேசி உரையுடன் கூடிய கையெழுத்துப் பிரதியை அவர்

மகனார் காட்டினார். சமணசமயம் சார்ந்த தத்துவக் கருத்துகள் மிகுந்த இந்நூலையும் உரையையும் பிரதிசெய்து படித்தமையை நோக்கினால் சமயக் காழ்ப்பின்றித் தமிழ்நலம் பேணுவதொன்றே இவர்தம் நோக்கமாயிருந்தது என்பது தெரியவரும்.

சோழமன்னர் விக்கிரமன், குலோத்துங்கன், இராசராசன் என்னும் மூவர் அவையிலும் கவிராட்சசன் என்னும் புகழுடைய ஒட்டக்கூத்தர் தலைமைப் புலவராய்ச் சிறந்து விளங்கினார். அதுபோலவே இராகவையங்கார் அவர்களும் பாஸ்கர சேதுபதி, முத்துராமலிங்க ராசராசேசுவர சேதுபதி, சண்முக ராசேசுவர நாகநாத சேதுபதி ஆகியோர் காலத்திலும் தொடர்ந்து சேது சமத்தான மகாவித்துவானாயிருந்தார். தந்தை, மகன், பேரன் மூவரும் நம் மகாவித்துவானிடம் பெரும் மதிப்பு வைத்துப் போற்றிவந்தனர்.

"இன்பாற் கரனா ரிராசரா சேச்சுரச்சேய்
தென்னாக நாதவர சேதுபதி — மன்னரிவர்
வீறுமே வன்ன மிசையாதே லென்னாவே
கூறுமே பாரி கொடை"

எனத் தாம் செய்த பாரிகாதைக் காவியத்தில் தம்மைப் புரந்த சேதுபதிகள் மூவரையும் நன்றியுடன் போற்றியுள்ளமை காணலாம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 13ஆம் ஆண்டு விழாவில் இவர் 'சேதுநாடும் தமிழும்' என்னும் ஆய்வுரை தனிநூலாகச் சங்கத்தின் வழி வெளியிடப்பட்டுள்ளது. இராசராச சேதுபதியவர்களின் தூண்டுதலால் 'வஞ்சிமா நகரம்' என்னும் ஆராய்ச்சி நூலை ஆக்கி வெளியிட்டார். செந்தமிழில் தாம் எழுதிவந்த சங்ககாலப் பெண்புலவர்களின் வரலாற்றைத் தொகுத்து 'நல்லிசைப் புலமை மெல்லியலார்' என்னும் பெயரில் வெளியிட்டார். பிற்குறித்த இருநூல்களும் அந்நாளில் கல்லூரி மாணவர்களுக்குப் பாடப்புத்தகமாயும் அமைக்கப்பெற்ற சிறப்புக்குரியனவாகும்.

அவ்வப்போது பாட்டுநூல்கள் பலவும் இவர் ஆக்கி வெளியிட்டார். அவற்றுள் புவி எழுபது, தொழிற்சிறப்பு, திருவடி மாலை, சீராமநாமப்பாட்டு என்பவை குறிப்பிடத்தக்கன. 'இராசராசேசுவர சேதுபதி ஒருதுறைக் கோவை' ஒரு சிறந்த படைப்பாகும். அவ்வப்போது இவர் பாடிய தனிப்பாடல்களும் பலவாகும்.

சென்னை, மதுரை, தஞ்சை முதலிய இடங்களில் நடைபெற்ற தமிழ் விழாக்களில் கலந்து கொண்டு தலைமை வகித்தும் சொற்பொழிவாற்றியும் அவையோரை மகிழ்வித்து வந்தார். வடமொழியிலும் வல்ல இவர் இருமொழி நூல்களிலும் இனிய பகுதிகளை எடுத்துக்காட்டிச் சொற்பொழிவாற்றும் முறை கேட்போரைக் கவரவல்லதாயிருந்தது. இவருடைய அரிய பெரிய பொருள் நயமிக்க சொற்பொழிவுகளைக் கேட்பதன் பொருட்டுப் பெருந்திரளாகத் தமிழறிஞர் கூடுவது வழக்கமாயிருந்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் கம்பராமாயணம் பற்றியும்வேறு சில பொருள்கள் பற்றியும் அரிய உரைகள் பன்முறை நிகழ்த்தியுள்ளார். சென்னை நகரிலுள்ள அறிஞர் பெருமக்கள் பலரும் இவருடைய சொற்பொழிவுக்கு வந்திருந்து கேட்டு இன்புற்றனர். இவர்களுள், மகாகனம் சீநிவாச சாத்திரியார், சர். எஸ். வரதாச்சாரியர், டாக்டர் உ.வே. சாமிநாதையர் முதலிய சிறந்த பேரறிவாளரும் வந்து கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இவருடைய வாக்குவன்மை அறிஞர் பெருமக்களையும் பிறரையும் எவ்வாறு கவர்ந்தது என்பதற்கு இந் நிகழ்ச்சி தக்க எடுத்துக்காட்டாகும்.

வடமொழிநூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தும் உள்ளார். பகவத்கீதை முழுமையும் தாழிசைப்பாக்களில் மூல நூலின் சொற்பொருளமைதி பிறழாவண்ணம் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் இன்னும் அச்சாகவில்லை. இக்கீதைத் தாழிசை குறித்து விரிவுரைகளும் சென்னை முதலிய இடங்களில் ஆற்றினார். மகாகனம் வி. எஸ். சீநிவாச சாத்திரியார் அவர்களின் வேண்டுதலால் காளிதாச மகாகவியின் சாகுந்தலத்தைப் பாட்டும் உரையும் கலந்த நடையில் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். வடமொழிச் சுலோகத்திற்குச் சந்தப் பாடலும் வடமொழியிலும் பாகதத்திலும் உள்ள உரைநடைக்குத் தமிழுரை நடையுமாக அமைத்துள்ளார். இம் மொழிபெயர்ப்பு நூல் வி. எஸ். சீநிவாச சாத்திரியார் அவர்களுடைய பொருளுதவியால் 1938–இல் பதிப்பிக்கப் பெற்றது. வால்மீகி இராமாயணத்தில் சில பகுதிகளையும் இரகுவமிசத்தில் சில சருக்கங்களையும் இவர் தமிழாக்கம் செய்துள்ளார். வியாச பாரதத்திலுள்ள நீதிப் பகுதிகளை வெண்பாவில் அமைத்து 203 பாடல்களில் 'பாரத நீதி வெண்பா' என்னும் ஓர் அறநூலையும் ஆக்கியுள்ளார். வடமொழி நூல் மொழி பெயர்ப்புத் தொண்டினைச் சிறப்பிக்கு முகத்தான் இவருக்கு 'பாஷா கவிசேகரர்' என்னும் விருதை அறிஞர் பேரவை கூட்டி மகிழ்ந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1935 ஆம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சித்துறை என ஒரு தனிப்பகுதி தோற்றுவிக்கப் பட்டது. இத் துறையில் முதன்மை ஆராய்ச்சியாளராக மகா வித்துவான் ஐயங்கார் அவர்களை அழைத்தனர். தம்முடைய 65 ஆம் வயதில் இப்பதவியை ஏற்று 1941 வரை ஆறு ஆண்டுகள் இங்கே பெருந்தொண்டாற்றினார். ஆராய்ச்சித்துறைப் பணி களோடு முதுகலை மாணவர்களுக்குக் கற்பித்தும் வந்தார். ஐயங்கார் அவர்களின் பெரும்புலமையும் வாக்குவன்மையும் போதனாமுறையும் மாணவர்களைப் பெரிதும் ஈர்த்தன. மாணவர்கள் இவரிடம் பாடம் கேட்டலைப் பெரும் பேறாகக் கருதினா .

'பாரிகதை' என்பது இவர் ஆக்கிய தமிழ்க் காவியம். இக் காவியம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் அரங்கேற்றம் செய்விக்கப் பெற்றது. இதுவே அப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ் வெளியீடாக 1937-ல் வெளியிடப்பெற்றது. அடுத்து இவர் எழுதிய 'தமிழ் வரலாறு' இரண்டாவது வெளியீடாக 1941-ல் வெளிவந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழக முதுகலை மாணவர்க்குக் குறுந்தொகையைப் பாடம் சொன்ன போது நல்லபல பாடங்களும் புதிய பொருள்களும் இவர்கள் கண்டார்கள். தாம் கண்ட புதுவிளக்கங்கள் அமையக் குறுந் தொகை உரை நூலை இவர் ஆக்கினார். இதில் 112 பாடல்களை உரையுடன் பின்னாளில் அப் பல்கலைக் கழகம் வெளியிட்டது. எஞ்சிய பகுதிகள் வெளிவராமல் போனது தமிழுக்கு ஒரு பேரிழப்பேயாகும். பத்துப் பாட்டுள் பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை என்னும் இருபெரும் பாடல்களுக்கு ஆராய்ச்சி யுரை எழுதியுள்ளார். தித்தன், கோசர் பற்றி இவர் எழுதிய ஆய்வுரைகளும் தனிநூலாக வந்துள்ளன. இவையெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய போது படைக்கப்பட்டனவாகும்.

1941-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்றபின் மகாவித்துவான் அவர்கள் இராமநாதபுரத்தில் உள்ள தம் இல்லத்தில் வாழ்ந்து வந்தார்கள். இவர் தம் அருமைப் புதல்வராகிய வித்துவான் ரா. இராமாநுஜையங்கார் தந்தையாரின் பெருமைகளை அறிந்தவராதலின் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்துவரலாயினர். ... பார்வைக் குறைவாலும் உடல் தளர்வாலும் மகாவித்துவான்

அவர்கள் வெளியூர்களுக்குச் செல்வதை நிறுத்திவிட்டார். தம்மை அடுத்துவந்து கேட்டவர்களின் ஐயங்களைப் போக்கி வந்தார். இடையிடையே சேதுபதிகளைக் கண்டு அளவளாவியும் வரலாயினர்.

இவ்வாறாகத் தம் ஆயுட்காலம் முழுமையும் தமிழைக் கற்றும் கற்பித்தும் பெருந்தொண்டாற்றிய இவர், என்றும் நிலைத்து வாழும் பாடல் நூல்களையும், உரைநடை நூல்களையும் ஆக்கியளித்துப் பெரும் புகழை நிலைநாட்டியவர். இத்தகு பெருமைபடைத்த மகாவித்துவான் அவர்களின் மறைவு வியய ஆண்டு ஆனி மாதம் 2ஆம் நாள் வியாழக்கிழமையன்று (11-7-1946) நிகழ்ந்தது. அப்பொழுது அவர்களுடன் பழகிய பேராசிரியர்களும் கவிஞர்களும் பிறரும் அவர்களுடைய மறைவு குறித்து இரங்கி எழுதிய உரைகளும் பாடல்களும் பலவாகும். மகாவித்துவான் அவர்கள் முதல் ஆசிரியராய் விளங்கி வெளியிட்ட செந்தமிழ்ப் பத்திரிகையின் அந்த ஆண்டு ஆனிமாத இதழை மகாவித்துவான் அவர்களின் நினைவு இதழாக வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

சிறந்த நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், பத்திராசிரியர், பதிப்பாசிரியர், ஆராய்ச்சியாளர், சொற்பொழிவாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், சமயநூலறிஞர், மொழிநூலறிஞர் என்று இத் திறத்தாருள் எல்லாம் முன் எண்ணத்தக்கவராய் விளங்கியவர் மகாவித்துவான் அவர்களாவர்.

மகாவித்துவான் படைப்புகள்

பதிப்பு நூல்கள் (15)

(அ) சங்க நூல்கள் (4)

அகநானூறு	1901, 1921
குறுந்தொகை விளக்கம்	1946
பெரும்பாணாற்றுப்படை	1919
பட்டினப்பாலை	1951

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (4)

இனியவை நாற்பது	பழையவுரையுடன்
ஐந்திணை ஐம்பது	,,
திணைமாலை நூற்றைம்பது	,,
நான்மணிக்கடிகை	,,

(இ) இலக்கண நூல்கள் (3)

நேமிநாதம்—மூலமும் உரையும்	1903
பன்னிரு பாட்டியல்	
தொல்காப்பியம் : செய்யுளியல் நச்சினார்க்கினியருரை	1917

(ஈ) பிற நூல்கள் (4)

கனா நூல்
திருநூற்றந்தாதி
புலவராற்றுப்படை
முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்

ஆசிரியர் இயற்றிய நூல்கள் (22)

(அ) செய்யுள் நூல்கள் (6)

புலி எழுபது	1927
தொழிற் சிறப்பு	1932
திருவடிமாலை	1933

நன்றியில் திரு.
பாரிகாதை 1937
இராசராச சேதுபதி ஒருதுறைக்கோவை 1983

(ஆ) உரைநடை நூல்கள் (7)

சேதுநாடும் தமிழும் 1924
வஞ்சிமாநகர் (1918) 1932
நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்
அண்டகோள மெய்ப்பொருள்
தமிழ் வரலாறு 1941
தித்தன் 1949
கோசர் 1951

(இ) மொழிபெயர்ப்பு (1)

அபிஜ்ஞான சாகுந்தலம் 1938

(ஈ) அச்சிடப்படாத நூல்கள் (7)

பகவத்கீதைத் தாழிசை
பாரத நீதி வெண்பா
காவல் தலைமை
கடவுள் மாலை
திருப்புல்லை யமகவந்தாதி—உரையுடன்
திருவேங்கட மாயோன் மாலை
பல்லட சதகம்

ஆத்திசூடி

கடவுள்வாழ்த்து

"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே"

1. அறம்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயமிட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகம் சுருக்கேல்.
14. கண்டுஒன்று சொல்லேல்.
15. ஙப்போல் வளை.
16. சனிநீர் ஆடு.
17. ஞயம்பட உரை.
18. இடம்பட வீடுஇடேல்.
19. இணக்கம்அறிந்து இணங்கு.
20. தந்தைதாய்ப் பேண்.
21. நன்றி மறவேல்.
22. பருவத்தே பயிர்செய்.
23. மன்றுபறித்து உண்ணேல்.

24. இயல்புஅலாதன செயேல்.
25. அரவம் ஆட்டேல்.
26. இலவம்பஞ்சில் கிட.
27. வஞ்சகம் பேசேல்.
28. அழகுஅலாதன செயேல்.
29. இளமையில் கல்.
30. அறனை மறவேல்.
31. அனந்தல் ஆடேல்.
32. கடிவது மற.
33. காப்பது விரதம்.
34. கிழமைப்பட வாழ்.
35. கீழ்மை அகற்று.
36. குணமது கைவிடேல்.
37. கூடிப் பிரியேல்.
38. கெடுப்பது ஒழி.
39. கேள்வி முயல்.
40. கைவினை கரவேல்.
41. கொள்ளை விரும்பேல்.
42. கோதுஆட்டு ஒழி.
43. கௌவை அகற்று.
44. சக்கர நெறிநில்.
45. சான்றோர் இனத்துஇரு.
46. சித்திரம் பேசேல்.
47. சீர்மை மறவேல்.
48. சுளிக்கச் சொல்லேல்.
49. சூது விரும்பேல்.
50. செய்வினை திருந்தச்செய்.
51. சேரிடம் அறிந்துசேர்.
52. 'சை'எனத் திரியேல்.
53. சொற்சோர்வு படேல்.
54. சோம்பித் திரியேல்.
55. தக்கோன் எனத்திரி.
56. தானம்இட விரும்பு.
57. திருமாலுக்கு அடிமைசெய்.
58. தீவினை அகற்று.
59. துன்பத்திற்கு இடம்கொடேல்.

60. தூக்கி வினைசெய்.
61. தெய்வம் இகழேல்.
62. தேயத்தோடு ஒத்துவாழ்
63. தையல்சொல் கேளேல்.
64. தொன்மை மறவேல்.
65. தோற்பன தொடரேல்.
66. நன்மை கடைப்பிடி.
67. நாடுஒப்பன செய்.
68. நிலையில் பிரியேல்.
69. நீர்விளை யாடேல்.
70. நுண்மை நுவலேல்.
71. நூல்பல கல்.
72. நெற்பயிர் விளை.
73. நேர்பட ஒழுகு.
74. நைவினை நணுகேல்.
75. நொய்ய உரையேல்.
76. நோய்க்கு இடம்கொடேல்.
77. பழிப்பன பகரேல்.
78. பாம்பொடு பழகேல்.
79. பிழைபடச் சொல்லேல்.
80. பீடுபெற நில்.
81. புகழ்பட வாழ்.
82. பூமி விரும்பு.
83. பெரியாரைத் துணைக்கொள்.
84. பேதைமை அகற்று.
85. பைதலோடு இணங்கேல்.
86. பொருள்தனைப் போற்றிவாழ்.
87. போர்த்தொழில் புரியேல்.
88. மனம்தடு மாறேல்.
89. மாற்றானுக்கு இடம்கொடேல்.
90. மிகைபடச் சொல்லேல்.
91. மீதூண் விரும்பேல்.
92. முனைமுகத்து நில்லேல்.
93. மூர்க்கரோடு இணங்கேல்.
94. மெல்லில்நல்லாள் தோள்சேர்.
95. மேன்மக்கள் சொல்கேள்.

96. மைவிழியார் மனைஅகல்.
97. மொழிவது அறமொழி.
98. மோகத்தை முனி.
99. வல்லமை பேசேல்.
100. வாதுமுற் கூறேல்.
101. வித்தை விரும்பு.
102. வீடுபெற நில்.
103. அம்ம வுத்தமனாய் இரு.
104. அம்ம வூருடன் கூடிவாழ்.
105. வெட்டெனப் பேசேல்.
106. வேண்டி வினைசெயேல்.
107. வைகறைத் தொழுதுஎழு.
108. அம்ம வொன்னாரைத் தேறேல்.
109. அம்ம வோர்ந்து வழிபோ.

ஆ த் தி சூ டி யு ரை

உரைப்பாயிரம்

'அருள்வடி வாகி யனைத்தையு நிறைந்த
தனாஅது கடவுட் டகைமைக் கியைய
வொருபெரு வீடு மருவுபல் லுலகமுங்
காவா வுவக்குந் தாவா விழுப்புகழ்த்
தன்க ணொடுங்கித் தழைப்பன யாவுமென்
றுணர்தரக் கொப்பூ ழொளிர்மல ரவிழ்க்கு
முழுமுதற் பொருளின் விழுமிய வுயிர்ப்பென
வம்முத லருள்பெறூஉஞ் செம்மலோர் நெஞ்சின்
மெய்யாக் கண்ட செய்யா மொழியென
வழிவழி யாக வழியா முறையி
னாற்றல் கேள்வியிற் றோற்றம் வாய்ந்து
வளமையிற் குன்றா வளவையிற் றலையென
முத்திறக் குணப்படு மெத்திறத் தவரு
மவரவ ரியல்பிற் கமையப் பயன்கொளும்
வற்றா வறிவுநீர் முற்றுநீ டடமென
வந்தணர் காவலிற் றந்துமுன் வைத்த
மருத்து மரமெனப் பொருத்தப நிலவுந்
தெய்வநான் மறையுயி ருய்வதற் குரைத்தன
வுறுதிப் பொருள்க ளொருநான் கவைதா
மறம்பொரு ளின்ப மரும்பெறல் வீடென
வழங்கிய விலக்கண வகையா னவற்றிய
லறிவுறுத் தியநூ லறநூல் பொருணூ
லின்பநூல் வீட்டுநூ லெனப்பெயர் பெறுமே''

அவற்றுள் அறநூ லொன்றே, காவற் சாகாடுகைக்கும் அரசர்க்கே யுரிய பொருணூலும் காமங்கண்ணிய இளையர்க்கே யுரிய இன்பநூலும் குற்றமில் மனத்து முற்றத் துறந்த முமுக்ஷர்களுக்கேயுரிய வீட்டு நூலும் போலாது மக்கட் பிறப்பினர் யாருக்கும் அவரவர் சாதிக்கும் நிலைக்குந்தகக் காலமும் இடனும் வாலிதினோக்கிச், செய்வது தவிர்வது கூறுமாற்றா லறத்தையும் அரசியல் கூறுமாற்றாற் பொருளையும் இல்லறத்திற் புருடன் கற்புடை மனையாட்டியுடன் வாழ்வது கூறியல்லாத போகங்களை விலக்கு மாற்றானின்பத்தையும் துறவொழுக்கத்தில் விரதம், ஞானம், நிட்டை முதலியன கூறுமாற்றால் வீடுபேற்றுக்கு வாயிலையும் தன்கட் கொண்ட சிறப்பான் எல்லார்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

இங்ஙனம் வேண்டப்படும் அறநூல்கள் வடமொழியுள் மநு முதலிய மிருதிகள் பதினெட்டுமாம். இப்பதினெண்மிருதியும் இம்மை மறுமைக்கணின்பத்தினையும், வீட்டின்கண் அந்தமில் பேரின்பத்தினையும் எய்தற்குரிய மாந்தர் முறையே தொட்டுச் செந்நெறியினும் விட்டுச் செந்நெறியினும் ஒழுகும் வகைமை பற்றி இல்லொழுக்கம், துறவொழுக்கம் என இரண்டாகப் பகுத்துக் கொண்டு விளக்கி அவ்வவ் வொழுக்கங்கள் தலைநின்றார்க்கின்றியமையாத துப்புரவு, பொருள், இடன், ஏவல் பற்றி யுபகாரப் பட்டு நிற்புழி, ஒவ்வொருவரும் தம்பொருட்டும் பிறர் பொருட்டும் நடந்துகொள்ளும் வழக்குக்கள் இவையென எடுத்துக் காட்டி அவ் வொழுக்கங்களினும் வழக்குக்களினும் வழீஇயினாரைத் தூயராக்கற்கு வாயிலாகிய கழுவாய் வடிவாய தண்டங்களிவையென விதித்துச் செல்வனவாம்.

இவ்வொழுக்கமும், வழக்கும், தண்டமும் அவ்வவ் வருணத்திற்கும் நிலைக்குந் தகப் பஃறிறப்பட்டுநின்று நுண்மாண்நுழைபுலமில்லராகிய பலர்க்குத் தெளிதற் கருமையவாயிருத்தலையும், வழக்குந் தண்டமும் ஒழுக்கத்தினை நிகழ்வித்தற்குபகாரப்படுவனவன்றித் தாமே தனியே பயன்றருவன வல்லவாதலையுங் கண்டு ஒழுக்கமே தலையாய வறப்பகுதி யெனக்கொண்டு, அதுவும் பலபடியாகப் பரந்துகிடத்தலை நோக்கி, அப்பரந்துபட்ட அறப் பகுதியுள் எல்லோர்க்கும் ஒப்பன விவையென்று ஒருநூற்றெட்டறங்களையே யெடுத்து, அவற்றை இல்லறந் துறவறமெனப் பகுத்து இல்வாழ்க்கைக் குரியனவும், அவ்வில்வாழ்வினருள் உலோகபாலருருவாய் நின்று உலகை முறைசெய்து காப்பாற்றும் அரசர்க்குரியனவும், அவ்வரசுள்பட இல்வாழ்க்கையைத் துறந்த

துறவியர்க்குரியனவும், என முத்திறப்படுத்து, ஒவ்வொரறத்தை யும் ஆரிய சூத்திரம் போலச் சில்வகை யெழுத்தின் அளக்கலாகா அரும் பொருளடக்கி நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித் துளக்கலாகாத் துணை யெய்த யாத்த சூத்திரமாக்கி நிறுவி, அங்ஙனமாக்கிய சூத்திரப் பொருட்டொடர் தாம் நிறுவிய முறையினின்று தடுமாறாமைப் பொருட்டு எழுத்து வருக்கப் படியே கோத்து, இத்தமிழ்கூறு நல்லுலகத்தின்கண் உரவோரும் மடவோரும் இவ்வறம் மறவாமல போற்றி யொழுகக் கருதித் தெய்வப்புலமைச் சீர்சால் ஔவையாரான் அருளிச் செய்யப் பட்டதிந்நூலென வுணர்க. எழுத்து வருக்கமுறையே செய்யுட் செய்தலும் பண்டை வழக்கென்பது தேவாரத்துச் சித்தத் தொகைத் திருக்குறுந்தொகையானும், பின்னுள்ளோர் வருக்கக் கோவையானுமுணர்க.

இவர் பண்டையோர் அறநூலோடொப்ப அறம் பொருள் இன்பம் வீடென்று நான்கினையுந் தந்நூலுட்டொகுத்துணர்த்து வாறெடுத்துக் கொண்டு ''அறஞ்செய விரும்பு'' முதலாகப் ''புகழ்பட வாழ்'' இறுதியாகவுள்ள சூத்திரங்களாற் பெரும் யான்மை யெல்லார்க்கும் ஒத்த அறமும் ''பூமி விரும்பு'' முதலாக ''மொழிவ தறமொழி'' இறுதியாகவுள்ள சூத்திரங்களான் இராச தருமமாகிய பொருளும், இதன்கண் ''மெல்லினல்லா டோள்சேர்'' என்பதனாற் கற்புடை மனையாட்டியுடன் வாழ்தலை விதித்து ''மைவிழியார் மனையகல்'' என்பதனாலல்லாதார் போகத்தை விலக்கிய வாற்றான் இன்பமும், ''மோகத்தை முனி'' முதலாக ''ஓர்ந்து வழிபோ'' இறுதியாகவுள்ள சூத்திரங்களாற் றுறவறங் கூறி, வீட்டிற்கு வாயில் காட்டியவாற்றான் வீடும் விளக்கிச் செல்லுதற் கண்டுகொள்க.

பிரமசரியம் உபகுருவாணனிலையாயின் இல்லறத்துக்கும், நைட்டிகனிலையாயின் துறவுக்கும் வானப்பிரத்தம் துறவுக்கும் உபகாரப்படுமாற்றான் அவ்விரண்டனையும் வேறுபிரித்துக் கூறாராயினாரென வுணர்க. முப்பான் மொழிந்த முதற் பாவலரும் பண்டை யறநூல்களினின்று இவரைப்போல ஒரு

நூற்றெட்டறமே வேண்டுதல் இன்பப்பகுதிக்குரிய இருபதைந்து அதிகாரங்களை வேறு பிரித்தெண்ணித் தெளிந்துகொள்க. அவர் இவர்போல் அந்நூற்றெட்டனுள் அறமும் பொருளுமேயல் லாமல் வாழ்க்கைத் துணைநலத்தாற் கற்புடையாட்டியுடன் வாழ்தலை விதித்து 'வரைவின் மகளிர்' என்பதனால் அல்லாதார்

போகத்தை விலக்கி யின்பப்பகுதி யோம்புதலும், விரதஞானங் களான் வீட்டிற்கு வாயில் கூறுதலும் கண்டுகொள்க. இவ்வாறு நால்வகை யுறுதிப் பொருள்களையும் செவ்வனாடியிற் செறித் தினிதடக்கித் திட்ப நுட்பஞ் சிறந்த இருசீரோரடிச் செந் தமிழ்ச் சூத்திரங்களாற் றெருட்டப் புக்க ஆசிரியர் தாமெடுத்துக் கொண்ட அறநூலினிது முடிதற் பொருட்டுக் கடவுள்வாழ்த்துப் புகன்றது 'ஆத்தி சூடி'யென்னும் வெண்செந்துறைச் செய்யுளென வுணர்க. இம்முதல் பற்றியே இவ்வறநூல் 'ஆத்திசூடி' யென வழங்கலாயிற்று. இரு சீரோரடியாற் சூத்திரஞ் செய்தல் தொன்று தொட்ட சான்றோர் வழக்கென்ப. தொல்காப்பி யனார் "நன்று பெரிதாகும்" எனச் சூத்திரித்தவாற்றானினி துணரலாகும்.

இனிக்கடவுள் வாழ்த்துச் செய்யுள் வருமாறு :—

"ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோம் யாமே"

என்பது. ஆசிரியர் தாமெடுத்துக் கொண்ட அறநூல்களுக்கேற் புடைத்தாக அறங்களை எல்லாம் வடிவாகவுடையவனும், அறங் களின் பயனாகவுள்ளவனும், அறநிலைத் தளரும் போதெல்லாம் அதனை இனிது நிறுத்த அவதரிப்பவனும் ஆகிய முழுமுதற் கடவுளை மனமொழி மெய்களான் வழிபடுவது கூறியது இஃதென்க.

இதன்பொருள் : திருவாத்திப்பூவாலாகிய கண்ணியை முடியிற்றரித்த சிவபிரான் உள்ளத்தா லன்புசெய் கடவுளை யாம் நெஞ்சானேத்தியும் வாயானேத்தியும் காயத்தாற் றொழுதலைச் செய்வோம் என்றவாறு.

ஆத்தி—இருமடியாகுபெயர். சூடுதல் வினையாற் கண்ணி யென்பதும் முடியென்பதும் பெறப்பட்டன. "கண்ணி கார்நறுங் கொன்றை" (புறம். 1)என்று கொன்றையைக் கூறாது திருவாத்தி யையே கூறினார்: கெடலரு நல்லிசை யுறந்தை யகத்து அறங் கூறவையகம் இரீஇய கொற்றச் சோழர்க்கும் அதுவே சூடுங் கண்ணியாதற் சிறப்பானென்க. "ஆரங் கண்ணி யடுபோர்ச் சோழ ரறங்கெழு நல்லவை யுறந்தை" (அகம். 93) எனவும் "மறங்கெழு சோழருறந்தை—யவையத் தறநின்று நிலையிற்றா கலின்" (புறம். 39) எனவும், "மறங்கெழுசோழ ருறந்தை யவையத் தறங்கெட வறியா தாங்கு" (நற்றிணை.400) எனவும்

''அறந்துஞ் சுறந்தை'' எனவும் வருவனபற்றி இதனுண்மை யுணரப்படும். சூடி-பெயர்; ''மதிசூடி தன்னொடும்'' என்புழி போலச் சூடி எச்சமன்றென்பது ஆத்திசூடி என்னும் முதல் பற்றி நூற்குப் பெயராயவாற்றானுந் தேறப்படும். எச்சச் சொல் பற்றி நூற்கேனுஞ் செய்யுட்கேனும் பெயரெய்தாமை மலைபடு கடாம், பதிற்றுப்பத்து முதலிய பண்டையோர் நூல்களிற் கண்டு கொள்க. ''அமர்தன் மேவல்'', ''நம்புமேவு நசையாகும்மே'' என்பன தொல்காப்பியமாதலின் அமர்ந்த – அன்பு செய்த என்றாம். ''அமர்ந்த மாயோனை முக்கணம்மானை நான்முகனை யமர்ந்தேனே'' (திருவாய்மொழி 8. 4. 10) எனப்பெரியார் பணிப்பதுங் காண்க.

''அமரரா னமரப் படுவானை'' எனத் தேவாரத்தும் வந்தது. இங்ஙனம் தேவரான் அமரப்படும் மகாதேவன் அமர்ந்த தேவன் என இறைவன் முதன்மை குறித்தவாறு. எல்லாரும் அன்பு செய்த சிவபிரானும் அன்பு செய்த தேவனென்று இறைவன் முழு முதன்மை காட்டியவாறு. கல்வியிற் பெரிய கம்பநாடரும், ''தவனுணங்கியரும் வேதத்தலைவரு முணருந் தன்மைச், சிவனு ணர்ந்தலரின் மேலைத் திசைமுக னுணருந்தேவன்'' என இறை வனை இவ்வாறே கூறுதலாற் றெரிந்து கொள்க. 'அமர்ந்த தேவனை' யென்றது அன்புசெய்தது தனக்குந் தேவனா யிருத்தல் கருதியென அன்பு செய்தற் காரணமும் உடம்பொடு புணர்த் தலுத்தியாற் கூறியவாறு. ''ஷிவனகொ நாராயண'' என்பது மறைமுடிபாதல் காண்க. ''யாது மநு மொழிந்தது அது மருந்து'' என்று வேதமும் ஓதுஞ் சிறப்புடைய மநுநூல் பரம்பொருளை நாராயணனென்னும் பெயராற் கூறிச் செல்லுதலும், இவ்வாறே அறநூற் பொருண்மை தொகுத்துரைத்த தெய்வப் புலவர் திருவள்ளுவனார் ''யானென தென்னுஞ் செருக்கறுப்பான் புகும் வீடு வானோர்க் குயர்ந்த வுலகு'' எனவும், அந்நிரதிசய வின்ப வுலகு 'தாமரைக்கண்ணானுலகு' எனவும் இக்கருத்து புலப் படுத்திப் போதலும் இவற்றொடு பொருந்த அறவுரை கூறப் புக்க இவ்வாசிரியர் இந்நூலுள் ''திருமாலுக் கடிமைசெய்'' என ஐயந் திரிபற விதித்தலும் ஈண்டைக்கேற்ப நோக்கியுண்மை யுணர்ந்து கொள்க.

இங்ஙனம் பொருள் கொள்ளாக்கால் காப்பு ஒருமதமும் நூலொரு மதமுமாய்த் தம்முண் முரணுதலொருதலை யென்க. மற்று, ஆத்திசூடியை முன்னினைந்தது ''ஆல நீழற்கீ ழறநெறியை நால்வர்க்கு மேலை யுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்

(நான்முகன் திருவந்தாதி) எனவும், ''அறங்காட்டி யந்தணர்க் கன்றாலநீழ லறமருளிச் செய்த வரனார் (தேவாரம்) எனவும் கூறியவாறு அறநெறியருளிச் செய்த பரம குருவாதற் சிறப்பா னெனவறிக. ஆத்திசூடி யமர்ந்ததேவன் என்றது அறமருளிச் செய்த முதற் குரவனையும், அம்முதற் குரவன் விரும்பிய தேவனை யும் நினைந்தவாறாம். நெஞ்சானும் வாயானும் பராவி யென்பார் 'ஏத்தியேத்தி' எனவிருகாற் கூறினார். நெஞ்சத் தானேத்தலாவது உள்ளத்தாலவன் பொருள்சேர் புகழையும் பெயர்களையும் நன்கு மதித்துருகி அநுசந்தானஞ்செய்தல். ''பூம்பாடகத்து விருந்தானையேத்துமென் னெஞ்சு, என்றுமெப் போது மென்னெஞ்சந் துதிப்ப வுள்ளே யிருக்கின்ற பிரான்...'' (திருவாய்மொழி 7. 10. 6) என வரும் பெரியார் திருவாக்கு களாலிது துணியப்படும். ''இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின்'' என்பதனால் உள்ளத்தாலிகழ்தலுடன்பட்ட திருவள்ளுவனா ருக்கு உள்ளத்தாற் புகழ்தலுமுடன்பாடாமென்று உய்த்துணரப் படும். தொழுதல் வினையாற் காயம் என்பது போந்தது. அறவுரை கூறப்புக்க தம்மொடு கேட்கப்புக்க மாணாக்கனையு முளப்படுத்தி யதாம் என்றார். ஏ—அசை.

நூல்

1. அறஞ்செய விரும்பு

இவ்வற நூல் கேட்டற்கும், கேட்டவாறு அறஞ்செய்தற்கும் உரிய அதிகாரிக்கு இன்றியமையாது வேண்டிய விசேடணம் அவ்வறத்தின்கண் விருப்பமே யாதலான் முதற்கண் அஃதுண் டாகுக என்கின்றது இஃதென்க.

இதன்பொருள்: நீ அறஞ்செய்தற் பொருட்டு அறத்தை யன்பு செய்வாய் என்றவாறு.

இஃது இம்மைக்கு உறுதியாகப் பொருளை விரும்புவாரே பொருள் செய்வாராதல் போல, மறுமைக்கு உறுதியாக அறம் விரும்புவாரே அறஞ்செய்வார் என்னுங் கருத்தாற் கூறப்பட்டது.

விரும்புதல்—அன்புசெய்தல். ''விரும்பறாச்சுற்றம்'' (குறள் 522) என்புழிக் காண்க. ''அறனாக்கம் வேண்டாதான்'' (குறள் 163) என்றார்க்கு இம்மைக்குறுதியாகப் பொருளும் மறுமைக்குறுதியாக அறமும் ஒருவனால் விரும்பத்தக்கன என்பதே கருத்தாதலுணர்க.

உயிர்கட்கு அறஞ்செய்தலின் மேம்பட்ட ஆக்கமில்லை யாதலானும் அதனை விரும்பாமையின் மேம்பட்ட கேடில்லை யாதலானும் ஆக்கமேயெய்திக் கேடெய்தாது வாழ்தற் பொருட்டுச் 'செய விரும்பு' எனக் கூறினார். இஃது,

''அறத்தினூங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு'' (குறள். 32)

என்பதன் பொருண் முழுதையுந் தழீஇ வந்தது காண்க. பரிமேலழகரும் ''அறத்தினூங்கு'' என்பதற்கு 'அறஞ் செய்தலின் மேம்பட்ட' எனவுரைத்ததையு நோக்கிக் கொள்க. விரும்பாமை, விரும்புதல் காரணமாகவே மறத்தல், மறவாமை யுண்டாதலுய்த்துணர்ந்து கொள்க.

அறமென்பது மனம் வாக்குக் காயங்களாற் புரியப்படும் நற் சிந்தையும், நற்சொல்லும், நற்செயலுமாம். அறத்தை நல்ல தென்றும் நன்றென்றும் கூறுவதூஉ மிக்கருத்துப் பற்றியேயாம்.

''நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின்'' (புறம். 195)

'நன்றி மறப்பது நன்றன்று' என்றார் பிறரும் (குறள்.108). ''அச்சமே கீழ்கள தாசாரம்'' (குறள்.1075) என்பதனாற் கீழ் மக்கள் தெய்வத்தானும், வேந்தானும், உயர்ந்தோரானும், பிறரானும் உண்டாம் அச்சங் காரணமாகவும் பொருள் காரண மாகவும் வேறுசிலர் புகழ்காரணமாகவும் அறப்பகுதியோம் புவராதலின், அத்னான் மறுமைப் பயனெய்தாமையான் அஃதெய்துவார்க்கு அவ்வறத்தின்கண் விருப்பமின்றி யமையாமை யான் 'விரும்பு' என்றார். வடநூலாரும், 'தர்மயே ஜ்ஞாஸ' என்பதனாற் றருமத்தையுணரும் விருப்பத்தையே முற்பட வைத்தோதினார். அஃதன்றியும்,

''மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற'' (குறள். 34)

என்று காரணகாரியவொற்றுமையான் மனத்தூய்மையே அறமென்றாராதலானும் இவரும் அவரவருள்ளத்துண்டாந் தூய விருப்பமே அறஞ்செய்தற்குக் காரணமாகக் கூறினார்.

''உள்ளறிந்து சேர்தற் பொருள தறநெறி'
(நான்மணி. 50) என்று பிறருங் கூறுதல் காண்க.

'நல்லது செய்த லாற்றீ ராயினும்' என்பதனால் அறஞ்செய வியலாதா ருண்டென்று புலனாகும். அங்ஙனமியலாதார்க்கும் அவ்வறத்தை விரும்புதலியலுமாதலின் 'விரும்பு' என்றார். இவ்வற விருப்பம் பின் அறத்தைச் செய்வித்தலேயன்றி மறத்தைச் செய்யாமையும் பண்ணுமென்றுணர்க.

பொருள் செய்யவும் இன்பஞ்செய்யவும் விரும்புமொருவனை நோக்கி, முதற்கண் அறஞ்செய விரும்பு என்றார். அறத்தா நீட்டுவதே பொருளும் அறத்தான் வருவதேயின்பமும் ஆதலான் இனி, ''இன்பம் விழையான் வினைவிழைவான், (குறள். 615) என்பது போல அறவினையானாலும் இன்பத்தை விரும்பாமல் அதனை செய்தற் பொருட்டு விரும்புக என்று கொண்டு நிஷ்காமியமாகத் தருமம் செய்தலே ஒருவன் விரும்பவேண்டுவது என்று கருதினாரெனினுமமையும். ''தன்னோடு செல்வது வேண்டி னறஞ்செய்க'' என்பதனால் ஒருவர்க்கு உடம்பு பொருள் முதலியன அழிந்தபோதும் அழியாது உடனிகழ்ந்தின்புறுத்துவது அறமொன்றுமே யாதலான் நிலையில்லன கொண்டு நிலைத்த அறஞ்செய்தற்கு அன்பு செய் என்றாரென்க. 'திறம்பு காலத்தி யாவையுஞ் சிதையினுஞ் சிதையாவறம்' என்றார் கல்வியிற் பெரிய கம்பரும்.

அறம் என்பதனையே மங்கலமாக இவ்வறநூன்முகத்து வைத்தோதினார், எல்லா மங்கலங்களும் அறமுள்வழியுண்டாய், அஃதில்வழி யில்லையாதற் சிறப்பான். அன்றியும், ''வருத்தமில்லா மங்கலச் சொல்லே'' (பிங்கலம்) என்றார்க்கும் துன்புறு சொற் புணர்தலின்றி இன்புறு சொற் புணர்ப்பதே உடன்பாடாகக் கொள்க. அறம் துன்ப நீக்கத்துக்கும் இன்பம் உண்டாதற்கும் காரணமாதலான், இன்புறு சொல்களுட் சிறந்தயோமென்க. நல்வினை முதலிய சொற்களுமுளவேனும் ஆணெழுத்து, பெண்ணெழுத்து, அலியெழுத்து என முறையே மூவகை யெழுத்தானும் ஆகிய அறம் என்னும் சொல்லையே கூறி இவ்வறம் ஆண், பெண், அலி என்னும் மூவகை மக்களானும் அவரவர்க்கியன்றவாறு செய்யப்படுமென்பது குறிப்பானுய்த்துணர வைத்தார் எனக் கொள்க.

''செய்யா வென்னு முன்னிலை வினைச் சொற்
செய்யென் கிளவி யாகிட னுடைத்தே''

(தொல். சொல். எச். 54)

என்னுஞ் சூத்திரத்தாற் ''காமம் விடுவொன்றோ நாண்விடு'' (குறள். 1247),''என்மெய்தொடு''(கலி.63) என்னு மிடங்களிற் போல, 'விரும்பாய்' என்னும் முன்னிலை யுடன்பாட்டுவினைச் சொல் 'விரும்பு' எனவாயிற்று.மேல், 'உண்', 'ஒழுகு' முதலாக வருவனவற்றுக்கு எல்லாம் இதுவே விதியாகக் கொள்க. ''அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல்(குறள்.33) என்ற திருவள்ளுவரைப் போல இவ்வாசிரியரும் 'அறஞ்செய்' என்றதனான் அறத்தைக் குணமென்னாது வினையென்ற மீமாம்சகர் மதமே இவர்க்குடன்பாடென்று தெளியலாகும். விலக்கிய தொழிலும் அறஞ்செய்தலேயாமென்பது''அறவினை யாதெனிற் கொல்லாமை'' (குறள். 321) என்பதனானறிக. ''மறஞ்செய விரும்பலை'' என்பது இதற்கு வியங்கியப் பொருளாகும்.

இனி, அறமாவது,

''அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கு
இழுக்கா வியன்ற தறம்'' (குறள் 35)

அன்றே;அதனாலிந்நான்கினையும் அறஞ்செயவிரும்புவான் கடிந்தொழுகல் வேண்டி மேனான்கு சூத்திரத்தானுரைக்கின்றார்.

2. ஆறுவது சினம்

இது வெகுளாமை கூறுகின்றது.

வெகுளியென்பது அழுக்காறு, அவா,இன்னாச்சொல் என்னு மிவற்றினுமிக்கு ஒருவன் மனநிலையைத் தடுமாறுவித்து அலைகொலை செய்யும் கொடுமையானுங் குணமென்னுங் குன்றேறி நின்றார்க்கும் ஒரோவழி உண்டாதலானும் தவத்தை யழித்துத் தவத்தினரையழித்து அவரினமென்னும் ஏமப்புணையையுஞ் சுடுதலினானும் ''தீய பிறத்தலதனான் வரும்'' என்பதனான் அறத்துக்கு மாறாகிய தீயனவெல்லாம் உளவாதற்குக் காரணமாதலானும், அறஞ்செய விரும்புமொருவற்கு இதனைப் பரிகரித்த லின்றியமையாமை கருதி முதற்கண் எடுத்துக் கொண்டார்.

''சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு'' (பொருளியல். 51) எனத் தொல்காப்பியனார் சினத்தை அழுக்காற்றின் முன்வைத்த தனையும் பாலைக்கௌதமனார்,

''சினனே காமங் கழிகண் ணோட்டம் அச்சம் பொய்ச்சொ லன்புமிக வுடைமை ஏதறல் கடுமையொடு பிறவுமிவ் வுலகத் தறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்'' (பதிற்றுப்பத்து 22) என்று எல்லாத் தீதினும் இதனையே தலைமையாகவைத்தோதிய தனையும் நோக்கிக் கொள்க. ''எல்லாம் வெகுண்டாமுற்றோன் றாக் கெடும்'' எனப் பிறருங் கூறினார்.

இதன்பொருள் : அறஞ்செய விரும்பு நின்னுள் ஆறக் கடவது சினமாகிய தீ என்றவாறு.

'ஆறுவது' என்பது ஆறக்கடவது என்னும் பொருளில்வந்தது. ''அறிவுடையா ராவதறிவார்'' (குறள் 427) என்புழி, ஆவது என்பது ஆகக்கடவதென்னும் பொருளில் வந்தது போல ஆறக் கடவதென்றார், ''முனியாதார் முன்னியவே செய்யுந் திரு'' (நான்மணி. 38) என்னும் அறப்பயனோக்கி. ஆறுதல்—சுடுதலொ ழிந்தவிதல். 'ஆறுதல்' என்னும் வினையாற் சினமென்பது தீ யென்று கொள்ளவைத்தலானிஃது ஏகதேசவுருவகம், 'மாலை மலருமிந்நோய்'(குறள். 1227), என்பது போல. சினம்—கோபம் நீட்டித்து நிற்பது என்பர் நச்சினார்க்கினியர். ''சினனே நிம்பிரி'' (தொல். பொருள். 245), ''வெஞ்சின மின்மையும்'' (சிறுபாண். 210) என்பவற்றுரையானுணர்க. சினம் முனிவர்க் கும் ஒரோவழி யுண்டாதலான் அஃதில்லறத்தார்கண் உண்டா காமலே ஒழித்தலியலாதென்று கருதி அஃதுண்டாய விடத்து ஆறுவதே ஒருவன் செய்யக்கடவதென்று கூறினார்.

ஒரு பொருளிற் றீப்பற்றிய போதே யதனை அவித்தாலல்லது அத்தீ அப்பொருளைக் கெடுப்பதொருதலையாதல் போலச் சினமும் நின்கணுண்டாய போதே அவித்தாலல்லது அஃதுன் னையே கெடுக்குமென்பது உருவகத்தாலுணர்த்தினார். ''தீ யெச்சம் போலத்தெறும்'' (குறள். 674) என்பதனால் தீச்சிறிது எஞ்சி நின்றாலும் வளர்ந்து கெடுக்குமென்பதும் தீயைச் சிறிதும் எஞ்சாமல் அவிப்பது போலச் சினத்தையும் அவித்தல் செய்யக் கடவதென்பதும் இதனாற் கூறினாராவர்.

இனிக் கரைவாயளவிற் பொங்கித் தன்னுள்ளே யடங்குமியல் பினதாகிய பெருநீரையே ஊழியென்றும் வழங்குதல் போலப் பொங்கித் தன்னுள்ளே யாறு மியல்பினது கோபம் என்றும், அங்ஙனம் ஆறாதது குடிகோள், உறுப்பறை, அலை, கொலை செய்தலாற் பாபமென்றும் வழங்கப் படுமெனினுமமையும். இஃது

''ஆறுவது கோபம் ஆறாதது பாபம்'' என்னும் உலக வழக்கைத் தழீஇ யுரைக்கப்பட்டது.

மற்றுக் ''கதநன்று......மாண்பிலார் முன்னர்'' (சிறு பஞ்சமூலம். 15) எனக் கூறுதலான் இவ்வெகுளியை விலக்காது உடன்படுதலும் உண்டாமெனின், அற்றன்று. தீயார் நன்மை கடைப்பிடிக்குமாறு கருதியும் அத்தீமையினைப் பின்னுப் புரியாமை வேண்டியும் அவர் தீமைக்கட்டமக்குள்ள வெறுப்பினை அவருணர்ந்துய்தலை விரும்பி அவர் முன் வெகுளிக் குறிப்பினைச் செய்க என்றதல்லது இந்நல்லாசிரியர் விலக்கிய ஆறாச்சினத்தைட புரிய உடன்பட்டிலரென்பது இயல்பாகவே தீதாகிய கதம் மாண்ட குணமிலார் முன்பு நன்மை பயப்பதாகும் என இடனோக்கி அது நன்றாமாறு கூறியதனானுய்த்துணரப்படும்.

''சான்றாண்மை தீது'' என்புழியும் இயல்பாகவே நன்றாகிய சான்றாண்மை மாண்பிலார் முன்னர்த் தீது பயப்பதாகும் எனப் பொருள் படுதலையும் நோக்குக. கல்வியிற் பெரியகம்பரும் இக் கருத்தானே, ''முனிவுழி முனிந்து....உயிர்க்கு நல்கு மிறைகெழு வேந்தன்'' எனக்கூறி வேந்தன்இடனோக்கி முனிந்து உயிர்கட் கருளுமாறு விளக்கினார். முன்னுறையரையனாரும் ''ஆறாச் சினத்த னறிவிலன்'' என்பதனால் எனைத்தறிவுடையனேனும் ஆறாத சினமுடையன் அறிவிலனேயாவன் என இழித்தது காண்க.

3. இயல்வது கரவேல்

இஃது அவாவொழிந் தொழுகுமாறு கூறுகின்றது.

கரத்தலாகிய காரியம் அவாவாகிய காரணத்தான் உளதா தலின் காரியத்தை விலக்குமுகத்தாற் காரணத்தை விலக்கிய வாறு. புலாலுண்ணலை விலக்குமுகத்தாற் கொலையினை விலக்குதல் போல இதனையுங் கொள்க. ''எனக்கிது வேண்டு மென்னும் அவாவும்'' (குறள். 360 உரை) என்றார் பரிமேலழ கரும். வெகுளியும் அவாவும், காரியமும் காரணமும் ஆதலொற் றுமையாற் சாரவைத்தார். முன்னுள சினத்துக்கும் பின்வரும் அழுக்காற்றுக்கும் காரணமாதலான் இதனை அவற்றுக்கிடையே வைத்தார் எனவறிக.

இதன்பொருள் : மனமொழி மெய்களானும், பொருளானும் நீ உதவ வல்லுவதனை ஒளியாமலுதவுக என்றவாறு.

ஒருவன் தன்கண்ணும் தனது பொருட்கண்ணும் உளதாம் அவாக் காரணமாகவே கரப்பன் என்பது ''பற்றுள்ள மென்னு மிவறன்மை'' (குறள். 439) எனக் கூறியதனா னுணரப்படும். இயல்வது கரப்பது உயிர்க்கண்மாட்டன்பின்மையானாகும். 'அன்பின்றி யேற்றார்க் கியைவ கரப்பானும்....நிரயத்துச் சென்று விழ்வார்'' என்றார் பிறரும். ''அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்'' (குறள். 72) என்பதனால் அவரதவாவலி உணரப் படும். ''கரப்பிலார்''(குறள்: 1055)என்பதற்குப் பரிமேலழகர் 'உள்ளது கரவாது கொடுப்பார்' என்றும் பொருள் கூறியது நோக்கி,யாமும் கரவேல் என்பதற்கு'ஒளியாமலுதவுக'என்றாம்.

''கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்'' (தேவாரம்) என்பவாகலின், நரகெய்தாமற் பாதுகாத்துக் 'கரவேல்' என்றார். இதன்கட் ''கடுநரகங்கள்'' என்றதனாற் கரத்தல் கடும்பாவம் ஆதலும் அப்பாவத்திற்குக்-கூடிய பலவாய நரகங்களிற் றுன்புறுதலும் உணர்க. ''தன்னா லியன்றன தானு தவா னாகினவற் கின்னா நரகே யிடம்'' எனப் பாரதத்தும் வருதல் காண்க (புறத்திரட்டு விளக்கம்). ''இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை''என்றார்.இயைவதனை இல்லை யென்னற்க என்பதற்கு இயலாததனை உண்டு என்னற்க என்பது அருத்த பத்தியாம். இயலாததனை உண்டு என்றலும் ஒருவற்குத் தன் கணுள்ள அவாக்காரணமாகவே நிகழுமென்பது உய்த்துணர்ந்து கொள்க.

''ஒல்லாதொல்லு மென்றலு மொல்லுவ தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே யிரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர் புகழ்குறை படூஉம் வாயில்'' (புறம். 196) எனச் சான்றோர் கூறியதனானு மிவற்றி னியல்பு தெளியப்படும். கூடலூர்கிழாரும் இதனானே ''எத்திறத் தானு மியைவ கரவாத பற்றினிற் பாங் கினிய தில்'' என்றோதினாரெனவுணர்க.

இனி ''ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கு மொல்லா தில்லென மறுத்தலு மிரண்டு மாள்வினை மருங்கின் கேண்மைப் பாலே'' எனவும்

''இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசை யன்று வையத்தியற்கை'' (நாலடி. 41) எனவும் வருதல் பற்றி இதற்கு இயலாததனை இல்லை யென்று சொல்க என்பதும் அருத்தாபத்தியாம் எனினுமமையும்,

இயல்வதாயின் இரப்பார்க்குத் துன்பம் நீங்க ஒளியாது உதவுதலேயன்றி இரவாதார்க்கும் அவர் துன்பம் நீங்க நீயே வலிந்து சென்று உதவுதலும் வேண்டும் என்பது உணர்த்துவார் இரப்பார்க்குக் கரவேல் என்னாது பொதுப்பட 'இயல்வது கரவேல்' என்றார். ''இயல்வது என்பது துன்புறுவார்க்கு இயலாதது என்பதனை உணர்த்தி நின்றது. ''ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணையாகி .... மேற்சென் றளித்தலும் விழுத் தகைத்து'' என்பது மணிமேகலை. இயல்வது கரந்தாற் றன்னெஞ் சறிவது பொய்த்தானாய்த் தன்னெஞ்சே தன்னைச் சுடும் வண்ணம் செய்து கோடலின் இம்மையில் 'கரப்பிடும்பை' (குறள். 1056) என்னும் நோயுற்று எல்லாரானும் பழிக்கப் படுதலே யன்றி ''இரப்பவர் சொல்லாடப் போஒ முயிர்'' (குறள். 1070) எனவும், ''அந்நிலையே மாயானோ மாற்றிவிடின்'' எனவும் உண்மை யான், தன் தொலையா வறுமை யான் இரத்தலை மேற் கொண்ட பெரியார் சிலர்க்குத் தம் மாலிரக்கப்பட்டவர் கரந்த சொற்கேட்டவளவே உயிர் போமாதலின் அவர் ஆருயிரைப் போக்கினானாய் அதனான் மறுமை யினுங்கடுநரகங்கள் எய்து வனாவன் என்பதுட்கொண்டு 'கரவேல்' என்றார். உலக முழுதுங் காக்கும் பெருமையும் ஒரு துற்றளவே ஈய ஒல்லும் சிறுமையும் அடங்க 'இயல்வ தென்றார். இல்வாழ்வார்க்கு இதனின் சிறந்த பேரறம் வேறின்மையான் 'இயல்வது கரவேல்' என்றார்.

''எத்திறத் தானு மியைவ கரவாத பற்றினிற் பாங்கினிய தில்'' என்று பிறருங் கூறினார்.

4. ஈவது விலக்கேல்

இஃது அழுக்காறிலாதொழுகுமாறு கூறுகின்றது. இதுவும் முன்னையது போலக் காரியத்தை விலக்குமுகத்தாற் காரணத்தை விலக்கியவாறு. அழுக்காறென்பது ''பிறராக்கம் பொறாமை'' (குறள், 35 உரை) என்றார் பரிமேலழகர். நச்சினார்க்கினியரும்

அழுக்காறென்பது பிறர் செல்வங் கண்டவழி வேண்டாதிருத்தல் (தொல். பொருள். மெய். 12 உரை)என்று கூறினார்.இவற்றால் ஒருவர் ஆக்கமெய்தலைப் பொறாது செய்வனவெல்லாம் அழுக்காற்றின் காரியமாதலுணர்க. பிறராக்கம் பொறாமை தன்கண் வைத்த அவாக் காரணமாகவே யுண்டாதலின் அதனையடுத்து இதனைக் கூறினார்:

இதன்பொருள்: பிறர் ஒருவர்க்கீவதனைத் தடா தொழிக என்றவாறு.

இதனால் அழுக்காற்று வினை புரியற்க என்று கூறினார். மேல் இயல்வதனை ஒளியாமலுதவுக என்றதனாலும் ஈண்டு ''விலக்கேல்'' என்றமையானும் ஈவது என்பது பிறரொருவர்க்கீ வதனையே யுணர்த்திற்று. ஈதல் வினையான் ஈவானுயர்பும் பெறுவானிழிவும் உணர்த்தினார். ஒருவன் றானே யீதலின்றி யமையாதது.அதற்கியலாத போது இயல்வானை யீயும் வண்ணஞ் செய்வதின்றியமையாதது. இந் நல்லன செய்தலாற்றா நிலையில் அல்லன செய்தலேனுமோம்புக என்பார் பிறரீவது விலக்கேல் என்றார். ஈவானுக்கும் பெறுவானுக்கும் இடைநின்று ஈவது விலக்குமுகத்தாற் பெறுவதும் விலக்குவானாதலின் ஈவான் புகழ் புண்ணியமெய்தலையும், பெறுவான் பொருள் முதலியன எய்தலையும் இவன் உள்ளத்தால் வேண்டானாதலான் இவன் பிறராக்கம்பொறா அழுக்காறுடையனென்றும்,ஈவது விலக்கான் ஈவானுக்கும் பெறுவானுக்கும் புகழ் புண்ணியங்களானும் பொருளானும் ஆக்கமுண்டாதலையே விரும்பினானாதலின், அழுக்காறிலாத தூய மனமுடையனென்றும் துணிப்படும் என்பது கருத்து.

ஈவது விலக்குவோன் பெறுவானைப் பொருண் முதலியன எய்தாமற்றடுத்தலான் இம்மையில் திரு நீங்குமென்றும், ஈவானைப் புண்ணியமுதலியன எய்தாமற்றடுத்தலான் மறுமையில் நரகெய்து மென்றுங் கருதியிங்ஙனம் கூறினார். திருவள்ளுவனாரும், ''அழுக்கா றெனுமொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும்''(குறள்.168)என்றார்.இனிக்''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக் கெடும்'' (குறள். 166) என்பதனால் பிறர்பேறு பெறாத அழுக்காற்றுள்ளமே ஒருவனைச் சுற்றத்தொடு கெடுக்குமாயின் கொடுப்பது விலக்கும் அழுக்காற்று வினைஒருவனை என்னென்ன படியாற் கெடுக்குமோ என்று கருதி விலக்கேல் என்றாரெனினு மமையும். பிறரீயாமையை விலக்குக என்பது இதற்கருத்தாபத்தியாம். இதனான் ஈயாதாரையும் ஈயச் செய்தலறமாதலுணர்க.

5. உடையது விளம்பேல்

இஃது இன்னாச்சொல் விலக்குகின்றது. இன்னாச் சொல்— இன்னாமையைப் பயக்குஞ் சொல். இதனைக் கடுஞ்சொல் என்பர் பரிமேலழகர். இஃது அவா வெகுளி யழுக்காறு காரணமாக நிகழ்வதொன்றாதலின் அவற்றினிறுதியில் வைத்து விலக்கினார்.

இதன்பொருள் : உன்னுடையதாகிய நன்மையினை யும் பிறருடையதாகிய தீமையினையும் உன்வாயான் மொழியற்க என்றவாறு.

ஒருவன் தன் வாயான் விளம்பாமைக்குரியன தன்னது நன்மையும், பிறரது தீமையுமாதலின் அவ்விரண்டற்கும் பொதுப் பட 'உடையது' என்றொழிந்தார். விளம்பல்—பரக்கப் பேசுதல். ஒருவன் தன் தன்மையினைத் தான் கூறலாகாதென்பது.

> ''என்பக்க வோதினா ரின்னா ரெனுமியல்பு
> மென்பக்க னன்மை யெனுமியல்பு—மன்பக்கற்
> சேவிப்பார் தங்கட்குச் சென்ம நிருபணமு
> மாவிக்கு நேரே யழுக்கு''

என விளாஞ்சோலைப் பிள்ளை சத்தகாதையிற் கூறியவாற்றா னறிக. இக்கருத்தானே ''வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை'' (குறள். 439) என்றார் தேவரும். பிறர் தீமையினை ஒருவன் தன் வாயாற் சொல்லலாகா தென்பது, ''பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு'' (குறள். 984) என்பதனானுணரப்படும். இவ்விரண்டு மின்னாமை பயத்தலின் விலக்கினார்.

தன்னன்மையினைத் தன் வாயானேகூறின் அஃதின்னாமையே பயக்குமென்பது நூறுமகமுற்றிய பெரும்புண்ணியத்தா லிந்திர பதம் பெற்ற யயாதி என்னும் கோவேந்தன் தானுலகத்துப் புரிந்த நன்மைகளை யெல்லாந் தன் வாயாற்கூறி அப்பதமிழந்து தலைகீழாக வீழ்ந்தான் என வியாசபாரதத்துளோதியதனா னுணர்க. பிறர் தீமை கூறுவதின்னாச்சொல்லாதல் வெளிப்படை. தமிழரசரை யிகழ்ந்து தம்மை மிகுத்துக் கூறிய ஆரிய வரசராகிய கனகவிசயர் சேரன் செங்குட்டுவனால் வெல்லப்பட்டுப் பரிபவ மெய்திய செய்தியானும் இவ்விரண்டு மின்னாச் சொல்லாதறுணி யப்படும். தன் உயர்வும் பிறர்குறையும் ஒருவன் கூறலாகா தென்பது ''உரையான் குலம் குடிமை யூனம் பிறரை யுரையான்'' எனவும், ''இயல்புரையா னீனமுரையான்'' எனவும் ஏலாதிக்கண் வருதலானுமறியப்படும்.

''கற்றனவுங் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும்'' (நாலடி 34 : 10)

எனப்பிறருங் கூறினார்.

உன்னுடையதாகிய தீமையினையும் பிறருடையதாகிய நன்மையினையும் பரக்கப்பேசுக என்பது இதற்கருத்தாபத்தியாம். ஒருவன் தன் தீமையினைத் தன்வாயானே கூறின் அத் தீமையானாய பாவத்தின் ஓர் காலறுமென்பது அறநூலாற் கண்டது. அவர், ஒருவன் தீமை புரியின் அது பாவமாய் நான்கு கால்களுடையதாகி, அவ்ன் செல்வுழியெல்லாஞ்சென்று அவனை விரைந்துபற்றிப் பிடிக்கும் வலியினதாமென்று அத்தீமையினை, அறியாமையாற் செய்தேனே என்று கவன்று அநுதபித்தால் அப்பாவத்தின் ஓர் காலும், அப்பாவத்தை யொழித்தற்கு வாயில் யாதென்று வினாவியறியப் பெரியார்பாற் செல்லின் ஓர்காலும், அவர்பால் தான் செய்த தீமையினை உள்ளவாறு பரக்கச் சொல்லின் ஓர்காலும், அவர் கூறியவாறு கழுவாய் புரியின் மற்றொருகாலும் அற்றொழியுமென்று கூறுவராதலான் ஒருவன் தான் செய்த தீமையினைப் பாவ நீக்கத்தின் பொருட்டுத் தன் வாயானே கூறலின்றியமையாதென் றுணர்ந்துகொள்க.

இனி, உடையது என்பது கெடுவது என்று கொண்டு கெடு சொல் ஒன்றுஞ் சொல்லற்க என்று கூறினுமமையும். உடைதல்—கெடுதல். இதனை ''மதனுடை நோன்றாள்'' என்னுந் திருமுரு காற்றுப்படையிற் போலவும், ''நாணுடை மாதர்'' என்னுஞ் சிந்தாமணியிற் போலவும் கொள்க.

6. ஊக்கமது கைவிடேல்

நான்முகத்தே அறஞ்செய்தற் பொருட்டு அதனை அன்பு செய்க என்று புகுந்து பின்னான்கு சூத்திரங்களான் அவ்வற மாவது வெகுளி, அவா, அழுக்காறு, இன்னாச்சொல் என்னும் நான்கு குற்றங்களு மிலதென்று அக்குற்றங்கள் புகுதாமற் பாது காத்து, இனி அவ்வன்பு செய்த அறத்தைப் புரிதற்குக் கருவி கூறுவானெடுத்துக்கொண்டு முதற்கண் மனமெலிதலின்றி அவ் வறம் செய்தற்கட் கிளர்ச்சி யுடையனாதலின்றியமையாதென் கிறார்.

ஒருபொருள் ஒருவன் விரும்பிய துணையானே அவனாலெய் தலாவதின்று; விரும்பிய பொருளை யெய்தற்குரிய வினைக்கண் அவனை முயல்விக்கும் உள்ளக் கிளர்ச்சி அதனை யெய்து வித்தற்குத் தலையாக வேண்டப்படுவதொன்றாகலினதனை வலியுறுத்துவதிச் சூத்திரமென் றுணர்க., 'உயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே'' என்பதனால் உயர்ந்ததொன்றை மனத்தா னினைந்து பின் அதனைப் பெறுதற்கு ஊக்கம் பிறத்தலினிதென்று பிறருங் கூறினார்.

இதன் பொருள் : உள்ளக்கிளர்ச்சியாகிய வலியினை விடாமற் கொள்க என்றவாறு.

ஊக்கமாவது மன மெலிதலின்றி வினை செய்தற்கணுளதாம் கிளர்ச்சி. மதுகை—வலி ''உள்ள முடைமை யுடைமை'' என்ப தனால் ஊக்கமுடைமையே ஒருவர்க்கு நிலைநின்ற உடைமை யாதலானும்,

''உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு'' (குறள், 508)

என்பதனால் வண்மை முதலிய அறங்களவ்வூக்க மிலாதவரான் எய்தலாகாமையானும் அதனையே அறஞ் செய்தற்குச் சிறந்த வலியாக வேண்டினார். ஊக்கமே யொருவற்கு வலியாதலை, ''ஊக்கமுடையா னொடுக்கம்'' என்புழி ''ஊக்கமுடையான்'' என்பதற்கு வலி மிகுதியுடையான் எனப் பரிமேலழகருரைத்த வுரையானுமுணர்க.

யாக்கை வலியும், பொருள்வலியும்,' பிற வலியும் ஊக்கமில்லா வழிப் பயன்படாவாதலுணர்ந்து கொள்க. அளவிறந்த ஒப்பரவு, ஈகை முதலிய அறங்கள் இவ்வூக்க மிகுதி காரணமாகவே நிகழ்வன என்பது ''ஒளியொருவற் குள்ள வெறுக்கை'' என்புழிப் பரிமேலழகர் கூறியதானானும் அறியப்படும். இவ்வூக்கவலி மக்கட்கெல்லாம் உள்ளத்துள்ளே இயல்பாக வுள்ளதென்றும் அதனை விடாமை மாத்திரமும் செய்யவேண்டுவதென்றும் புலப்பட 'விடேல்' என்றார். முன்பற்றியுள்ளதற்கன்றே விடுதல் கூறவேண்டுவதென்று கொள்க. ஈண்டு விடுதல் நெஞ்சு பற்று விடுதல்; ''காமம் விடுவொன்றோ நாண் விடு நன்னெஞ்சே'' என்புழிப்போல. இதனால் அறம் எய்தற்குரிய வினைகளைப் புரிதற்கண் இடையூறுபல உளவாகும். அது கண்டு மனமெலித லின்றிக் கிளர்ச்சியே பற்றுக்கோடாக விடாது பற்றி, அவ்விடை யூறுகளைக் கடக்க என்று குறித்தாராயிற்று, ''உற்ற பேராசை

டாக்டர் ... நிலையம்
2, அருண்... சாலை,
... 600 090.
...நாடு, இந்தியா. ☎: 044-24911697

கருதியறனொரூஉ மொற்கமிலாமை யினிது' எனத் தன்கண் அறனொருவுதல் ஒற்கத்தானிகழ்வதென்று பெறப்படுதலின் அறன் முயறல் ஊக்கத்தானிகழ்வதென்று எளிதிலுணரலாகும்.

இனி, ஊக்கமாகிய அதனைக் கைவிடாதே கொள் என்பாருமுளர். ஊக்கங் கைவிடேல் என்றாலும் கருதிய பொருளைப் பயப்பதாக அது என வேண்டாமையான் அது கருத்தன்றென்க. 'பொறி மஞ்ஞையிற் றேவிபோகிச் செல்லாறிழுக்கிச் சுடுகாடவள் சேர்ந்தவாறும்' என்னும் சிந்தாமணிப் பதிகவுரையுள் 'சாத்தியவள் வந்தாள் என்றாற் போலத்தேவியவள்என வினைக் கொருங்கியன்ற தென்பாருமுளர். அது வழக்கி லதென்று மறுக்க' என்று நச்சினார்க்கினியர் கூறியதனானுமிதனுண்மை யுணர்க. இனிக் ''குறியெதிர்ப்பை நீரதுடைத்து'' என்புழி நீரது என்பது போல் ஊக்கமது ஒரு சொல்லெனவும் அது என்பது ஆண்டைப் போலப் பகுதிப்பொருள் விகுதியெனவும் கொண்டு கூறினும் இழுக்காது.

உள்ளமெலிந்து ஒய்தலாகிய வலியின்மையை அற விடுக என்பது இதற்கு அருத்தாபத்தியாம்.

7. எண்ணெழுத் திகழேல்

மேல் அறஞ் செய்தற்கு வேண்டும் வலியொருவற்கு ஊக்கமேயென்று அதனைவிடேல் எனவுரைத்தார். அவ்வூக்க மிகுதியான் அறப் பகுதிகளாகிய அளவிறந்த ஒப்புரவு, ஈகை முதலியன செய்தற்கட்டன்வளவறிந்து நல்லாற்றின் நல்க வேண்டுதலான் அதற்குரிய கருவிநூல்களினுணர்ச்சி அவ்வூக்கமுடையாற்கு இன்றியமையாததாதலின் அவற்றைப் போற்றிக்கொள்க என்கின்றதித்தலைச் சூத்திரமெனவுணர்க.

''உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
இடைக்கண் முறிந்தார் பலர்'' (குறள். 473)

''உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்'' (குறள். 480)

என்பன கொண்டு இவ்வுணர்ச்சி அவ்வூக்கமுடையாற்கின்றியமையாமை தேறுக. 'நேர்ந்தொருவ னாற்றல் வகைய வறஞ்செய்க' (நான்மணி) என்றார் பிறரும்.

இதன்பொருள் : கணித நூலினையும், இலக்கண நூலினையும் இகழாது போற்றுக என்றவாறு.

அறத்துட்டலையாய தென்றுவைத்து ''ஈதலறம்'' என்று இவரே கூறினாராதலான் ஊக்கமிகுதியான் அவ்வறம் நிகழ்த்தற்கண் ''ஆற்றி னளவறிந் தீக'' என்பது பற்றி அளவறிந்தீதற்கு எண்ணும், ஆற்றினீதற்கு இலக்கணமும் ஈண்டு முற்பட வேண்டினாரெனவுணர்க. இவையே அறமுதற் பொருள்களைக் கூறும் நூல்கட்கெல்லாம் கருவியாதலும் இவற்றதின்றியமையாமையும்,

''எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு'' (குறள். 392)

என்பதனுரையிற் பரிமேலழகர் கூறியவாற்றாற்றெளிக. எழுத்துணர்ச்சிக்கு மெண்ணுணர்ச்சி வேண்டப்படுதலின் அதனை முன் வைத்தார்.

இனி ''ஈதற்குச் செய்க பொருளை'' என்பது பற்றி அறத்தாற்றினீதற்குப் பொருள் செய்வார் கொடுப்பதுங் கொள்வதும் மிகை, குறை, சமம், தெரிய எண்ணிடுதலும், வரவு வகையும், செலவு வகையும், கடன் கோடலும், கடன் கொடுத்தலும், ஒற்றியும், விலையும், எழுத்திடலும் வேண்டுதலானும் இவற்றிற் சோர்வுபடிற் பொருள் சோர்தலொருதலையாகலானும் இவ்விரண்டும் ஈண்டுக் கூறினாரெனினுமமையும். செயற்கரிய செய்வேமென்று கருதும் ஊக்க மிகுதியான் இவ்விரண்டினையும் பொருட்படுத்தாது வினைபுரியற்க என்பார் 'இகழேல்' என்றார். இகழேல் என்றமையாற் புகழ்ந்து போற்றுக என்றாராயிற்று.

மற்றுத் திருப்பாட்டில் ''எண்ணெழுத்துங் குறியு மறிபவர்'' என்பதனான் எண்ணினும், எழுத்தினும் வேறாகக்குறியும் அறிதல் வேண்டுமாலெனின் அது நாடுதோறும் பஃறிறப்படுதலானும் ஆங்காங்கு ஒருசாரார் படைத்துக்கொண் டாளுதலானும், அவ்வொருசாரார்க்கன்றி எல்லோர்க்கும், முன்னைய இரண்டும் போலின்றியமையாது வேண்டப்படாமையானும் வரையறையிலக்கணத்தன்மையானும் இவரும் திருவள்ளுவரும் கூறினாரில்லை.

இனிக்குறியென்பது ஒலிக்குறி என்றும் அஃதிசையிற் கலந்து வருவதென்றும் கூறலுமாம். ''குறிகலந்த விசை பாடலினான்'' (திருப்புகலூர், ஆளுடைய பிள்ளையார் திருப்பாட்டு) என வருதல்

காண்க. 'குறிகொளும் போத்திற் கொன்றார்' எனக் கம்ப நாடரும் கூறினார். ''குறி கொளும்போத்து—ஏவுவான் ஒலிக்குக் குறியைக் கொண்டியலும் கடாக்கள் என்றவாறு. குறி—குழூஉக் குறி. இஃதல்லாதனவெல்லாம் எண்ணிலேனும் எழுத்திலேனும் அடங்குமாறு உய்த்துணர்ந்து கொள்க. ''எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா'' எனவும், ''எழுத்தினை என்று முணராத வேழையு மிம்மூவர் பிறந்தும் பிறவாதவர்'' எனவும் இகழப்படாமைக்கு நீ இவற்றை இகழேல் என்றார் என்றலு மொன்று. 'கல்லா னென்றெள்ளப் படுதலும்'(திரிகடுகம்) என்ப.

எண்ணறியாமையினையும் எழுத்தறியாமையினையும் இகழுக என்பது இதற்கருத்தாபத்தியாம்.

8. ஏற்ப திகழ்ச்சி

மேற் கருவி நூல்களையிகழேல் என்றார். ஈண்டு இகழ்ந்தா லென்னை யென்றாற்கு அளவறியாது ஊக்குதலாற் பொருளை யிழந்தாயாகி இன்ன பயனெய்துவை என்கின்றது இஃது என்று கொள்க.

இதன்பொருள்: நீ பொருளில்லையாகி அஃதுடை யாரைச் சென்றிரப்பது எல்லாரானும் இகழப்படுவ தாகும் என்றவாறு.

ஏற்பது என்றதனால் இவன்கட் பொருளில்லை யாதலானும் இவன் ஏற்புழிப் பொருளுண்டாதலும் பெறப்பட்டன. ஏற்புழி யெல்லாம் பொருள் கிடைப்பது என்று துணியப்படாமையான் ஏற்றுக்கொள்வது என்னாது 'ஏற்பது' என்றேயொழிந்தார். ஒருகால்இவன் ஏற்றதுணையே பொருள் பெற்று நிரம்புதலில் லாமையானே பின்னும் பலகால் ஏற்கவேண்டிய மாத்திரையேயா மென்றுட்கொண்டு ஏற்பது என எதிர்காலத்தாற் கூறினார். ''இரவி னிளிவந்த தில்'' எனவும்,

''பரப்புநீர் வையகந் தேரினு மில்லை
யிரப்பாரை யெள்ளா மகன்'' (தகடூர் யாத்திரை)

எனவும் வருதலான் 'இகழ்ச்சி' என்றார். ஒருவன் ஏற்பது அவன் வேண்டியதொன்றைத் தருமோ தராதோ யாமறியேம்; ஏற்ற அளவே இகழ்ச்சி தருவதொருதலை யென்றுணர ஏற்பதாகிய காரணத்தையே இகழ்ச்சியாகிய அதன் காரியமாகக் கூறினார்.

ஈதலன்றி வேறு நல்வினைகளும் அறமாமேனும் அதுதான் எல்லா அறத்தினுமேம்படுதனோக்கி 'ஈதலறம்' என்றாற்போல ஏற்பதன்றி வேறு இகழ்ச்சிச் செயல்களும் உளவேனும் அதுதான் எல்லா இளிவினும் மேம்படுதலின் 'ஏற்பதிகழ்ச்சி' என்றார் என்க. ''நல்லாறெனினுங் கொளறீது (குறள். 222), 'கொள்வது தீது' (கம்பராமாயணம்) என்பனவற்றால் இகழ்ச்சி தீதென்றிகழப் படுவதெனக் கொள்க. 'ஆவிற்கு நீரென் றிரப்பினும், நாவிற்கு இளிவந்தது நாவளவே யாதலும்' அது தீதாகாமையும் தனக் கேற்பது தீதாலும் ஆராய்ந்து கொள்க.

ஏலாமை யிகழாமை தருவதென்பது இதற்கு நோக்கம். இரப்பார்க்கொன் றீவார்மேனிற்கும் புகழாதலின் ஏலாமை யிகழாமையளவே பயப்பதன்றிப் புகழைப் பயக்கும் வலியில தென்க. இக்கருத்தானே இரந்து பெற்ற செல்வத்தினும் இர வாமை கோடிமடங்கு நன்று என்றே கொண்டு திருவள்ளுவரும்,

''கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்'' (குறள். 1061)

என்றார். 'ஏலாமை நன்று' (சிறுபஞ்ச மூலம்) என்றதும் இக் கருத்துப் பற்றியதேயாம்.

9. ஐயமிட் டுண்

மேல் ஏற்பதனை இகழ்ச்சிச் செயலென்றிர்; மற்றுப்புகழ்ச்சிச் செயல் யாவை யென்றாற்கறிவுறுத்த எழுந்தன இதுமுதலிரண் டும். அவற்றுள் இச்சூத்திரத்தின்கண் விதிக்கப்பட்ட அறம் பின்னதிற் கூறப்பட்டது போல வலியரேயல்லாமல் மெலியரும் புரிதற்குரிய சிறப்பு நோக்கி முன்வைக்கப்பட்டது. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்பது கருதியும் ''சோற்றுக்கு நீருக்கு மொப்பாகிய கொடையில்லை!'' என்னும் அறநூற் பொருண்மையை யுட்கொண்டும் இதனை முன்வைத் தாரெனி னுமமையும்.

இதன்பொருள்: மேலிகழ்ச்சி யென்ற ஏற்பதையும் தந்திரா வறுமையாற் புகுவார்க்குப் பாத்தூணிட்டு எஞ்சியதை யருந்துக என்றவாறு.

ஐயம்— பாத்தூண், அறச்சோறு என்பதுமது.

''மஞ்சாரு மாட மனைதோறு மைய
முளதென்று வைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கொ
டிருமுல்லை வாயி லிதுவே''

என்னுந் திருப்பாட்டானுணர்க. இடுதல்வினை பெறுவாரை அவாஅய் நின்றது. உண்டு ஐயமிடு என்னாது, ஐயமிட்டுண் என்றதனால் உண்பது ஐயமிட்டதன்மேல் எஞ்சியது என்பதாயிற்று. எஞ்சியதை உண் என்றது பின்னும் ஐயமிடுதற்கு இவன் இருத்தலை வேண்டியென்றுணர்க. 'இட்டுண்டிரும்' என்று இவரே கூறியது காண்க. ''உண்பதன்முன் னீவான்.... எண்பதின் மேலும் வாழ்வான்'' (சிறுபஞ்சமூலம்) என்பதனால் உண்பதன் முன் ஐயமிட்டு நெடுங்காலம் உண் என்று கருதிக் கூறினாரெனினுமிழுக்காது. உண்ணாதுவாழ்வா ரில்லறத்தாருள் அரியராகலின் அவருண்ணுந்தோறும் அவ்வுண்டற்கு முன்னெல்லாம் ஐயமிடுக என்று விதித்தவாறாம்.

''பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது'' (குறள். 227)

என்பதனால், பாத்தூணாகிய ஐயமிடுதல் காரணமாக நீ எப்போதும் பசியின்றி உண்பாயாக என்றார் எனினும் அமையும்.

''கூஉய்க் கொடுப்பதொன்றில் லெனினுஞ் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்றாரே துன்பந் துடைக்கிற்பார்''

என்பதனால், ஒன்றுளதாயின் வறியாரைத் தாமே கூஉய் அதனைக் கொடுப்பது செய்யவேண்டுவதென்பது புலப்படுதலான் ஏற்பார்க்கு எனக் கூறாதொழிந்தனர் என்றலுமொன்று. இவ்வறத்திற்கு இம்மைக்கண் நிலைநின்ற புகழும் மறுமைக்கண் இந்திரபதமும் உண்டாமென்பது, ''ஈத்துண்பா னிசை நடுவான்' (நான்மணி) எனவும், ''ஈத்துண்பான் றேவாதி தேவானத் தேறு'' (ஏலாதி) எனவும் கூறியன கொண்டுணர்க. பதிற்றுப் பத்தினும்,

''வாரா ராயினு மிரவலர் வேண்டித்
தேரிற் றந்தவர்க் கார்பத னல்கு
நசைசால் வாய்மொழி யிசைசால் தோன்றல்''

என்றிக் கருத்தேபடக் கூறியது காண்க.

உண்ணுந்தோறும் ஐயமிடாமலுண்ணற்க என்பது இதற் கருத்தாபத்தியாம்,

''இந்திர ரமிழ்த மிசைவ தாயினும்
இனிதெனத் தமிய ருண்டலு மிலரே''

என்று பிறருங் கூறினார்.

இதன்கண் ஐயமென்பது ஆருயிர் மருந்தெனச்சிறந்த போஷகமாயினும் அஃதினம் பற்றி மற்றைத் தாரக போக்கியங்களையும் குறிக்குமாதலின், அவற்றையும் பிறர்க்கிட்டு அநுபவிக்க என்ப தாயிற்றெனக் கொள்க. நீர் முதலியன தாரகம், வெற்றிலை முதலியன போக்கியம். ''உண்ணுஞ்சோறும் பருகு நீருந் தின்னும் வெற்றிலையும்'' எனப்பெரியாரும் இம்மூன்றையும் பணித்தல் காண்க.

10. ஒப்புர வொழுகு

இதுவும் புகழ்ச்சிச் செயல்கூறுகின்றது. இது புகழ் பயப்ப தென்பது,

''ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து'' (குறள். 220)

என்புழிப் பரிமேலழகர், 'தன்னை விற்றுக் கொள்ளப் படுவதொரு பொருளில்லையன்றே இஃதாயின் அதுவுஞ் செய்யப்படும் என்றது புகழ் பயத்தனோக்கி' எனவுரைத்ததனாற்றெரிக. முன்னது பெரும்பாலும் மறுமை நோக்கிய தெனவும், இஃது இம்மை நோக்கியதெனவும் கொள்க. முன்னது எளியர் வலியர் இருவர்க்கும் பொது என்றும் இது பெரும்பாலும் வலியர்க்கே சிறந்த தென்றும் உணர்க.

இதன்பொருள் : எல்லார்க்கும் உபகாரஞ் செய்வ தாகிய நெறியின் நட என்றவாறு.

ஒப்புரவு எல்லார்க்குமுபகாரஞ் செய்தலே யென்பது,

''தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'' (குறள். 212)

என்னும் ஒப்புரவறிதல் அதிகாரத் திருக்குறளில் வேளாண்மை செய்தல் ஒப்புரவு செய்தல் எனவும், 'வேளாண்மை என்னுஞ் செருக்கு' என்புழி வேளாண்மை எல்லார்க்கு முபகாரஞ் செய்த லெனவும் பரிமேலழகர் கூறியவாற்றானுணர்ந்து கொள்க. இஃது உயர்ந்தோர் நடை என்பது கொண்டு உலகநடை எனவும் வழங்கப்படும். வேதநடை, உலகநடை என்பதனாலும் இதுவே

பொருளாதல் காண்க. இஃதுயர்ந்தோர் தம்மையொப்ப எல்லா வுயிர்களையும் ஓம்புதலின் ஒப்புரவு எனப் பெயராயிற்று. தம் முயிர்க்கு ஒத்தது எல்லாவுயிர்க்குமாமென்று அவற்றின்ப துன்பங்கள் தமவாகக் கொண்டு உபகாரப்படுத்தலான் இதனை ஒத்தது எனவும் திருவள்ளுவனார் கூறினார். அவர் ''ஒத்த தறிவா னுயிர் வாழ்வான்'' என்பதனால் இதுவே கருத்தாதல் காட்டினார். யாவர்க்கு மொப்பதாதலின ஒப்புரவாயிற்றெனினும் இக்கருத்தே பயக்கும். ஒழுகு என்றதனால் ஒப்புரவு நெறியாயிற்று. அதனானே இஃது ஒழுக்கமாதலும் உணரப்படும். உலகம் நிலை பெறுவதற்கு வானம் மழைபெய்த லெங்ஙனம் இன்றியமையாததாகுமோ அங்ஙனமே உயர்ந்தோர் ஒப்புரவுமாகுமென்றுணர்க.

''பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே''

என ஒப்புரவாளனைப் பாடுதலானும்,

''உண்டா லம்ம விவ்வுலகம்
. . . .
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே''
(புறம். 182)

என வருதலானும் அறிக. பரிமேலழகரும், 'கைம்மாறு வேண்டா' என்பதனுரையில் இவ் வொப்புரவாளரை மேகங்கள் போல்வா ரெனக் கூறுதல் காண்க. அவர், ''ஒளி யொருவற் குள்ள வெறுக்கை'' என்பதனுரையில், 'மேலும செயற்கரிய செய்வார் பெரியரென்றாராயினும் ஈண்டு அவை அளவிறந்த ஒப்புரவு, ஈகை முதலியனவாம்' எனக் கூறுதலான் இவ் வொப்புரவின் பெருமை யுணரப்படும். 'ஒழுகு' என்றதனான் உன் ஒவ்வோரடி வைப்பும் பிறர்க்குபகாரம் ஆமாறியங்குக என்று குறித்தாரெனினு மமையும்.

ஓருயிர்க்கும் அபகாரியாந் தன்மையில் நடவற்க என்பது இதற்கருத்தாபத்தியாம்.

11. ஓதுவ தொழியேல்

மேல் ஐயமிடுதலும் ஒப்புரவொழுகுதலும் கூறினார். இவற்றானுண்டாம் புகழும் புண்ணியமும், அவற்றுக்கு மறுதலையாகிய பழியும் பாவமும், அப்பாவ புண்ணியங்களிரண்டானும் எய்து நரக சுவர்க்கங்களும் தீப்பிறப்பும் நற்பிறப்பும் துன்பவின்பங்

களும், இவற்றை எய்தும் உயிரும், எய்துவிக்கும் கடவுளும் உள்ளவா றுணராதார் இவை புரிதற் கொருப்படாராதலான், இவை எப்போதும் புரிதற்கு இவ்வுணர்ச்சிகள் எப்போதும் உள வாதல் வேண்டி இவ்வுணர்ச்சிக்கு வாயில் கூறுகின்றது இச்சூத்திர மென வுணர்க.

பிறர்க்குபகாரப்படுதற்கண் இவ்வுணர்ச்சி யொருவற்கின்றி யமையாததென்பது, ''ஒன்றென்றிரு தெய்வ முண்டென்றிரு உனக்குள்ள வெல்லா மன்றென்றிரு பசித்தார் முகம் பார்''என வரும் பாடலானுணர்க. நல்லொழுக்கமெல்லாம் கல்வியானுண் டாவன என்னுங் கருத்தால், ''ஆசார மென்பது கல்வி'' எனச் சான்றோர் கூறுதலுங் காண்க.

இதன்பொருள் : வேதம் ஓதுதலைச் சாந்துணையும் நீக்சாது செய்க என்றவாறு.

ஓதுவது என்றதனால் ஓத்து என்பதாயிற்று. ''ஓதுவா ரோத்தெல்லாம்'' எனப் பெரியாரும் பணித்தார். மேலே கூறப் பட்ட நல்லுணர்ச்சிகளெல்லாம் உண்டாதற்கு வாயிலதுவாத லான் ஒழியாமற் கற்க என்றார். ஒழியேல் என்றதனால் உள்ள நாளெல்லாம் என்று கருதினாராயிற்று.

இனி, நூல்கள் ஓதுவதாகிய நெறியினைத் தப்பற்க என்றும், நீ பிறர்க்குச் சொல்வது மாறற்க என்றும்,

''உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்'' (குறள். 140)

என்பது பற்றி உலகிய லோதுவதனை உலகிலுள்ளகாறும் ஒழி யாதே செய்க என்றும் கூறினும் அமையும்.

'ஓதாமையை ஒழி' என்பது இதற்கு அருத்தாபத்தியாம். வள்ளுவனாரும் கல்வி, கல்லாமை என வகுத்தவாறு காண்க.

12. ஔவியம் பேசேல்

நின்னினும் சிறந்து ஐயமிடுவாரும் ஒப்புரவொழுகுவாரும் ஓதுவதொழியாதாரும் பல்லோருலகிலுளராவரன்றே; அவராக் கங் கண்டுழிப் பொறாமையால் மனங்கோடிப் பேசற்க என் கின்றது இஃதென்க.

இதன்பொருள் : மனக்கோட்டம் அடியாகவருவ தொன்றை வாயானுரையற்க என்றவாறு.

ஔவியம் — மனக்கோட்டம். பேசேல் என்றதனால் அதனடியாக வரும் அபிப்பிராயம் ஆயிற்று.

ஔவியம்: ஆகுபெயர். மனங்கோணுதல் பாவத்தையும், மனங்கோணுதலானொன்று பேசுதல் அப்பாவத்துடன் பழியையும் பகையையும் விளைத்தலிற் பேசேல் என்றார் என்க. நன்றி செய்தார், நண்பினர், சுற்றத்தார் என்றிவர்பாலன்பினானும், தீது செய்தார்பால் வெறுப்பினானும் மற்றுமின்னோரல்லாத ஏதிலார்பால் அவராக்கங்கண்டு அழுக்காற்றானும் ஒருவற்கு மனம் கோடுதல் உளராதல் கூடும். அங்ஙனம் ஔவியமுண்மையினைப் புலப்படுத்துவது சொற்கோட்டமே யாதலான் ஔவியமின்மையினைப் புலப்படுத்தற்குரிய கோட்டமில் சொல்லைச் சொல்லுக என்று அருத்தாபத்தியாற் கொள்ளவைத்தார்.

''சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்'' (குறள். 119)

என்று திருவள்ளுவனாருங் கூறுதல் காண்க. மேற்கூறிய ஐயமிட்டுண்டல் முதலாகக் கூறியவையெல்லாம் உடையையாயினும் அழுக்காறுமட்டுமுளதேல், ''அழுக்கற் றகன்றாரு மில்லை'' (குறள். 170) என்பதனால் நீ பெரியையாகாய் என்பது தெளியப்படுதலானும், மேற்குறித்த வறங்களாலிம்மைக்குப் புகழும் மறுமைக்குப் புண்ணியமும் தரவல்லவற்றை மனமொழிமெய்களாற் செய்யப்புக்க நீ இருமையினுந் துன்பந் தரவல்ல அழுக்காறடியாயதொன்றை வாயானும் பேசற்க என்றார் எனினுமாம்.

''அழுக்கா றெனுமொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்'' (குறள். 168)

என்பதனால் இருமையுங் கெடுதலறிக. அழுக்காறு செல்வமேயல்லாமற் கல்வி முதலியன கண்டும் உண்டாமென்பதும், அதுமனமொழிமெய்களானுஞ் செய்யப்படுமென்பதும், ''அழுக்காற்றினல்லவை செய்யார்'' என்புழி அறனல்லவையாவன செல்வங் கல்வியுடையார்கட்டீங்கு நினைத்தலுஞ் சொல்லுதலுஞ் செய்தலும் என்று ஆசிரியர் பரிமேலழகருரைத்தவாறுணர்க. மேல், 'ஈவது விலக்கேல்' என்றதனால் அழுக்காற்றாற் றீங்கு செய்யற்க என்றார்; ஈண்டு அது பற்றித் தீங்கு பேசற்க என்றார் என்க.

13. அஃகஞ் சுருக்கேல்

பிறர் ஆக்கங் கண்டு பொறாமை பேசாது அதனை நீயே யெய்தியது போல உள்ளமுவந்து அதற்கேற்ற பெற்றியானுரை யாடற்குரிய நீ அவரோடொத்த செல்வத்தினையும் அவரினு மேம்பட்ட செல்வத்தினையும் புகழ் புண்ணியங்கருதி எய்த விழைவாயன்றே; அங்ஙனம் விழைபுமிடத்து நின்செயல் இங்ஙன மாகுக என்கின்றது இஃதென்க.

இதன்பொருள் : விலையின் அளவைப் பெருக்கித் தானியங்களின் அளவைச் சுருக்காதே கொள் என்றவாறு.

விலையின் அளவைச் சுருக்கித் தானியங்களின் அளவைப் பெருக்குக என்பதே இதற்கருத்தாபத்தியாம்.

நின் பொருளாக்கங் கருதி உலகிடர்படுமாறு உணாப்பொருள் கள் சுருங்கற் கேதுவாகிய தொன்றைச் செய்யற்க என்று விலக்கி யவாறாம். உலகிற் கின்றியமையாத உணாப்பொருள்கள் உலகின் மலிதற் கேதுவாகிய தொன்றையே செய்க என்று அருத்தாபத்தி யான் விதித்தவாறாம். இந்நெறியே புகழும் புண்ணியமும் விளைக்கும் பொருளை ஈட்டுக என்று குறித்தவாறு காண்க. மக்கள் யாக்கை உணவின் பிண்டமாதலான் அதற்கின்றியமை யாத உணவினைச் சுருக்கி யீட்டும் பொருள் பழியும் பாவமும் மலைந்தெடுத்தலின் விலக்கினார். அஃகம் தானியமாதல் சிநேந்திரமாலைக்கண் "அஃக மலிவு" எனக் காண்டப் பெயர் வருதலான் உணர்க.

"ஒரு ரிரண்டஃகங் காட்டினை" என்னும் பொன்வண்ணத் தந்தாதியுட் போலவும், "ஒரு ரிரண்டஃக மாயிற் றென்றாங்கு" என்னும் சிந்தாமணியுட் போலவும் அஃகம் முறைமை எனக் கொண்டு செய்யவேண்டும் முறைமைகளைச் சுருங்கச் செய்யற்க என்றார் என்பதூஉம் ஒன்று. ஊர்தொறும் விளைவினும் வற் கடத்து வாழ்வினுஞ் சாவினும் பல்வகைத் தொழிலாளர்க்குந் தொன்றுதொட்டுச் செய்யப்படும் முறைமையினையே ஈண்டுக் குறித்தென்றுணர்க. ஓரூர்க்கின்றியமையாத பல்வகைத் தொழிலும் நிலை பெறுதற்கு இதுவே காரணமாதலான் தொழில் பெருக முறைமைகள் பெருக்கலாகுமன்றித் தொழில்சுருங்க முறைமைகள் சுருங்கலாகாதென்பது கண்டுகொள்க.

இனி, உடுப்பன அணிவன பூசுவன முதலியவற்றைப் பெருக்கி உண்டற்குரிய தானியத்தைச் சுருக்கற்க என்றுரைத்தாரெனினும் பொருந்தும். பொருண் மிகல் வேண்டி உணவுப் பொருள்கள் விளைதற்குரிய நிலங்களில் உடுப்பன முதலியவற்றிற்குரியவற் றையே பெருக்குவாரும் பிறராக்கங் கண்டு பொறாது அவரினுந் தாம் பெருமையுடையார்போற் காட்டவேண்டித் தம்முண வினைச் சுருக்கியும் உடுத்தணிந்து பூசித்திரிவாரும் பலராதலான் அவரை நோக்கி எழுந்தது இச் சூத்திரமென்பதும் ஒன்று. எத் துணையாகப் போகோபகரணங்கள் பெருக்கினாலும் சீவோப கரணங்கள் சுருங்கின் எல்லாம் நிலை கெட்டுத் தடுமாறுதல் ஒரு தலையாதலின் இது கூறினாரென்க.

14. கண்டொன்று சொல்லேல்

உணவுப்பொருள்களைப் பெருக்கியும் உணவல்பொருள் களைச் சுருக்கியுஞ் செய்யுமிடத்து அவற்றைப் பண்டமாற்றுதற் கண்ணும், பொருட்கு விற்புழியும் கொள்வழியும், அவைபற்றி யுண்டாம் வழக்கினும் வாய்மையாக வொழுகுக என்கின்றது இஃதெனவறிக.

இதன்பொருள் : ஒன்று கண்டு ஒன்று சொல்லாதே கொள் என்றவாறு.

ஒன்று இடைநிலைத்தீவகம். தன்னெஞ்சறிந்தவாறே சொல்க என்பதே இதற்கருத்தாபத்தியாம். 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' (குறள். 293) என்றார் தேவரும்.

நெல் முதலிய கூலவகையும், பருத்திபட்டு முதலிய துகில் நூல்வகையும், மாணிக்க முதலிய மணிவகையும், பொன்முதலிய உலோகவகையும், இவையுண்டாதற்குரிய நிலவகையும், பிறவுங் கொண்டுங் கொடுத்தும் போதருங்கால் அவற்றின் நலந் தாழ்வுகளையும் அளவினிறைகுறைகளையும் தான் கண்டதொன் றாகவும், சொல்வதொன்றாகவும் இருத்தலாகாதென்பது இதனால் கூறியதாயிற்று. கண்டொன்று சொல்லினானாயின் அறத்தாற்றிற் பொருளீட்டினானாகாமை கண்டு கொள்க.

"நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவு மொப்பநாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை" (206-213)

என்னும் பட்டினப்பாலையுள் 'வாய்மொழிந்து . . பகர்ந்துவீசும்' என்பதற்கு நச்சினார்க்கினியர், 'மெய்யே மொழிந்து இலாபத்தை வெளியாகச் சொல்லிக் கொடுக்கும்' என்று உரைத்தவாற்றா னிதனையறிக. வாய்மை பிறத்தற்குரிய இடம் இஃதென்னும் பெரும்பான்மை பற்றி ஈண்டே பொய்யாமையை விதித்தா ரேனும் இவ்விதியை யாண்டுங் கொள்க. வள்ளுவனாரும் வாய் மையைத் துறவறத்துச் சிறப்புப் பற்றி வைத்து, யாண்டுங் கொள்ளவைத்ததுங் காண்க. பொருள் பற்றி நிகழும் பொய் கூறியதனோடு காமம் பற்றி நிகழும் பொய்யும் இனம் பற்றி ஈண்டே கொள்க.

இனிக் 'காண்டல்' செய்தலெனக் கொண்டு ஒன்று செய்து ஒன்று சொல்லற்க என்றா ரெனினுமமையும். செய்தவாறு சொல்க என்பது கருத்தாம். 'ஸ்ரீராமமூர்த்தி சத்தியத்தானே உலகங்களை வெல்கின்றான்' என்று வான்மீகிபகவான் கூறி யருளிய கட்டுரையால் உலகங்களனைத்தையும்வென்று கொள்ளு தல் வாய்மையானாகும் என்பது பெறப்படுதலின் எல்லாப் பொருளையும், எய்த விழைவார்க்கு இது தலையாக வேண்டப் பட்டதென்க. அறிகரி பொய்த்தன் முதலாக எல்லாப் பொய் மையும் என்று கண்டு ஒன்று சொல்லுதலாலீண்டே அடங்குதல் காண்க.

"அற்றன் றாத லதுதான் மனஞ்செய்தல்
சொற்றன மாட்டு நிகழ்த்தல் பிறனோர்த்தன்
மற்றித் தன்மை படுமாயின் மாண்பிலாக்
குற்றம் பொய்யென் றுரைப்பர் குணமிலார்"

என்பது குண்டலகேசி.

15. ஙப்போல் வளை

கண்டொன்று சொல்லாது ஈட்டும் பொருட்டு ஏதுவும் அறனும் பயனுமாகிய சுற்றத்தைத் தழுவிக்கொள்ளுதல் கூறு கின்றது இஃதென்க.

''சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்'' (குறள். 524)

என்றார் திருவள்ளுவனாரும்.

இதன்பொருள்: ஙகாரந்தான் மொழிக்குபகாரப் பட்டுநின்று மொழிக்குபகாரப்படாத தன்வருக்க மனைத்தையும் உபகாரப்படுமாறு தழீஇ நிற்றல்போல, நீ உலகுக்குபகாரப்படாதாராயினும் உன் சுற்ற மனைத்தையும் உபகாரப்படுமாறு தழீஇக் கொள்க என்றவாறு.

மற்றைய ககர முதலாயின மொழிக்குபகாரப்படுவனவற் றையே தழுவுதல் போல் உலகுக்குபகாரப்படுவாராகிய சுற்றத் தையே தழீஇக்கொண்டு அங்ஙனமுபகாரப் படாத சுற்றத்தாரை ஒதுக்கிவிடாதே கொள் என்பது இதற்கருத்தாபத்தியாம். உபகாரப் படாத சுற்றத்தையும் தழுவுதல் விதித்தவாற்றான் உபகாரப்படுஞ்சுற்றத்தைத் தழுவுதல் சொல்ல வேண்டாதா யிற்று. வளையென்பது சுற்றிக்கொள் என்றவாறு. 'சுற்றத்தார் சுற்றப்பட வொழுகின்' என்றார் தேவரும். உற்றுதுரைப்புழி யும் பகைபலவாமாதலின் தனக்குத் துணையாகச் சுற்றத்தைத் தழீஇ நிற்பின் அவற்கு அப்பகையான் ஒரு தீங்கும் எய்தாதென் றும் பாதுகாத்தவாறு. சுற்றம் செல்வத்திற் கேதுவும், அரனும், பயனுமாமென்பது திருவள்ளுவர் கருத்ததாதல் துணிக. பொருட் டொடர்பினை எழுத்துவருக்க முறையே நிறுவிய ஆசிரியர்க்கு ஈண்டு ஙகாரம் தன்னையே யுணர்த்துமாறு வைத்ததே கருத்தா மென்க.

இனி, யூகி பாடையில் அது வல்லாரெடுத்தாள்வதோர் குழூஉக்குறி இஃதெனக் கொண்டு கூறினாரும் அஃதன்றென வேறு கூறினாருமுள்ளர். அவர் கூறுமாறு:

யூகி பாடையிலே ஙகரம் பரிமாவாதலான் அறப்போரில் வெல்லக் கருதுவார் குதிரைப்படை கொண்டு வளைக என்றவாறு.

'படைக்குட்டம் பாய்மாவுடையா னுடைக்கிற்கு மொன்னா ரரன்' என்றதனானுமறிக என்றது பொருளுக்கு விரோதம் யூகி பாடை அகம்பிய மாதலானும், மறப்போரென்றும் கழுதைப் போரென்றும் வீர சமர பூமியைச் சொன்னதினாலும், யூகிபாடையாகிய அகம்பிய பாடை ஔவை பாடலுக்கு இலக்கல்லாமையானும் அது கருத்தன்று. நுகரவடிவாய் மாற்றானை வளைக; அது படைக்கு உடற்றவும் ஒதுங்கவும் ஆமென்பது. அது நுகர வியூகம் என்பது. பாசவியூகம், தூசிவியூகம் என்பன போல என்பது. இங்ஙனம் குதிரைப்படையான் வளைத்தலும் வியூகம் வளைத்தலும் இல்லறத்தார் பலர்க்கும் பொதுவாகிய அறங்கள் பலவற்றையுந் தொகுத்துணர்த்தும் ஈண்டைக் கேற்புடையன வாகாமையானும் இல்வாழ்வாருட் சிறந்த அரசர்க்கெனப் பகுத்துக் கொண்டவிடத்துப் 'போர்த்தொழில் புரியேல்' என்பதனாற் போரினை விரும்பாமையை விதித்து அது பிறரான் நிகழ்ந்தவிடத்து மனந்தடுமாறாமையினையும் மாற்றானுக் கிடங்கொடாமையினையும் உணர்த்தும் ஆண்டைக்கே ஏற்புடையன வாதலானும் இவை ஆசிரியர் கருத்தொடு பட்டிலவென்பதுய்த் துணர்ந்து கொள்க.

'நுகர வெல்கொடியான்' எனத் திருப்பாட்டின் வருதலான் நுகரம் ஏறு எனக்கொண்டு அது மடுத்தவாயெல்லாம் சகடூர்த் தற்குச் சலியாது நுகம் பூண்டற்குத் தலைவளைத்தல் போல நீயும் இல்வாழ்க்கையென்னும் இரும் பெரிய வான்சகடத்தை எல்லாக் காலத்தும் இடத்தும் தளராமல் நடைபெறச் செய்தற்குச் சலியாமற் பூண்டுகொள்க என்றாரென்றலும் ஒன்று. ''மடுத் தவா யெல்லாம் பகடன்னான்'' என்றார் தேவரும்.

> ''மன்னவரை யமிழ்தூட்டி வானவரை வாழ்விக்கும்
> எண்ணருஞ் சீர்ப்பெருக்கார் எருதுசுவ லிடுங்கறையே''

என்று கம்பநாடரும் இவ்வேற்றைப் பாராட்டுதல் காண்க.

16. சனிநீ ராடு

அறத்தாற்றிற் பொருளீட்டுவான் தற்காத்தொழுகற்கட் சுற்றந் தழுவுத லின்றியமையாததாயினாற்போல மேல்வருந் தன் நற்காலந் தீக்காலங்கட்குத் தக்க வினையுடையனாதலும் இன்றியமையாததென்கின்றது. 'மேல்வர வறியாதோன் தற் காத்தல் பொய்' என்றார் கூடலூர் கிழாரும்.

இதன்பொருள் : சனியின் நீர்மையில் நீ சஞ்சாரஞ் செய்க என்றவாறு.

உலகத்துயிர்கள் வானத்துக் கிரகங்களின் இயக்கத்திற்குத் தக இயங்குதல் ஒருதலை. அக் கிரகநிலைக்குத் தக ஒருவன் வாழ்க்கையைச் சீர்படுத்த வேண்டுமாதலானும் அக்கிரகம் பலவற்றுட் சனி ஆயுட்காரகனாய்க் கடுந்தீக்கோளாய் மங்கு வித்தல், பொங்குவித்தல், மரிப்பித்தல் இவற்றை முறையே ஒருவன் வாழ்நாளுட் செய்யவல்லனாதலானும் அதன் நீர்மைக் குத்தக ஒழுகுக என்றார். 'எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே' என்பதனான் மற்றைக்கோள்களுமுடன் கொள்ள லாகும்.

கிரகநிலைச்கு மாறாகச் சஞ்சாரஞ் செய்யற்க என்பது இதற் கருத்தாபத்தியாம்.

ஒருவன் தானே தனக்குத் தலைவனென்று தன் மனந்தோன் றியபடியெல்லாம் காலங் கருதாது ஒன்று செய்தொழுகாது தானொரு தெய்வசக்தியானியக்கப்படுதலைத் துணிந்து அதனை அறிதற்கு வாயிலாகவுள்ள கிரகநிலையின் அநுகூலப் பிரதிகூலங் களைப் பெரியோர்பாற் கேட்டறிந்து அந்நீர்மைக்குத் தகத் தன்னைப் பாதுகாத்தொழுகுக என்று நியமித்தவாறாம்.

சனி மங்குவிக்கும் காலத்து அரியபெரிய வினைகளைத் தொடங்கி இழுக்கி முதலிழந்து கெட்டார் பலரென்க. 'காலங் கருதி யிருப்பர்' (குறள். 485), 'கொக்கொக்க கூம்பும் பருவத்து' (குறள். 490), 'காலத்தோ டெய்த வுணர்ந்து செயல்' எனத் தேவர் கூறிவாற்றான் ஒருவற்கு ஆங்காலமும் ஆகாக்காலமும் உளவாதல் தெளிந்து கொள்க. அவற்றையே கடுந்தீக்கோளாகிய சனி நிலையின் மேல் வைத்து இவர் புலப்படுத்தாரெனவறிக. 'மேல்வர வறியாதோன் தற்காத்தல் பொய்' என்று வருங்கால மறிந்தொழுகலையே தற்காப்புக்கு இன்றியமையாததாக வைத் துப் பிறரும் கூறியவாற்றானிதனுண்மையுணர்க.

உடம்பு தூய்தாதற்கும் நோய் எய்தாமைக்கும் சனிநாடோ றும் நீராடுக எனவும் சனிக்கின்ற நீரினாடுக எனவுங் கூறுவாரு முளர். அது, 'நோய்க் கிடங்கொடேல்' என்னும் பொதுவிதி யின் அடங்குதலானும் இவரோடொத்து அற நூலோதினார். 'மாண்டார் நீராடி மறைந்தொழுகு மாந்தர்பலர்' (குறள். 278) என்பதனால் உளந்தூயரல்லதாருடைய உடற்றூய்மையாற்

பயனின்றென்பது புலப்படுதலானும் இது ஒரு சாமானிய தரும மாதலானும் ஈண்டைக் கேற்புடைத்தன் றாதலானும் ஆசிரியர்க்குக் கருத்தன்றென்க.

ஆடுதல்—அநுபவித்தலுமாம். 'நாடகக் கணிகையோ டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுற' எனச் சிலப்பதிகாரத்து அடியார்க்கு நல்லார் கூறியது கொண்டுணர்க. நளன், தருமன் முதலாகிய சக்கரவர்த்திகளும் இத்தீக்கோளாற்றுன்புற்ற வரலாறு இதிகாசங்களிற் கேட்கப்படுதலானும் 'மகத்திற் புக்கதோர் சனியெனக் காயினை' எனச் சைவ சமயாசாரியரும் கூறுதலானும் கிரகங்களுள் வைத்து இது தவக்கொடிதாதல் உணரலாகும். நீர்—நீர்மை. 'நீரறிந் தொழுகாதா டாரமல்லள்' என வருதலானுணர்க.

இனி வடமொழியுட் சனியென்னுஞ் சொல் பத்தியென்னும் பொருட்டாதலின்; சனிநீர்—பத்திமையாகிய தீர்த்தம் எனக் கொண்டு அதன்கண் ஆடுக என்று கூறினுமமையும். புறத்தூய்மையினும் அகத்தூய்மையே இருமைக்குஞ் சிறந்ததாதலின் அதனையெய்தற்குப் பத்தி நீரையே வேண்டினார். 'ஆடாப் படிவத் தான்றோரும்' உண்டு ஆதலான் நீராடுதல் யாவர்க்கும் ஒத்த விதியாகாமை காண்க. ஆடாப் படிவத் தான்றோர்—அஸ்நான விரதியர். பிறரும், 'மெய்ம்மாசு விம்மச் செற்றம் விட்டார்' என்று கூறுதல் காண்க.

17. ஞயம்பட வுரை

மேல் கிரகநிலைக்குத் தகத் தன்னைப் பாதுகாத்தொழுகுக என்றார். அங்ஙன மொழுகற்கண்,

> ''யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'' (குறள். 127)

என்பதனால் நாகாப்பது இன்றியமையாதென்கின்றது இஃதென்க.

இதன்பொருள்: *நின்பால் விருப்பமில்லார்க்கும் விருப்பமுண்டாக ஒன்றுரைக்க என்றவாறு.*

ஞயம்—விருப்பம். 'நயனில நட்டார்கட் செய்தலிற் றீது' (குறள், 192) என்புழிப்போல விருப்பமுண்டாக என்றதனால்

முன் விருப்பமில்லாரென்பது கொள்ளப்பட்டது. 'கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்' (குறள். 643) என்றார் தேவரும். பிறர்க்கொன்று சொல்லுங்கால் அவர்பின்னுங் கேட்டலை விரும்புமாறு சொல்லுக என்பதாம். 'வேட்பத்தாஞ் சொல்லி' (குறள். 646) என்று அவரே கூறுதல் காண்க. ஈண்டு நயம் 'நயம் பற்றுவிடி னில்லை நசைஇயோர் திறத்தே' (குறிஞ்சிக்கலி. 23) என்புழிப் போல அருளையும், 'நயனில சொல்லினும்' (குறள். 197) என்புழிப் போல நீதியையும் குறிக்குமெனினுமமையும். படுதல்—உண்டாதல்.

நின்னை விரும்பினார்க்கும் வெறுப்புண்டாக ஒன்றுரையற்க என்பதிதற்கருத்தாபத்தியாம். 'தீச்சொல்லே காமின்' (சிறுபஞ்ச மூலம்) என்றார் பிறரும்.

இதனால் நாகாத்தொழுக நியமித்தவாறு காண்க. 'நா வன்றோ நட்பறுக்குந் தேற்றமில் பேதை' என்பதனால் நட்டாரை வேறுபடுத்தல் கூறுதலின் எதிலரையும் பகைஞரையும் இது வேறுபடுத்தல் கூறவேண்டாதாயிற்று. இச்சூத்திரத்தான் இவ்வேதிலரும் பகைஞரும் விரும்பவுரை என்று கூறியவாற்றான் நட்டார் பின்னும் விரும்பவுரைத்தல் கூறவேண்டாமை காண்க. 'வடுச்சொன் னயமிலார்வாய்த் தோன்றும்' (நான்மணி) என்ப தனால் நயம்படாது உரைக்கும் உரை வடுச்சொல்லாதல் தெளிக.

18. இடம்பட வீடிடேல்

மேல் தற்காத்தொழுகற்கண் நாகாத்தல் கூறித் தன்னையும் பொருளையும் காத்தற்கு மதிற் காவலிடுமாறு கூறுமிடத்தினஞ் செய்க என்கிறது இஃதென்க.

இதன்பொருள்: உன் கையிலுள்ள பொருள் கெடும் படி மனையினை யிடாமலிருக்க என்றவாறு.

தங்கையிலுள்ள பொருளெல்லாம் கெடுமாறு வீட்டை அழகி னும் அளவினும் மிகுத்திட்டு அதன்கண் வைப்பதற்குப் பொரு ளொன்றுமிலராய் மனம் வருந்துவார் பலராதலான் இங்ஙனங் கூறினார். ஈண்டு இடம் என்பது பொருள். 'இடனின்றி யிரந் தோர்க்கொன் றீயாமை யிளிவென்' (கலி) எனவும், 'இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்' (குறள். 218) எனவும்

வருதலானுணர்க. படுதல்—போரிற் படுதல் என்பது போலக் கொள்க.

தம்மைப்பெருக்கிக் காட்டிக் கோடலை வேண்டித் தந்நிலைமைக்கு மேலாக வீட்டைப் பெரிதாக இட்டுக் காட்டலுமுண்டாதலான் அங்ஙனம் வீடிடுவாரை நோக்கியது இஃதென்றலும் ஒன்று. இங்ஙனமின்றி அந்தணர், அரசர், வணிகர், வேளாளரென்னும் பலரையு நோக்கிப் பொதுவாக வீட்டைப் பெரிதாக இடாமையினையும் சிறிதாக இடுதலையுமே இது கருதிற்றெனின், அவரவர் பொருளுக்கும் பொருட்குறைக்கும் வேண்டுதற்குத் தகச் சிறுகவும் பெருகவும் செய்தற்குரியாரை ஒருபடியாக மனையிடனியமிப்பதாதலின், அது ஆசிரியர் கருத்தல்லாமை யுணர்க. திருவள்ளுவரும், 'சிறுகாப்பிற் பேரிடத்த தாகி' (குறள். 744) அரசர்க்குக் கூறுமாற்றா னுணர்க. 'பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத் தொருங்குடன் வளைஇ' என நெடுநல்வாடையில் வருதலுங் காண்க.

பொருள் கெடாதபடி மனையிடுக என்பதே இதற்கருத்தா பத்தியாம்.

இனி மேற்கூறிய குணனெல்லாம் நிரம்பியவிடத்து ஒருவன் எல்லோரினும் மிக்கோனெனத் தன்னைத்தானே மதித்துக் கொண்டு தன்னை யாண்டும் பெருக்கிக் காட்டும் இடம்பத்தான் மீதூரப்பட்டுக் கெடுவனன்றே; அங்ஙனம் கெடாஅ தறிவுறுத்தற் கெழுந்தது இஃதெனத் துணிந்து இடம்பம் அடுதலான் இறந்திடாமலிருக்க என்று பொருள் கூறினுமமையும். இடம்பம் இடம்பு என நின்றது. 'விராகெனும் வேலின் வீழ வெகுண்டனன்' என்னுஞ் சிந்தாமணியுள் விராகம் என்பது விராகு என நின்றது போல இதனையுங் கொள்க. யோகம்—யோகு என வருவதும் காண்க. அது தன்னைத்தானே பெரியனாக மதித்து அதற்கேற்ற தோற்றமும் சொல்லும் வினையும் உடையனாதல் அவ்விடம்பத்தான் அடப்பட்டுப் பொருளும் மானமுமிழந்து உயிரும் மாய்வார் உலகிற் பலராதல் காண்க.

இடம்பத்தை நீயட்டு நிலைத்திருக்க என்பது இதற்கருத்தா பத்தியாம்.

இனி இதற்கு, மனையெடுக்குங்கால் ஒருவற்குத் தன்னிராசி இடது புறத்தில் திக்கிலிருக்க எடுக்கலாகாது என்றவாறு. நாட்காலை நீரிடஞ் சுற்றலாகாது என்றுஞ் சொல்வார். மனையை

யுளந்து அறுபத்து நான்கு கூறாக்கி நிருதி மூலை முதல் நான்குந் தள்ளிக் கண்ட இடத்தில் நடுவிரல் நாலரையான பிரமசந்தியும் ஆகாது நீக்கி நின்றவிடத்திலிராசி வலமாக வீமசூத்திரமும் பிரம சூத்திரமும் தள்ளிக் கால் நாட்டுக என்று மனையலங் காரத்திற் கண்டு கொள்க. இதற்கிடம் விசாலமாகவும் சுருக்க மாகவும் ஆகாது என்பாருமுளர்.

19. இணக்கமறிந் திணங்கு

தன்னைக் காத்தொழுகற்கண் ஒருவற்கு வேண்டுவன இவை யென்றும், அவற்றை யிங்ஙனம் இயற்றுக என்றும் நியமிப்பான் எடுத்துக் கொண்டாராகலின்,

''செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு'' (குறள். 781)

என்பதனால் நட்பே சிறந்த காவலாதலின் அதனை இவ்வாறு ஆராய்ந்து செய்க என்கின்றது இஃதென்க.

ஒருவன் தானிடம்பம் இலனாயும் பிறனொருவ னிடம்பனா யிருந்து பெரியன் போலப் பொய்யே தோற்றஞ்செய்வானாயின் அவனை மயங்கித் தன்னொடொத்தவனாக நட்டல் கூடுமன்றே; அங்ஙனம் நட்புக் கெடாமைக்கு இச்சூத்திரமெழுந்ததெனப் பிறி துரைக்கேற்பத் தொடர்புபடக் கூறியதுமமையும்.

இதன்பொருள்: பிறன் உன்னை நட்டலைப் பலபடி யானும் ஆராய்ந்து தெரிந்து பின்னரவனை நட்புச் செய்க என்றவாறு.

இணக்கம்—வாழ்வினுந் தாழ்வினுந் தான் அவன் என்னும் வேற்றுமையின்றி உள்ளத்தாலொத்த பண்புடையராதல். இணக்கம்—குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, ஒழுக்கம், அன்பு முதலிய ஒத்தல் என்பாருமுளர். நாடாது நட்டலிற் கேடுபலவாதலின் அறிந்திணங்கு என்றார். அவனிணக்கம் உள்ளவாறு அறிந்தனை யாயின் அத்தகையானைக் குறைய நட்டலாகாது ஒத்தவன்பே செய்க என்பார் இணங்கென்றார்.

இணங்காமையினை யறிந்து இணங்கற்க என்பது இதற்கருத் தாபத்தியாம்

'ஒன்றீத்து, மொருவுக வொப்பிலார் நட்பு' (குறள். 860) என்பதனால் ஈண்டு இணக்கம் உலகத்தோடொத்தல் எனக் கொண்டு உலகத்தோ டொத்தலை யறிந்திணங்குக எனவும், 'கனவினு மின்னாது மன்னோ வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு' (குறள். 819) என்பதனால் இணக்கம் வினையுஞ் சொல்லும் ஒத்தல் எனக் கொண்டு சொல்வதும் செய்வதும் ஒத்த தன்மையானை யறிந்திணங்குக எனவும் கூறினுமமையும்.

20. தந்தைதாய்ப் பேண்

இது,மேலதற்கோர் புறநடை.என்னையெனின் ஒருவன்பால் நட்டலையறிந்து இணங்குக என்றார்மேல்; அங்ஙனம், உன்னை நட்டலைச் செய்யாதார் தந்தையுந் தாயும் ஆயின் அவர்க்கும் உள்ளம் இணங்காமலொழியலாகுமோ என்றையுறா மற்றெளிவித்தற்கு இஃதெழுந்ததாகலின் என்க.

இதன்பொருள் : நீ ஒரு மகனுளனாதற்குக் காரண மாகிய தந்தையையுந் தாயையும் அவர் பேணாத போதும் நீ விரும்பிப் போற்றுக என்றவாறு.

நீ பேணுதற்குப் பிற காரணங்கள் வேண்டா; நின் தோற்றத் திற்குக் காரணமாய் நினக்குத் தந்தையுந் தாயுமாகிய தன்மையே அமையும் என்பார் மகன் மகள் இவரை இன்றியமை யாத தந்தை தாய் என்னும் பெயர்களையே கூறியொழிந்தார். பேணுதல்—அவர் விரும்பினவற்றை உள்ளமுவந்து புரிதல்.

> '' கையுங் காலுந் தூக்கத் தூக்கு
> மாடிப் பாவை போல
> மேவன செய்யுந்தன் மகன்றாய்க்கே''*
>
> (குறுந்தொகை. 8)

என்றார் பிறரும். அவர் பேணாத போதும் என்பது நீ பேணுக என்றதனாலும் இது மேலதற்குப் புறநடை யாதலானும் பெறப்பட்டது.

---

* 'புதல்வன் றாய்க்கே' என்பது பாடம்.

''உயிரின் மாந்த ரெல்லா மீன்றவர்
வயத்த ராகி இல்லறம் புணர்க''

என்றார் திருத்தக்கதேவரும். தந்தையை முற்கூறினார் தன் தோற்றத்திற்கு முற்படக் காரணமாதலானும் தன் தாயானும் பேணப்படும் சிறப்பானும் என வுணர்க. 'ஈன்றாளோ டெண்ணக் கடவுளுமில்' என்றதனாற் றனக்குத் தலையாய தெய்வமாகிய தாய்க்குந் தலையாய தெய்வமாகிய சிறப்பாற்றந்தையை முற் கூறினாரெனினுமமையும். காளிதாச மகாகவி மகனுக்குத் தந்தையே காரணனென்றுந் தாய் உறையேயென்றும் துணிந்தது காண்க. 'தாயினுந் தந்தையே சிறந்தோன்' என்பது வான்மீக பகவான் கருத்துமாகும். மற்று 'அன்னையு பிதாவு முன்னறி தெய்வம்' என்று அன்னை முற்கூறியதும் மகன் அறிந்த முறை பற்றியேயாம். தன்னைப் பேணாத தந்தையும் தாயும் பேணுதல் கூறியதனால் தன்னைப் பேணுமவ்விருவரையும் பேணுதல் கூற வேண்டாதாயிற்று. பேணுதல் – ஓம்புதலுமாம். 'மன்னுயி ரோம்பி' என்புழிப் பரிமேலழகருரையானுணர்க.

தந்தை தாயரைப் பேணாமல் நின்னைப் பேணற்க என்பது இதற்கருத்தாபத்தியாம்.

ஒருவன் றான் உலகிற்றோன்றுவதற்குக் காரணரான இவ் விருவரையுமே பேணாதொழியின் இவனோா ரியைபுமிலாரை நட்டுப் பேணுதல் யாங்ஙனம் என்னுங் கருத்தால் மேலதனோடு தொடரவைத்தார். 'என்செயினுந் தாயிற் சிறந்த தமரில்லை' (நான்மணி) எனப் பிறருங் கூறினாராதலாற் றந்தையுந் தாயும் தனக்கு விருப்பமில்லாதன செய்தவிடத்தும் அவரிற் சிறந்த தமரிலராகப் பேணி ஒழுக வேண்டுவதே அறநூற்றுணிபென்ப துணர்க. ஈண்டு என்செயினும் என்றதனான் விளக்கமில்லுழியும் பேணத்தக்க தமராதல் குறித்தது காண்க.

21. நன்றி மறவேல்

இணங்காத தந்தையையுந் தாயையும் ஏன் பேண வேண்டுவ தென்றார்க்கு அறிவுறுத்துவது இச்சூத்திரமென்க.

இதன்பொருள் : ஒருவர் உனக்குச் செய்த நன்மை யினை எக்காலத்தும் மறவாது நினைக்க என்றவாறு.

ஒருவன் தான் பிறர்க்குச் செய்த நன்றியை அப்போதே மறந்துவிடல் வேண்டுவதாதலின் ஈண்டு நன்றியென்பது பிறன் தனக்குச் செய்த நன்மையே யாயிற்று.

''கொன்றன்ன வின்னா செய்யினு மவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்'' (குறள். 109)

என்பவாகலின் இந்நன்றி மறவாமை பிறர்க்கு நன்றி செய்தற்கும் பிறர்க்குத் தீங்கிழையாமைக்கும் உபகாரப்பட்டு ஒருவனைத் தூயனாக்குவது உய்த்துணர்ந்து கொள்க. ஒருவன் செய்த நன்றிக்குக் கைம்மாறாக இவன் நன்றியே செய்வது இவன் அவன் செய்த நன்றியை நினைதலானாகும்; அதனான் மறவேல் என்றார். அவ்வாறே நன்றி செய்தற்கு இயலாதார்க்கும் அவர் செய்த நன்றியை மறவாமை இயலுமன்றே; ஆதலான் அதனை உள்ளத்தான் எக்காலத்தும் நினைக என்று கூறியவாறு. மறவாமை என்பது எக்காலத்தும் நினைவதாதலின் வாழ்வினுந் தாழ்வினுமென்று குறிப்பாற் கொள்ளவைத்தாராயினார். சூத்திரத் தொடர்பான் இணங்காதார் நன்றியையும் மறவாமை கூறியவாற்றால் யார்பாலு நன்றி மறவாமையை வற்புறுத்தி னாராயினாரெனவுணர்க.

தந்தையையும் தாயையும் பேணுவது அவர் செய்த நன்றி பற்றி யென்று துணியின் அங்ஙனமே நன்றி செய்தாரெல்லாரையும் பேணுக என்று காட்டியவாறாம். காலத்தானும் இடத்தானும் பயன் தூக்காது ஒருவன் உனக்குச் செய்த தினைத்துணை நன்றியையும் பெரிதாக நினைக்கவேண்டுதலின் சிறிது பெரிது என்று பகுக்காது நன்றியென்றே பொதுப்படக் கூறியொழிந்தார். தாயுந் தந்தையும் நீயொன்று செய்யாமலிருக்கவுஞ் செய்த நன்றிக்குக் கைம்மாறாக மண்ணுலகும் விண்ணுலகும் கொடுத்தாலும்ஒத்தலரிதாதலின் நீ அவர்க்கொன்று செய்துழியும் அவர் செய்த நன்றியை மறவாது நினைக்க வென்றாரெனினு மமையும்.

பிறருனக்குச் செய்த தீமையை அப்போதே மறந்தொழிக என்பது இதற்கருத்தாபத்தியாம்.

நன்றிமறத்தலை நன்றி கோறல் என வழங்கலான் இதன் கொடுமையும், 'ஒருவன் செய்திகொன்றார்க் குய்தியில்லை' எனவும், 'உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' (குறள். 110) எனவும் விதித்தலான் இது கழுவப்படாத பெரும் பாதகமாதலும் கண்டு கொள்க.

22. பருவத்தே பயிர்செய்

தந்தையையும் தாயையும் பேணுதற்குப் பிறர்செய்த நன்றியை மறவாது அவர்க்குக் கைம்மாறு புரிதற்கும், இவ் விரண்டும் செய்யும் தானும் சுற்றமுமினிது வாழ்தற்கு மேற்ற பெற்றியான் ஒருவன் துப்புரவெல்லா முடையனாதல் வேண்டு மன்றே; அங்ஙனம் துப்புரவுடையனாதற்குப் பழிபாவமில்லாத வாயில் கூறுகின்றது இஃதென்க.

இதன்பொருள்: அவ்வப் பயிர் விளைதற்குரிய காலந் தப்பாதே அவ்வப் பயிரினை விளைவிக்க என்றவாறு.

உணவுப்பொருள்கள் நிரம்பினால் ஒருவன் எல்லாத் துப்பரவு நிரம்பினானாதல் பற்றி உலகுக்குணவாகிய பயிரினை உண்டு பண்ணுகவென்றும், அதுவும் அவ்வப் பயிர் விளைதற்குரிய காலந்தப்பாதே செய்கவென்றுங் கூறினார். ஒவ்வொரு பயிரும் முளைத்தற்கும், வளர்தற்கும், கருக்கொள்ளுதற்கும், காய்த் தற்கும், காய்த்தவற்றின் பயன்கோடற்கும் பருவம் பலவா தலானும் இவையெல்லாம் நிகழ்வது பருவந்தப்பாது பயிர் செயத்தொடங்கிய பின்னாதலின் இங்ஙனம் கூறினார். பருவம் தப்பிற் செய்த வினையெல்லாம் வீணாய் வித்துமிழந்து பொருட்கேடுறுதலின் பருவந் தப்பாமையைத் தேற்றேகாரத்தாற் காட்டினார்.

''பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை யார்க்கும் கயிறு'' (குறள், 482)

என்ற திருவள்ளுவர்க்கும் பருவந்தப்பாமை உடன்பாடாதல் காண்க. 'பருவத்தா லன்றிப் பழா' வாதலாற் பயிரினைப் பருவந்தப்பிச் செய்யற்க என்பது இதற்கருத்தாபத்தியாம். பருவம் தெய்வசங்கற்பத்தாற் கூடுவதும், பயிர் செய்தல் ஒருவன் முயற்சியும் ஆதலின், தெய்வ சங்கற்பமில்லாத போது முயற்சியும் தெய்வசங்கற்பமுள்ளபோது முயற்சியின்மையும் வேண்டப்படா வென்று இதனாற் குறித்தாராவர். 'தெய்வமழை' என்று திருச் சிற்றம்பலக் கோவைக் கொளுவின் வருதலாற் பருவமழை தெய்வ சங்கற்பத்தா னுண்டாதலுணர்க. கடவுள் வாழ்த்தினை யடுத்து வான்சிறப்பு ஓதிவைத்த திருவள்ளுவனார்க்கும் இது கருத்தாதல் உய்த்துணர்க.

''. . . . . — வானத்திடரை
ஏரியாம் வண்ண மியற்று மிதுவல்லான்
மாரியார் பெய்கிற்பார் மற்று''

எனப் பெரியார் பணித்தது கொண்டு இதனுண்மையுணர்க. தெய்வ சங்கற்பத்தானாதல் பற்றியும் உலகுக்கின்றியமையாமை பற்றியும் பருவத்தை முற்கூறினார். பழியும் பாவமும் இல்லாது தானும் பிறரும் உடம்பொடு வாழ்தற்கு இன்றியமையாமையான் 'பயிர்செய்' என்றார் பயிரைச் செய்வதல்லது அதன்கட் பயனை உண்டுபண்ண வலியிலாமை பற்றி உன்னாலியன்ற முயற்சியைச் செய்திருக்க என்றவாறாம்.

23. மன்றுபறித் துண்ணேல்

பயிர் செய்யாது வேறுவினைகளானும் ஒருவன் துப்புரவுடையனாகுமன்றே; அவற்றுட் பாவம் விளைப்பதும், பழி விளைப்பதும், தன்னுயிர்க் கிறுதிபயப்பதும் ஆகாவென்று கூறுவானெடுத்துக்கொண்டு இம்மை மறுமை இரண்டுக்கும் கேடாதலின் முதற்கட்பாவம் விளைப்பதனை விலக்குகின்றது இச்சூத்திரம் என்க.

இதன்பொருள் : நீதிமன்றத்துப் பிறருடைமையைக் கொள்ளைகொண்டு துய்த்தல் செய்யற்க என்றவாறு.

மன்று ஒழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழுவாதுயிர்களை நிறுத்தற்கும் அங்ஙனம் வழீஇயினார்க்குக் கழுவாய் வடிவாகிய தண்டம் விதித்தற்கும் உரிய நீதியம்பலம். ஒருவருடன்பாடின்றி வலியானும் வஞ்சத்தானும் அவருடைமையினைக் கவர்ந்துகோடல் பறித்தலாகும். உண்டல் — அநுபவித்தல். 'மன்றிற் கொடும்பா டுரைப்பானும் எச்ச மிழந்து வாழ்வர்' என்பதனா லிப்பாவத்தின் கொடுமை யுய்த்துணரப்படும். யாண்டும் பிறருடைமையைப் 'பறித்தல் பாவமாதலிற் 'பறித் துண்ணேல்' என்றும், அவற்றுள் மிகவுங் கொடுமைத்தாதல்பற்றி 'மன்று பறித்துண்ணேல்' — என்றும் கூறினாரெனக் கொள்க. இஃது 'ஆத்திரேயப் பிராமணனைக் கொல்லற்க' என்னும் வேத விதிக்கு ஒன்றையுங்கொல்லற்க, மானிடரைக் கொல்லற்க, அவருள் அந்தணனைக் கொல்லற்க, அவருள் ஆத்திரேயனாகிய அந்தணனைக் கொல்லற்க என்பதே கருத்தாதல் போல ஈண்டுங் கொள்க. தான் உண்ணலாகாததனைப் பிறர்க்கு ஊட்டுதல்

கூடாதாகலின் உண்ணேல் என்பதனாற் பிறரை ஊட்டேல் என்பதுமுடன் கூறினாராயிற்று.

'பாத்தூண்', 'இட்டுண்டிரும்' என்னும் இடங்களிற்றாம் உண்டற்குரியதனையே பாத்தலும் இடுதலும் குறித்தவாறு காண்க. மன்றுபறிக்கும் வஞ்சகன் பிறரை ஊட்டுவானாதலரிது அதனாலவனையே நோக்கி உண்ணேல் என்றாரெனினு மமையும்.

''ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'' (குறள். 656)

என்பதனாற் பழிவினை செய்து தாயையும் பசியாற்றலாகா தென்பது துணிபாதலால் தான் உண்ணலாகாது என்று கூறு முகத்தாற் பிறரை ஊட்ட லாகாமையுங் கூறினார் என்றலும் ஒன்று. அநீதியே யன்றி நீதிநெறியினும் வாதி, எதிர்வாதி, அறிகரி கூறுவோன் முதலாகியோர் எவர்பாலும் ஒன்று கொண்டு துய்த் தல் தீது என்பார் பொதுவாக 'மன்று' என்றொழிந்தார். 'மன்று பறியேல்' என்னாது, 'மன்றுபறித் துண்ணேல்' என்ற மிகுத்துக் கூறியது ஒருவேளை பசியாற்றும் அளவுக்குரிய சிறிய துப்புரவும் பறித்தலாகாதென்னுங் கருத்தானெனவுணர்க. சிறிதாய உண வளவையும் விலக்கியவாற்றான் எல்லாக் கொள்ளையும் விலக் கியமை உய்த்துணரப்படும்.

பறித்துண்ணும் வேட்கையுடையோன் மன்றின் முறை செய் தானாகாமை 'பொருணசை வேட்கையோன் முறைசெய்தல் பொய்' என்பதனானுணரப்படும். இது நடுவு நிலைமை கெடாது பாதுகாத்தவாறு.

அரசர் மன்றிலமர்ந்து உண்மை முறை செய்தற்கு அவ்வரசர் தெரிந்தளிப்பதனை யுண்ணுக என்பதும் அதனை ஊட்டுக என்பதும் இதற்கருத்தாபத்தியாம்.

இனி, 'மண்பறித் துண்ணேல்' என்று பாடமாயின் பருவத்தே பயிர்செய்தற்கட் பிறர்நிலத்தைக் கவர்ந்துகொண்டு உண்ணற்க எனப் பொருள் கூறுக. இப்பாடத்திற்கும் சூத்திரவியைபு கூறா மலே பெறப்படும்.

24. இயல்புலாதன செயேல்

இது பழிவிளைப்பன ஆகாவென்று விலக்குகின்றது.

இதன்பொருள் : உன் வருணத்திற்கும் நிலைக்கும் இயல்பல்லாதனவற்றைச் செய்யற்க என்றவாறு.

இயல்பலாதன—அவ்வவ் வருணத்திற்குங் குடிக்கும் ஸ்வாபமாக உண்டாதற்குரிய வல்லாத கன்மங்கள். ஒரு குடிக்கியல்பாய கன்மங்கள் அவ்வக் குடிப்பிறந்தார்க்குப் பிறந்த நாடொட்டு மனத்தானுணரப்பட்டுப் பலபடியானும் உடம்பாற் பயிலப் பட்டுத் தலைமை பெறுதல் கண்டது. தொழில்கள் தலைசிறந்து விளங்குதற்கு நம் பண்டையோர் தேர்ந்து நிலையிட்ட முறையிஃ தென்க. இங்ஙனமன்றி அவரவர்க்கியல்பலாதனவற்றை மேற் கொள்ளின் அது முற்றாது பயன்விளையாது தலை சிறவாது பழி பூணுமென்க. கீதாசாரியனும் இதனையே 'ஸ்வதர்மம்' (2 : 33) என்று பணித்தருளினான். அவரவர் வருணத்திற்கும் நிலைக்கும் விதித்த ஒழுக்கத்தினின்று வழுவி எல்லா வினையும் எல்லார்க்கும் உரியவாகுமெனத் தாமே துணிந்து துப்புர வீட்டலுறின் உலகம் தலைகீழாய் மாறிப் பொருளே தெய்வமாய் உயிர்க்கிறுதி பயப்பனவெவையும் வேண்டப்படாமென்று தெளிந்து இவ்வாறு கூறினாரென்க.

பெருவாயின் முள்ளியாரும் இக்கருத்தே பற்றி,

''நல்குர வாற்றப் பெருகினுஞ் செய்யாரே
தொல்வரவிற் றீர்ந்த தொழில்''

என்று இயல்பலாதவற்றை விலக்குதல் காண்க.

''பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யாத்
திருவன்றி வாழ்த லினிது''

என்ற பூதஞ்சேந்தனார்க்கும் இதுவே கருத்தாதல் காண்க. அரசன் இளையனாய் பலவினையும் செய்தற்கு ஏற்ற வலியுடைய னாயினும், அவ்வரசு தொழிலல்லது பிறிது தொழில் செய்தற் குரியனாகான்; அவன் உரிமையல்லாத தொழில் ஒன்றை முயல் வனாயின் அவனுக்கியல்பாய தொழில் கெடுமென்று கொள்க. இதனானன்றே,

''இளைய னாயினு மணிமுடி புனைதல்ன்
அரசர்தொழி லல்லது பிறிதுதொழில் பெறாஅன்''

எனப் பிறருங் கூறினார். இது நவநீதிப் பாட்டியலுரை மேற்கோள். இதனால் இயல்பலாதன பழி விளைப்பனவாதல் நன்குணரப்படும். இயல்பலாதன செய்யின் யார்க்கும் எதிலனாவையென்பது ''ஏதிலா ரென்பா ரியல்பிலார்'' (நான்மணி) என வருதலானறியப்படும்.

இனி, 'இயல்புறைரயா னீன முரையான்' என்புழிப் போல இயல்பு – உயர்பு என்று கொண்டு இயல்பலாதன உயர்பலாதன எனினுமமையும். ஈண்டு உயர்பென்றது தானும் உலகமும் உயர்தற்குக் காரணமாய விருத்தியை.

இயல்புள்ளன செய் என்பது இதற்கருத்தாபத்தியாம்.

இனி, இயல்பலாதன ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் தத்தமதியல்புக்கு ஒவ்வாதன என்றலுமாம். 'இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை' (குறள், 903) என்பதனால் அவரவர்க்கியல்புள்ளன உண்டு என்பது உடன்பாடர்தல் காண்க. 'தாழ்ந்த இயல்பின்மை' என்றதனாற் செயலாதல் பெறப்படும்.

25. அரவ மாட்டேல்

இஃது உயிர்க்கிறுதி பயக்கும் வினையாகாதென்று விலக்குகின்றது.

இதன்பொருள்: ஆடற்குரிய பாம்பினை நீ தலையெடுத்தாடச் செய்யற்க என்றவாறு.

ஆட்டேல் என்றதனால் ஆடற்குரிய பணியாதல் குறித்தார். 'ஆடும்பாம் பாட்டும்' (திரிகடுகம்) என்ப. 'ஆடர வாட்டும் புனிதனார்' என்பது திருப்பாட்டு (திருக்குறுக்கை – ஆளுடைய பிள்ளையார்). அரவம் சிறிதிகழ்ந்திருப்பிற் பயின்றாரையுந் தீண்டலொருதலையாதலின் உயிர்க்கிறுதி பயப்பது தப்பாது என்று கொண்டு அஃதொத்த வினை புரியேல் என்பது இதற்குக் கருத்தாகக் கொள்க.

> ''அளையுறை பாம்பு மரசு நெருப்பு
> முழையுறை சீயமு மென்றிவை நான்கு
> விளைய வெளிய பயின்றனவென் றெண்ணி
> இகழி னிழுக்கந் தரும்''

என்றார் பிறரும். சிறிதிகழின் உயிர்க்கிறுதி பயப்பனவும் உலகுக்குப் பயனற்றன வுமாகிய வினையெவையும் ஆகாவென்று உவமையாற் கொள்ள வைத்து விலக்கியவாற்றான் இது பிறிது மொழிதல் என்னும் அலங்காரமாம். 'இளைதாக முண்மரங் கொல்க' என்று திருவள்ளுவனாரும் (குறள். 879) பிறிதுமொழி தலாற் கூறுதல் காண்க.

> ''கொல்யானைக் கோடுங் குணமிலியு மெல்லிற்
> பிறன்கடை நின்றொழுகு வானு மறந்தெரியா
> தாடும்பாம் பாட்டு மறிவிலியு மிம்மூவர்
> நாடுங்காற் றூங்கு பவர்''

என நல்லாதனார் கூறியவாற்றானிஃதுயிர்க்கிறுதி பயப்பதாதல் கண்டு கொள்க. வடநூல்களில் அரிநர்த்தகன் (பாம்பாட்டி) என்றொரு சாதித்தோற்றங் கேட்கப்படுதலான் அச்சாதியர்க்குரிய அர்வமாட்டுந் தொழிலை விலக்குகின்றாரென்று கொள்ளாது உவமைமுகத்தான் அது போலத் தீங்கு பயப்பனவற்றையே யீண்டுப் பிறிதுமொழிதலான் விலக்கினாரென்று துணியப்படு மென்க. யாவர்க்கும் விலக்கப்படும் கொலை,

> ''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனோடு நேர்'' (குறள். 550)

என்பதனாற் கொடியாரை யொறுக்குமிடத்து வேந்தன்பால் நிகழ்தல்போல யாவர்க்கும் விலக்கப்பட்ட இப்பாம்பாட்டலும் 'ஸஹஜம்கர்மம்' (கீதை. 18:48) பற்றி அச்சாதியர்பால் நிகழு மென்றுகொள்க. பல்வரிக்கூத்திற் 'பாம்பாட்டி' என்றதோர் வகையும் உண்டு (சிலப். 3:13. அடியார்க்கு நல்லார் உரை). 'குறியறியான் மாநாக மாட்டுவித்த லின்னா' என்ற கபிலர்க்கும் குறியறியு மியல்புடைய பாம்பாட்டியை விலக்காமை கருத்தாத லுய்த்துணர்ந்து கொள்க. இனிப் பாம்பாட்டிப் பிழைப்பாரும் உலகுக்குந் தமக்கும் நன்மை பயப்பனவற்றைப் புரிதலையே இவ் வாசிரியர் வேண்டி அவர்க்கும் இதமுரைக்கின்றாரென்றலு மொன்று.

உலகுக்கும் உனக்கும் நன்மை பயப்பனவற்றையே புரிக என்பது இதற்கருத்தாபத்தியாம்.

இனிப் புறங்குளிர்ந்து உள்ளே நஞ்சுடைமையாற் பயின்றாரையுங் கொல்விக்கும் பாம்பு போன்ற தீயாரைத் தலையெடுத்தியங்க

விடேல் என்று கருதினும் பொருந்துமேனும் மேலைச் சூத்திரத் துடனியையாமை தேர்ந்து சொள்க,

26. இலவம்பஞ்சிற் கிட

பாவமும் பழியும் உயிர்க்கிறுதியு மில்லாது துப்பரவீட்டற்குப் பல்லாற்றானு முயன்ற நீ இளைப்பாறுதற்காகவும், பின்னும் நன்கு முயலற்கு வலி பெறுதற்காகவும் இரவின்கண் முயற்சி யின்மையுடையனாய் இளைப்பாறுதற்கு வாயிலாகிய துயிலை மேற்கொள்வையன்றே; அதனை இன்றியமையாமை பற்றிக் கொள்வுழி இங்ஙனம் புரிக என்கின்றது இச்சூத்திரமென்க.

இதன்பொருள் : இலவின் பஞ்சு போலக் கிடந்துறங்குக என்றவாறு.

சிறுகாற்றியக்கத்திற்கும் பஞ்சு கிடவாமல் எழுதல் போல நீ சிறிதியக்கத்திற்கும் உணர்ந்து எழுக என்று விதித்தவாறாம். பஞ்சுமூச்சுப்படினும் கிடவாதெழுதல் போல நீயும் அத்துணை மென்மையாகக் கிடந்து சிறிதோர் அசைவிற்குங் கிடவாதெழுதல் காணுமாறு சிறு துயில் புரிக என்பதே கருத்தாகக் கொள்க. இன்உருபு ஒப்புப் பொருட்டு, பருத்திப் பஞ்சினும் இலவம் பஞ்சு மென்மைத்தாதல் கண்டது. இக்கருத்தே பற்றி 'மெத்தெனப் படுத்த னித்திரைக் கழகு' என்றார். துயில், துன்புறுவார்க்கு இன்புறுத்துவது போலக் காட்டி அவர் விரும்பிக் கொண்டவழி முயற்சியின்மையாற் துன்பத்திடை வீழ்த்தல் ஒருதலையாதலின் இங்ஙனங் கூறினார்.

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்" (குறள். 605)

என்பதனாற்றுயில் துன்பத்திடை வீழ்த்தலுணர்க. வியாசபக வான் மாபாரதத்தில் 'நாய்போற் றுயில்க' என்றதும், 'ஈதென்ன பேருறக்கம்' எனப் பெரியார் பணித்ததும் இக்கருத்தே பற்றி யனவாம்.

பொறையுறைப்பக்கிடந்து பெருந்துயில் கொள்ளாது எப் போதும் ஜாகரூகனாக விருக்க என்பதே இதற்கருத்தாபத்தியாம். 'பஞ்சிற்றுயில்' என்பதூஉம் பாடம்.

இனிப் பஞ்சின்மேற் கிட என்று பொருள்கூறினாருமுண்டு. அது குளிர்காலத்திற்கும், குளிர்தேயத்திற்கும் ஏற்பதன்றா தலானும், எல்லார்க்கும் ஒப்பதன்றாதலானும், தேயந்தோறுஞ் சேக்கை பலவாதலானும், வறியார்க்கியலாமையானும், இவ்வற நூற்கு இஃதோரொழுக்கமாகாமையானும் அஃது ஆசிரியர் கருத் தன்றென்க. 'உறங்கப் புறந்திண்ணை யுண்டு' என்றாருமுண்டு. தரையிற் கிடப்பதினுந் துயிறற்குச் சிறந்ததென்று கொண்டு பஞ் சினைக் கூறலாமெனின்,

> ''தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
> தாமரைக் கண்ணா னுலகு'' (குறள். 1103)

என்று சிறப்பித்தல் பற்றித் தாம் விரும்பிய மகளிர் தோள்மேற் றுயிறலையும் கூறலாமென்க.

இனி, வினையிற் றூயனும் புகழ் சிறந்தவனுமான அருச்சுனன் துயிலை நியமிப்பவன் என்னுங் கருத்தாற் 'குடாகேசன்' எனப் பெயர் சிறப்பதும் ஈண்டைக்கு ஏற்ப நோக்கி கொள்க.

குடாகம்—துயில்; ஈசன்—நியமிப்பவன்.

சிறு துயில் கொள்க என்றது வினையுள்ள பொழுது பெரி தாகவும் வினையில் பொழுது சிறிதாகவும் வேண்டியென் றுணர்ந்துகொள்க. துயிறல் வினையில்லாத நிலையென்று கொண்டு,

> ''ஒரு வினையு மில்லாய்போ லுறங்குதியால்
> உறங்காதாய்''

என்று கல்வியிற் பெரியார் கூறுதல் காண்க.

27. வஞ்சகம் பேசேல்

மனமொழி மெய்கள் வினையோய்ந்து கிடத்தலாகிய துயிறலை இளைப்பாறுதற்பொருட்டு ஜாகரூகனாய்ச் சிறிது புரிந்த நீ கிடவாது எழுந்து அம் மனமொழி மெய்களான் வினை புரியத் தொடங்குமிடத்து அவை தூயவாயியற்றற்கு வாயில் கூறுவானெடுத்துக்கொண்டு முதற்கண் மொழி தூயவாதற்குக் கூறுகின்றது இஃதென்க. நல்லாதனாரும் மொழி, செய்கை, மன மென இம்மூன்றையே,

''வாயி னடங்குத றுப்புரவா மாசற்ற
செய்கை யடங்குத றிப்பியமாம் – பொய்யின்
நெஞ்ச மடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள்''

என்று கூறியது காண்க.

இதன்பொருள் : பிறர் உனக்குச் செய்த வஞ்சனையை வாயான் உரையற்க என்றவாறு.

துயிறற்குமுன் பல்லாற்று முயன்றபோது நீ பலரான் நன்மை செய்யப்பட்டும் வஞ்சனை செய்யப்பட்டும் உள்ளனை யாவை யன்றே. அவற்றுள் பிறர் செய்த நன்மையினும் முற்பட்டுப் பிறர் செய்த வஞ்சனையே நின் நெஞ்சத்திடங் கொண்டதாகும். அதுவே துயிலெழுந்தபோதும் உள்ள நிறைதலான் வாயின் வரத் தலைப்படும். அங்ஙனம் வாயவிழ்ப்பது நின் வாய்க்குத் தூய் தன்மையாதலோடு நின்னைச் சால்புடையனல்லனெனக் காட்டுவ தொன்றாதலின் விலக்கினார். 'தீயார் குணங்க ளுரைப்பதுவுந் தீதே' எனவும், 'பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு' எனவும் வருவன பற்றி இதனுண்மை யுணர்க.

மேற் 'கண்டொன்று சொல்லேல்' என்புழிப் பொய்மைச் சொற்பேசாமை விதித்தாராதலின் ஈண்டு வஞ்சகம் பிறர் செய்த பொய்மையேயாயிற்று எனத் தெளிக. வஞ்சகம் பொய்யாதல்,

''மாலையான் புரிந்து சூடினும் பூங்கொடி நுண்ணிடை
வருந்துமால் மடவாயெனும் வஞ்ச''

என்னும் சிந்தாமணியுட் (கேமசரி. 101) 'வஞ்ச' என்பதற்குப் பொய்வல்லாய் என்று நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றா னறிக. பிறர் பொய்யை வாயானும் பேசாதான் பொய் பேசுபவ னாதலில்லை யென்பது எளிதிற் பெறப்படும் என்க. பேசேல் என்றதனால் இது மொழி குறித்ததென்று தேறப்படும். வாயி னடங்குதல் வஞ்சத்திற்றீர்ந்த பொருள் என்றதனானுமித னுண்மை யுணரப்படும். ஒன்று கண்டு ஒன்று சொல்லுதல் வஞ்சக மாதல் தெள்ளிது. 'அற்றன் றாத லதுதான் மனஞ்செய்தல்' பொய்யென்று மேற்கோள் முன்னரே காட்டப்பட்டது கொண்டு உணர்க.

''துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்'' (குறள். 159)

என்பதனால் இது பேசாமை தூய்மையாத லறியப்படும்.

வஞ்சனையில்லாத நல்லனவுளவாயிற் போக என்பது இதற் கருத்தாபத்தியாம். 'சொல்லா னறிப வொருவனை' (நான்மணி) என்பதனாலுன்னைப் பிறரறிதற்கு வாயிலிருவாதலின் பாது காத்தாரெனவறிக.

இனி, இதற்கு உற்றதுரையாது மற்றொன்று பேசேல் என்றலும் ஒன்று.

"........................—நெற்றென
உற்ற உரையாதார் உள்கரந்து பாம்புறையும்
புற்றனார் புல்லறிவி னார்" (நான்மணி)

என்றதனையும் நோக்குக.

28. அழகலாதன செயேல்

இது செய்கை நாய்தாதற்குக் கூறுகின்றது.

இதன்பொருள்: பிறர் விரும்பும் தன்மையில்லாதன வற்றைச் செய்யற்க என்றவாறு.

அழகு என்பது பிறரான் விருப்பப்படுந்தன்மை; அஃதல்லா தன அழகிலவாயின. அவை இழிந்த கருமங்கள். இவை தந் நிலைக்கு நாணத்தக்கவை யாதலாற் 'செயேல்' என்றார். 'கருமத்நா னாணுத னாணு' என்றதனா லிருக்குமம் பற்றிய தென்றும் இக்கருமம் பற்றிய நாணுடைமையே 'அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு' (குறள். 1014) என்றதனால் அழகு செய்வதென்றும் கண்டு கொள்க. ஈண்டு அழகு செய்தலின் அணியென்று கூறினாரென்று பரிமேலழகர் உரைத்தவாற்றா னுண்மையுணர்க. நீ நாணத்தக்கனவாய இழிதொழில்களைச் செய்யற்க என்றதனால் நீ பீடுபெறுதற்குரிய உயர்வினைகளையே செய்க என்பது இதற்கருத்தாபத்தியாம். உன்னானாணத் தக்க னவும் பிறரான் விரும்புந்தன்மையில்லாதனவுமாகிய செயலாற் பயன்கோட லருமையிற் செய்யேலென்றாரென்க. 'நலனுடைமை யினானுச்சிறந்தன்று' என்பதனால் நலனுடைமையினும் இழி தொழிற்கு நாணிச் செய்யாதிருத்தல் இருமைக்குஞ் சிறத்தலின் விலக்கினார். 'செயேல்' என்றதனால் இது செய்கை குறித்த தென்று தேறப்படும். 'மாசற்ற செய்கையடங்குத றிப்பியமாம்' என்று நல்லாதனார் கூறியதனா னிதனுண்மை யுணர்க.

29. இளமையிற் கல்

இது மனந்தூய்தாதற்குக் கூறுகின்றது.

இதன்பொருள் : இளவயதிலே கல்வியை மனத்திற் கற்றுக்கொள் என்றவாறு.

கல்வியே தாமின்புறுவதூஉம் அதற்கு உலகின்புறுவதூஉம் ஆதலின் உலகான் விரும்பப்படுவதாதல் உணர்க. உலகான் விரும்பப்படுதலான் இதுவே யழகுடையதாதல் தெளியப்படும். 'கல்வி யழகே யழகு' என்றார் பிறரும். இக் கல்வியில்லாதான் உடம்பினழகு இழிக்கப்படுதல்,

''நுண்மாண் நுழைபுல மில்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று'' (குறள் 407)

எனத் திருவள்ளுவனார் கூறியவாற்றானறிக. கல்வியொடு கூடிய இளமை இங்ஙனமின்றிப் பாராட்டப்படுமென்பது 'ஒரு குடியிற் கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றா னிளமை பாராட்டு முலகு' என்னும் நான்மணியானறிக.

'வினைத்திட்ப மென்பதொருவன் மனத்திட்பம்' (குறள். 661) என்பதனாலொருவன் வினை தூய்தாய் வலியதாதல் அவன் மனம் தூய்தாய் வலியதாயின வழியது ஆதலானும் மனந்தூய்தாய் வலியுறுவது பொருளியல்புகளை உள்ளவாறுணர்ந்த வழியல்லதில்லாமையானும், அங்ஙனம் உள்ளவாறுணர்வது கல்வி யொன்றானேயாவதானும் கல்வியென்பதும் மனத்தின் என்பதும் அவாய் நிலையான் வந்தன. 'நெஞ்சம் புணையாக் கலைமாக் கடனீந்தி' என்றார் சிந்தாமணியினும். மேல்வஞ்சகம் பேசுதலும் அழகலாதன செய்தலும் குற்றமென்று விலக்கியது போல, 'இளமைப் பருவத்து கல்லாமைக் குற்றம்' (நான்மணி) என்பதுபற்றி அக்குற்றமொழியக்கற்க என்றார் என்றலு மொன்று.

''நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமைபேதை தொழில்'' (குறள். 833)

என்றதனாற் பிறவற்றோடு இழி தொழிற்கு நாணாமையும் கல்வி யறிவில்லாத பேதை தொழிலாதலறியப்படுதலான் அழகலாதன செய்யாமைக்கு இளமையிலே கற்றுக்கோடல் வேண்டப்பட்டதென்க. இளமையே இந்திரியங்களெல்லாம் திடநிலையிலுள்ள பருவமாதலின் அதுவே அறிவைக் கொள்ளுதற்குந் தரித்தற்கும் ஏற்றதென்று கருதிக் கூறினார்.

மற்று, 'ஒதுவதொழியே'லென்றதனோடு இதற்கு வேற்றுமை யென்னையெனின் அது சாந்துணையும் ஒழியாதோதுக என்றது; இஃது அவ்வோதுதலை எப்போது தொடங்குவதென்றார்க்கு இளமையிலே தொடங்குக என்று கூறியது. முன்னைய தறநூல் எனவும் இது பொருணூலெனவுங் கூறினுமமையும்; 'பன்னூலுந் தேர்தற் பொருள பொருள்'(நான்மணி) என்பதாற் பொருளுக்கு நூல்வேண்டுவதறிக. இனி'நூல்பலகல்' ,வித்தைவிரும்பு' என்பன வற்றுக்கும் வேறுவேறு கூறப்படும். ஆங்காங்குக் காண்க.

இனி மனமொழி மெய்களா னொழுகப்படும் ஆசாரங்களெல் லாம் நூலின் விதிவிலக்கு வடிவாகவிருத்தல் பற்றி, ஒருவன் ஒழுக்கத்திற்குக் கல்வியறிவு இன்றியமையாததென்று கொண்டு ஒழுகலாற்றினில்லாது வாளா நாள் கழியாமை இளமை தொட்டே நூல்களைக் கற்றுக்கொள் என்றாரெனினுமமையும். 'ஆசாரமென்பதுகல்வி'என்றார்விளம்பிநாகனாரும்(நான்மணி). 'எண்ணி னிளமையோ டொப்பதூஉமில்' என்ற உயர்ந்த இளமைப்பருவத்தே, 'ஒருவற்குக் கற்றலின் வாய்ந்த பிற வில்லை' என்ற உயர்ந்த கல்வியையே கொள்க என்று கருதினா ரென்க. கல்வி மனந் தூய்தாதற்கு வாயிலென்பது,

''கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்தான்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
யிப்பா லுலகி னிசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த உலகம் புகும்''

என்பதனான் உணர்க. இளமையிலே கற்காது போகற்க என்ப திதற்கருத்தாபத்தியாம் 'பொய்யின்றி நெஞ்ச மடங்குதல் வீடாகும்' என்றார் நல்லாதனாரும்.

30. அறனை மறவேல்

இஃது, ஏன் இளமையிலே கற்கவேண்டுவதென்றாற்கு அவ் விளமையையுடைய யாக்கை நிலையாதென்று காட்டுவாராய் அந்நிலையாமையைச் செய்ய ஓரறக் கடவுளுண்டென் றுணர்த்து கின்றதென்க.

இதன் பொருள்: அறக்கடவுளுண்மையை மறவா திருக்க என்றவாறு.

அறக்கடவுள் – தருமதேவதை. 'காயுமே யென்பி லதனை யறம்' என்புழிப் பரிமேலழகர், அறம்–அறக்கடவுள் என்று உரை கூறியதனானறிக. உயிர் கோடற்குரிய அதிகாரி புருடன் அவனே என்க. 'உயிருந்தருமனையே நோக்கும்' என்றார் பெரியாரும். அறக்கடவுள் உண்மையை மறந்தானாயின் தன்னை யென்றுமுள னாகவே யெண்ணித் தன்னைத்தானே மதித்துக் குற்றக் கொள் கலனாய் ஆள்வாரிலியாய் நோதக்க செய்யுஞ்சிறுபட்டியா யொழிதலொருதலையென்க. இராஜ தண்டத்துக்கஞ்சி உல கியற்கு மாறுபடாதொழுகுஞ் சிறுவர்போலவே யமதண்டத்துக் கஞ்சிப் பாவத்தினின்று விலகி யொழுகுவாருமுண் டென்க. இதனான் இம்மறவாமையிற் பயனுண்டாதலறிக. நாளும் பல்லோர் மாய்தலைக் காண்டலான் யமனுண்மை தெரியப் பட்டால் அதனை மறவாமையே வேண்டுவதென்று 'மறவேல்' என்றார் என்க. 'இழுக்க லியல்பிற் றிளமை' (திரிகடுகம்) ஆதலின் அவ்விளமையிலே கற்றலும் அறக்கடவுளை மறவாமை யும் வேண்டப்பட்டன வென்க.

பொருணூல்களைக் கற்றுக்கொண்டதனாற் பொருள்ட்டற் குரிய உபாயங்கள் பலவற்றையும் ஆசையாற் றன் நிலையினும் மிகுத்தெண்ணி முயலப்புக்குத் தம் ஆயுள்போதாது முடிவாரும் உண்டாதலான் அவர்க்கு அறிவுறுத்துவது இஃது எனினும் அமையும்.

''ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல'' (குறள். 337)

என்றார் தேவரும். 'காலன் வரவொழிதல் காணின் வீடெய்திய பாலினூ லெய்தப் படும் (ஏலாதி),'பெரியார்நூல் காலற்கு வாய் காப்பு' (ஏலாதி) என வருபவனபற்றிக் கற்றதன் பயனாகக் காலனை மறவாது அவனை வேறற்கு முயல்க என்று கொண்டு கல்வியையும் யமனை மறவாமையையுஞ் சேரவைத்தாரென்றலு மொன்று. இளமையின் வலியால் அறக்கடவுளுண்மை மறந்து போகேல் என்று இளமைக்குச் சேரவைத்தார். அறக்கடவு ளுண்மையினை எப்போதும் நினைக்க என்பது இதற்கருத்தா பத்தியாம்.

இக் கருத்தானன்றே 'கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வி னிதே' என்றார் பிறரும் எனக் கொள்க. கூற்றம் வரவுண்மை சிந்தியாதான் பாவத்தை துணிந்து செய்தலியல்பாம்.. அதனா னிரையம் புகுதல் ஒருதலை யென்பது நல்லாதனார், 'கூற்றம்

வரவுமணமை சிந்தியா நானும் . . . . நிரயத்துச் சென்று வீழ்வார்' என்று கூறியது கொண்டு தெளிக. நாள்கள் பாழாகவிடாது கிடைத்த வளவிற் சாதற்கு முன்னே கற்றல் நன்றாதலின் கல் என்றதன்பின் யமனை மறவேல் என்றாரெனினுமமையும். கல்வியா லறநெறியறிந்தால் கூற்றத்திற்கு அஞ்சுவானாதல் வேண்டுமென்னுங் கருத்தாற் பிறரும், 'அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்' (நாலடி) என்றது காண்க.

31. அனந்த லாடேல்

மேல் இளமையான் நினையாமற் போவதனை நினைவூட்டினார். இதனான் அவ்விளமையினுண்டாந் தீச்செயலைப் பரிகரிக்கின்றார்.

இதன்பொருள் : கட்செருக்கிலலையற்க என்றவாறு.

அனந்தல்—கட்செருக்கு. 'அனந்தர் நடுக்க மல்லதி யாவதும்' என்றார் பொருநராற்றுப்படையினும். அனந்தல் — அனந்தர் போல் களியாட்டமாடற்க என்பது கருத்தாம். 'இளையனாய்க் கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் . . . . உள்ளன போலக் கெடும்' என்பதனாலிக்கட்செருக்கு உண்பானையேயன்றி யவன் குடிப் பிறப்பையும் கெடுத்தலொருதலையாகலின் 'ஆடேல்' என்றாரென்க. 'நஞ்சுதான் கொல்வதுண்டா னரகினைப் பயவாதன்றே' (கம்பநாடார்) என்பதனாற் கள் நரகந்தருவதுணரப் பட்டது. அந் நரகுய்ப்பான் அறக்கடவுளுண்மை யுணர்ந்து அவன் உன்னை நரகுய்க்குமாறு ஆடற்க என்றவாறாம். இதனான் மேலதனோடியைபு முணரப்படும். அனந்தல் பொருள் கொடுத்து மெய்யறியாமை யெய்தியதாதலின் இதுபொருட் கேடும் அறிவுக்கேடுமாதல் கண்டதாலும் விலக்கினாரென்க. 'களிமடி மானி காமி கள்வன்' என்பதனாற் களி கல்விக்கு முந்துற விலக்கப்படுதலும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

அறியாமை கொண்டு மகிழற்க என்று இதனான் விலக்குதலான் அறிவுகொண்டு மகிழ்க என்பது இதற்கருத்தாபத்தியாம் என்க.

இனி, 'அனந்தற் பறை' என்புழிப்போல அனந்தல்—மந்தமெனக் கொண்டு கூறினுமாம். மந்தமாவது வினைகளை விரைந்தியற்றாது தாமதித்திருக்குந் தன்மை; இதனை 'நெடுநீர்' என்பார் திருவள்ளுவனார். அறக்கடவுளுண்மையறிந்தால் வினைகளை விரைந்தியற்றிப் பயன் கொள்ள வேண்டுவதென்பது கூறினார்.

'சலதியோடாடி' என்னுஞ் சிலப்பதிகாரத்திற்போல ஆடுதல்—உடனாதல் என்று கொண்டு மந்தத்திற்கு உடனாகற்க என்றலு மொன்று. இளமையிற் கற்றுவைத்தும் அறக்கடவுளை மறவா திருந்தும் கள்ளொன்றுமருந்துவையாயின் உன்னாற் கூறப் படுவன நன்மையும் இன்றாவாம் என்று உணர்க. 'கருமம் கள்ளுண்பான் கூறும் பொருளின்னா' (கபிலர்) என்றார் புலனழுக்கற்ற அந்தணாளரும். கள்ளைச் சொல்லாது அதனா லுண்டாகும் அவந்தலையே கூறினார் அது விளைக்குந் தீங்கு அதுவென்று அதனை விலக்குதற் காரணமு முணர்த்தற்கு.

32. கடிவது மற

இதுவும் நரகவேதுவினை விலக்குகின்ற தென்க.

இதன்பொருள் : நீ கற்ற நூல்கள் கடிவதனைச் செய்ய நெஞ்சானு நினையாது மறந்தொழிக என்றவாறு.

கடிவது, 'கடிந்த கடிந்தொரரார் செய்தார்க்கு' (குறள். 658) என்புழிப்போல நூலகளாற் கடியப்படுவதாயிற்று. நூலோர் கடிந்தவெல்லாம் தூயவல்லாதனவாமென்பது ஆண்டுப் பரிமேலழகர், 'அவை தூய வன்மையின்' எனவுரைத்தவற் றானுணரப்படும். மேல் 'அனந்தலாடேல்' என்று கள்ளொடு வைத்துக் கடியப்படுவது பொருள்பற்றியும் காமம் பற்றியும் உண்டாம் களவே என்று கொள்க. பிறன் பொருளைக் களவு கொள்ள உள்ளுதலும் அங்ஙனமே பிறன் பொருளை நயத்தலும் ஒருவன் உள்ளத்தாற் செய்யும் பாவமாதலின் அப்பாவமெய் தாமைக்கு 'மற' என்றாரென்க. 'கள்ளாமை வேண்டுங் கடிய வருதலான்' (நான்மணி) என்ற விளம்பிநாகனார் கருத்தையு மிதற்கேற்ப நோக்கிக் கொள்க. பிறனுக்குரிமையாகிய தொன்றின் கண் மனஞ்செல்லாது நிறுத்தும் வன்மையே யீண்டு வேண்டப் பட்டதென்று இதனை நிறை என்னுங் குணன் கூறுகின்றதென் றார்க்கும் இதுவே கருத்தாதல் காண்க.

நூல்கள் கடியாததனையே செய்யநினைக என்பது இதற் கருத்தாபத்தியாம்.

இனிப் பிறரைக் கடிவதனை மற என்பாரும், நூல்கள் கடிவ தாகிய பாவத்தை மற என்பாரும் உளர்.

'எனைத்தொன்றுங் கள்ளாமை காக்கதன் னெஞ்சு' (குறள். 281) என்பது பற்றி 'மற' என்று கூறினார். 'கள்ளார்க்குத் தள்ளாது புத்தே ளுலகு' (குறள். 290) என்பதனால் இக் களவு மறந்தார்க்குப் புத்தேளுலகு பயனாதல் போல மறவாதார்க்கு நரகலோகம் பயனாதல் அருத்தாபத்தியாற் றுணியப்படுதல் காண்க.

33. காப்பது விரதம்

மேல் கடிவதாகிய களவு பிறனுரிமையை வஞ்சித்தலான் பிறனுக்குத் துன்புறுத்துவதாய்த் தன்னை இம்மை மறுமைகளிற் றுன்புறுத்துவதேயாதலின் அங்ஙனந் துன்புறாது இருமையினு மின்புறுவார் வேண்டின் இதுவே கொள்க என்கின்றது இஃதென்க.

இதன்பொருள் : எவ்வுயிரையும் பாதுகாப்பதுவே ஒருவற்குத் தலையாய நோன்பாம் என்றவாறு.

விரதமென்பது காப்பது என்றாலும் இப்பொருளே பயக்கும். உயிர் காவாமை விரதமாகாதென்பது இதற்கருத்தாபத்தியாம். மேற்கடியப்பட்டதாகிய களவுக்கு விடயமாகிய பிறனுடைய பொருளும், பெண்டும் அடங்கக் காப்பதென்றொழிந்தார். காப்பது அவரவருரிமை அவரவர்க்கு ஊறதாமாறு பாதுகாத் தொழுகுதல். ஈண்டுப் பிறர் உடல், பொருள், ஆவி மூன்றும் இயன்றவாறு காப்பதனையே கருதினாரென்று கொள்க. விரதம் என்பது மனமொழிமெய்கள் தூயவாதற்குப் போற்றும் நோன் பொழுக்கம். பட்டினி முதலிய விரதங்களும் ஜீவஹிம்ஸை யினின்று நீங்கு முகத்தானும் தனக்குற்ற துன்பத்தைப் பொறுக்கு முகத்தானும் பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாது காத்தற்கே விதித்தவாறென்றுய்த்துணரப்படும்.

'உயிரோம்புத ஞூலோர் தொகுத்தவற்று ளெல்லாந் தலை' (குறள். 322) என்றதனாலிது தலையாய விரதமெனப்பட்டது. இது வசிட்டன் அந்தணனென்றவிடத்து மற்றை யிருடியர் அந்தணரல்லாரென்பது கருத்தாகாது வசிட்டன் தலையாய அந்தணன் என்பதே கருத்தாமாறு போலக் கொள்க. 'நோன் பென்பதுவே கொன்று தின்னாமை' என்றதூஉம் பிறவுயிரோம் புதலையே நோக்கி நோன்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது வென்று கருதியதாகும்.

இக்காப்பதென்னும் வினையே பரதெய்வகாரியமாதலின் அத்தெய்வத்தைச் சேர்தற்கு அதுவே தலையாய நிட்டையாக வேண்டப்பட்டதென்க. விரதம் பரலோகத்திற்கு உபாயமாவதொன்று. அச்சொல்லாற் கூறியதனாலும் இக்காப்பதின் சிறப்பு உணரப்படும். 'காப்பாற்று மன்னவன் மக்கட் கிறையென்று வைக்கப்படும்' (குறள். 388) என்ற திருவள்ளுவனார்க்கும் இவ்வினையொன்றே கடவுள் வினையென்று துணிபாதல் பெறப்படும். நிக்கிரகமும் அநுக்கிரமாதலானும் வீட்டினும் நாட்டினும் ஒப்ப நிகழ்த்துங் காரியமாதலானும் இக்காப்பின் றலைமை எளிதிலறியப்படும். இந்திரன் முதலியோர் செல்வம்பெற்றும், தன்னுயிர் தாரறப் பெற்றும், இறைமையைப் பெற்றும் இன்புறுதற்கு எல்லார்க்கும் தலைமையாய விரதமாக வேண்டப்பட்டது இக்காப்பதே என்று கொள்க.

34. கிழமைப்பட வாழ்

இது மேற்கூறிய காபபினை இங்ஙனம் புரிந்து வாழ்க என்கின்றது.

இதன்பொருள் : யாரும் உனக்கு உரிமையுடையாராமாறு வாழ்க என்றவாறு.

நட்டாரேயன்றிப் பகைஞர் ஏதிலர் எல்லாம் சுற்றம் போல உரிமையாராமாறு கண்ணோடி வாழ்க என்றதாம். 'கண்ணோட வல்லார்க் குரிமை யுடைத்திவ் வுலகு' (குறள். 578) என்றதனையும் நோக்குக. நீ காப்பாயாக வுயர்த்தும் பிறர் காக்கப்படுவாராக இழித்தும் கருதப்படாமல் பிறர் தமக்கு வேண்டியன தாமே கொள்ளும் உரிமையுடையராக நினைக்கும் வண்ணம் அத்துணையெல்லார்க்கும் எளியனாய் வாழ்க என்றவாறாம்.

> ''ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
> பேரறி வாளன் றிரு'' (குறள். 215)

என்ற திருவள்ளுவனார் கருத்தையும் இதனோடு வைத்து நோக்கிக்கொள்க. 'யாதுங் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு' (திருக்குறள். 801)என்புழிக் கிழமையாற் செய்வன கூறுமிடத்துப் பரிமேலழகர், 'தமக்கு வேண்டியன தாமே கோடலும், பணிவச் சங்களின்மையும்' சேர்த்துரைத்தவாற்றான் கிழமைப்படுதல் இஃதென்று தெரிந்துகொள்க.

கிழமைப்படாயாயின் வாழ்வாயல்லை என்பதிதற்கருத்தா பத்தியாம்.

பகையும் அழுக்காறும் பெருக்குமல்லது வாழ்வுண்டாகா தென்பது கருத்து.

35. கீழ்மை யகற்று

மேற் கிழமைப்பட வாழ் என்றார். அங்ஙனம் வாழ்தற்கட் சிலர்க்குண்டாம் இழிசெருக்கினை ஒழிக்க என்கின்றது இஃதென்க.

இதன்பொருள் : கயமைக் குணத்தை உன்கண் வராமற் சேய்மையிலகலச் செய் என்றவாறு.

கீழ்மை—கீழ்மகனது தன்மை. அது 'முந்திரி மேற் காணி மிகுமாயிற் கீழ்தன்னை யிந்திரனா வெண்ணிவிடும்' (நாலடி.) என்றபடி தன்னைத்தானே மதித்திறுமாக்குந் தன்மை அஃது ஓரோர்கால் உன்கண் எய்தவருமென்றும், அதனை யறிந்து வாராது அகலச் செய்க என்றும் கூறினார். பிறவுயிரைக் காத்தற்கு ஏற்ற பெற்றியின் தம்மைத் தெய்வம் படைத்துள்ள தென்று நன்றி பாராட்டாது தாமே தம் வலியாலெல்லாமுடைய ராகவும் தம்மாற் காக்கப்படுவார் தனக்குப் புண்ணியந் தந்து போம் உபகாரகரென்னாது தம்மிற்றாழ்ந்தாராகவும் நினைந் திறுமாப்பது கயவர் தன்மையென்க.

''தேவ ரனையர் கயவ ரவருந்தாம்
மேவன செய்தொழுக லான்'' (குறள். 1073)

எனவும்,

''அகப்பட்டி யாவரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்'' (குறள். 1074)

எனவும் வருந் திருவள்ளுவர் கூற்றான் கயவர் நியமிப்பாரின்றி யொழுகலும் இறுமாத்தலும் கண்டு கொள்க. 'கீழ்தன் மனம் புரிந்தவாறே மிகும்' என நாலடியினும் வந்தது.

மேலோரது தன்மையை யெய்திக்கொள் என்பது இதற் கருத்தாபத்தியாம்.

அஃதாவது, கண்ணபிரான் ஸ்ரீகீதையில் தன்னிரந்தாரெல்லாந் தனக்கீத்தவரென்று திருவாய் மலர்ந்தாங்கு உன்னாற் காக்கப்பட்டவரெல்லாம் உனக்கினிதளித்தவராக நினைந்திருக்கும் பெருந்தன்மை என்க. உனக்குப் புகழும் புண்ணியமும் தருவாராக நினைக்க என்பதாகும்.

36. குணமது கைவிடேல்

மேற்கீழ்மையகற்று என்றதனருத்தாபத்தியாற் போந்த மேலோரது குணங்களை யகற்றா நிலையையே பின்னும் வற்புறுத்துகின்றது இஃதென்க.

இதன்பொருள்: குணமென்று சிறப்பித்துச் சொல்லப் பட்ட அதனைக் கொள்ளா தொழியற்க என்றவாறு.

மேலருத்தாபத்தியாற் போந்த மேலோரது குணமாதலின் 'அது' என்று சுட்டினார். 'நல்லார் தொடர்கை விடல்' என்புழிப் பரிமேழலகர், கைவிடல்—கொள்ளாதொழிதல் என்றார். கீழ்மை யகற்றியவளவே ஒருவற்குப் போதாது. மேன்மைக் குணனும் உளனாக வேண்டுவதென்னுங் கருத்தானிது கூறினார். 'குற்றமின்றிக் குணம் பெருக்கி' என்பது பெரியாழ்வார் திருவாக்கு. 'குற்றமில் குணங்களொடு கூடு மடியார்கள்' (கருப்பறியலூர்) என்பது ஆளுடைய பிள்ளையார் திருப்பாட்டு. 'குணநலஞ் சான்றோர் நலனே' (குறள். 982) என்பதனாற் சான்றோர் நலனே குணநலனாத லறிக.

இனிக் குண மதுகை—குணமாகிய வலி எனினுமமையும். ஒருவற்கு வலியாவது அவன் குணனேயன்றி அவன் செல்வம் முதலியனவில்லையென்க. 'குணமென்னுங் குன்று' (குறள். 29) என்று திருவள்ளுவனார் குன்றாக உருவகப்படுத்தியதனால் குணனை வலியுடைத்தாகிய மலையாக ருவகப்படுத்தல் கண்டு கொள்க. குணனை வலியென்று கூறியதனால் மேற்கூறிய கீழ்மை வலியின்மை யென்பதுங் கருதினாராவர். திறனில்லார் தஞ்செல்வத்தை வலியாக நினைத்திருப்பரென்பது, 'திருமதுகையாகத் திறனிலார் செய்யும் பெருமிதம்' எனவரும் நாலடியானுணர்க.

37. கூடிப் பிரியேல்

மேற் கீழ்மையை அகற்றிக் குணத்தைக் கைவிடாமை கூறினார். அக்கீழ்மையும் குணமும் பிறர் பிறர் உளராவரன்றே, அவர்பால் இங்ஙனம் ஒழுகுக என்கின்றது இஃதென்க.

இதன்பொருள் : கீழ்மையுடையாரைக் கூடிக் குண முடையாரைப் பிரிதல் செய்யற்க என்றவாறு.

இது கொன்று தின்னற்க என்று கோறலையும், கொன்றதைத் தின்றலையும் விலக்குவது போன்றது ஒன்று.

> ''மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றீத்தும்
> ஒருவுக ஒப்பிலார் நட்பு'' (குறள். 800)

என்புழி ஒப்பிலாரைக் கூடின் அவர்க்கு ஒன்று ஈத்தும் ஒருவுக என்று விதித்தலான் கூடாமைக்கும் பிரியாமைக்கும் உரியார் மேற்சூத்திரங்களிற் கூறப்பட்ட கீழ்மையும் குணமும் உடையார் என்று துணிந்தாம்.

இனி, ஒருவரைக் குணங்கண்டு கூடி அவர் கீழ்மை கண்டு பிரியற்க என்றலுமாம்.

உலகத்து மக்கள் எல்லாம் குணமும் குற்றமும் உடையரல் லாமல் இரண்டனுள் ஒன்றேயுடையார் இவராதலின் குணமிகுதி கண்டு கூடி, அவரது குற்றச்சிறுமைகண்டு பிரியற்க என்பது கருத்தாகக் கொள்க. இங்ஙனங் கொள்ளாக்கால் குற்றமேயிலர் உலகத்தே இல்லாமையான் ஒருவன் யாரொடும் பிரிய வேண்டு வதேயாமென்க.

இனி,

> ''உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்'' (குறள். 394)

என்பதனாற் குணமுடையாராகக் கூடின் உவத்தலும், அவரைப் பிரியின் உள்ளுதலும் நேர்தலான் மேலைச் சூத்திரத்திற் கூறப் பட்ட குணமுடையார் பிறரைக் கூடுவதன்றிப் பிரிதலைச் செய்யற்க என்றலுமாம்.

இதற்கு மனம் வேட்டுழி ஒருத்தியைக் கூடி வெறுத்துழிப் பிரியற்க என்பாருமுளர். 'புணர்பாவை யன்[illegible] பிரிவின்னா' (கபிலர்) என்ப

கீழ்மைக் குணமுடையாரைக் கூடாமற் பிரிக என்பதும், மேன்மைக் குணமுடையாரைப் பிரியாமற் கூடுக என்பதும் இதற்கு அருந்தாபத்தியாம்.

38. கெடுப்ப தொழி

மேற் கீழ்மைக்குணமுடையாரைக் கூடாதிருக்க என்றார்; இஃது அவர்க்குத் தீங்கிழையாமை கூறுகின்றது.

இதன்பொருள் : அக்கீழ்மையரைக் கெடுக்க நினைப்பதை உன் நெஞ்சினின்று ஒழித்துவிடுக என்றவாறு.

கீழ்மையரையே கெடுக்க நினையானுழைக் குணமுடையோரைக் கெடுக்க நினைப்பதற்கு இடமேயில்லை என்பது தெளிந்தது.

''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு'' (குறள். 204)

என்பதனாற் பிறனுக்குக் கேடு நினைப்பதே குற்றமாய் அறக் கடவுளைத் தனக்குக் கேடு சூழச் செய்வதாதலின் கெடுக்க நினைப்பதொழி எனப்பட்டது. உடலாற் செய்யப்படும் வினையெல்லாம். 'உடல் சிந்தைவச மன்றோ' (கம்பநாடர்) என்பதனால் உள்ளம் சிந்தித்த பின்னராதலின் கெடுக்க நினைப்பது என்று கொள்ளப்பட்டது. கெடுப்பது என எதிர்காலச் சொல்லாற் கூறியதனானும் இஃது உள்ளத்துப் பிறன் கேடு சூழ்வதேயாமென்று தெளிக.

இயலுமேல் அக்கீழ்மையாளரையும் திருத்தி எடுப்பதை எண்ணுக என்பது இதற்கு அருத்தாபத்தியாம்.

39. கேள்வி முயல்

முற்குணமுடையாரைப் பிரியற்க என்று கூறியது கொண்டு அவர்பால் பிரியாமல் இன்னது செய்க என்கின்றது. இஃது கீழ்மையுடையார் பக்கலிங்ஙன மொழுகுக என்றதன் பின்னர்க் குணமுடையார் பக்கல் இது செய்க என்றவிற் தொடர்பு தெளிந்து கொள்க.

இதன்பொருள்: குணமுடையார் வாய்ச்சொற்களைக் கேட்டலை முயன்று கொள்க என்றவாறு.

கெடுப்ப தொழிவது 'அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு' என்று குணமுடையார் வாய்ச்சொற் கேட்டலானன்றே இதனோடியையக் 'கேள்வி முயல்' என்றாரெனினும் அமையும். கேள்வி—குணமுடையார் கற்றனவும், கேட்டனவும், அநுபவித்தனவும் ஆகிய உண்மைப் பொருள்களைப் பற்றியன. 'பிறர்க்கின்னா செய்தலிற் பேதைமை யில்லை' (அறநெறிச்சாரம்) என ஓதி அறிவுறுத்த வல்லராவரே யாதல் காண்க. 'கேள்வியான் ஞானங் கெழுமுமே' என்பவாதலின் ஞான வாயிலான் கேள்வியை நாளும் முயன்று கொள்க என்றாரென்க. கற்றன துணையாகத் தானே பிறர்க்குபதேசிப்பவனாகாது குணமுடையாரை அறிந்து எய்திப் பிரியாது வழிபட்டு, அவரமயம் தெரிந்து, அவர்பால் இதங்கேட்கவேண்டுதலின் மடியாது முயல்க என்பது கருத்தாம். 'கற்றலிற் கேட்டலே நன்று' என்றார் பிறரும். '..........' (சாந்தோக்கியம் 5 : 4) என்று வேதமும் கேள்வியைச் செல்வமெனச் சிறப்பித்தது. 'செவிச்செல்வம் செல்வத்துட் செல்வம்' (குறள். 411) என்று திருவள்ளுவனாரும் இதைச் சிறப்பித்தார். இதனால் கேடில் விழுச்செல்வமே முயன்று கொள் என்றவாறாம்.

கேளாமைக்கண் மடியற்க என்பது இதற்கு அருத்தாபத்தியாம்

''அவ்விய மில்லா ரறத்தா ருரைக்குங்காற்
செவ்விய ரல்லார் செவிகொடுத்தும் கேட்கலார்''

(நாலடி) என்று கேளாதார் இகழப்படுதல் காண்க.

40. கைவினை கரவேல்

இது கேள்வியை முயன்று கொண்ட நீ கேட்டவாறு ஒழுகுக என்கின்றது. 'அறநெறி சேர்தற்குச் செய்க பெருநூல்' (திரிகடுகம்) என்றதனால் நூல் கேள்விகள் அறநெறி சேர்தற்கே யாதல் காண்க. 'ஆசார மென்பது கல்வி' என்பது நான்மணி.

இதன்பொருள்: ஆசாரத்தோடு கூடிய கருமங்களை ஒளியாமற் புரிக என்றவாறு.

கை, ஒழுக்கம், ஆசாரம் என்பன ஒரு பொருட் கிளவி. கையாறு—ஒழுக்கநெறி எனப் பொருள்படுதல் கொண்டுணர்க (குறள். 627). இவ்வாசாரக் கருமங்கள் வருணத்திற்கும், நிலைக்கும், காலத்துக்கும், இடத்துக்கும், சத்திக்குந் தக்கன வாய்ப் பலதிறப்பட்டிருக்கும். இவையெல்லாம் கேள்வியானே குணமுடையார்பால் அறியத்தக்கனவேயாம். இவற்றைக் கரத் தாலாவது செய்யற்குரியனாகவும் இயல்பவனாகவும் இருந்தும் செய்யாது மறந்தும்,செய்தார் வேடம் பூண்டும் ஒளித்தொழுகு தல். 'மாண்டார் நீராடி மறைந்தொழுகு மாந்தர் பலர்' ஆதல் காண்க. 'ஆசாரத்தைத் தலையாகக் கொண்டன அறங்கள். அவ் வறங்கட்கு பயனளிப்பவன் அழிவில் கடவுள்' என்பது முதுமொழி யாதலின் வினையை ஒழுக்கத்தோடு சார்த்தி எல்லாங் காண வல்ல தெய்வம் பயனளிக்கும் வண்ணம் கரவாதுபுரிக என்றா ரென்க. கைவினை—தன்கையானே செய்யப்படும் கருமம் எனக் கொண்டு இதையே ஸ்வதர்மம் எனவும்,கை என்பது 'கையறியாப் பேதை', 'கையறியாமை' (குறள். 925) என்னுமிடங்களிற் போலச் செய்வது என்று கொண்டு கைவினை செய்வதாகிய கருமம் ஸ்வதர்மம் எனவும் கூறினும் பொருந்தும். ஸ்வதர்மம் தன்னைக்கொண்டு செய்யுங் கருமம் என ஸ்ரீ பாஷ்யகாரர் கீதா பாஷ்யத்திற் பணித்தார். இக்காலத்தார் வழங்கும் கைத்தொழி லெல்லாம் அவரவர் ஸஹஜம்கர்மத்திலடங்குதலுய்த்துணர்ந்து கொள்க.

இவை அச்சங் காரணமாகவும் அவாக் காரணமாகவுஞ் செய்யப்படினும் கரத்தாலே யாதல் கண்டு கொள்க.

41. கொள்ளை விரும்பேல்

மேல் ஆசார கருமங்களை ஒளியாது புரிக என்றார்.அங்ஙனம் புரிவது பிறர்பாற்றனக்கு வேண்டியதொரு பொருளைக் கொள்ளு தற் பொருட்டாகாது ஆன்மார்த்தம் ஆயினன்றே இம்மை மறுமைக்கு உறுதி பயப்பதாகும்.அங்ஙனம் ஆதல் பற்றி எழுந்தது இஃதென்க.

இதன்பொருள்: பிறர்பால் ஒன்றும் கொள்ளுதலை உள்ளத்தால் விழையற்க என்றவாறு.

கொள்ளை பொருண் மிகுதி கோடலும், அபகரித்துக் கோடலும் ஆம் எனினும் அமையும். 'நல்லா றெனினுங்

கொளறீது' (குறள். 222) என்பதனாற் றீதுபயத்தல் பற்றி 'விரும்பேல்' என்றார். 'பெருமாவிடு பெறினுங் கொள்ள வொண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே' என்பது பெருநாவீரர் திருவாசிரியம். 'இரந்து கொண்டொண்பொருள் செய்வலென் பானும் . . . . அரிய துணிந்து வாழ்வார்' என்ற நல்லாதனார்க்கும் இதுவே கருத்தாதல் இரந்து என்றொழியாது இரந்து கொண்டென்று கூறியதுகொண்டு உய்த்தறியப்படும்.

மற்று 'ஏற்ப திகழ்ச்சி' என முன்னரே உரைத்து வைத்தாரா லெனின் ஆண்டுப் பிறர்பாற் சென்று இரப்பதளவே விலக்கினார். ஈண்டு இரவாமலே ஒருவனது ஆசார கருமங்களைக் கண்டு பிறர் தருவதனைக் கொள்ளுதல் விலக்கினார்.

''கனிந்தநெய்க் கவளங் கையில்
வைத்துடன் கழறுவாரை
முனிந்திடுங் களிறு போல்வார்
முத்தியை விளைக்கு நீரார்''

(மேருமந்தரபுராணம்)

என்பதனாற் கொள்ளுதலை விரும்பாமைக்கு விளையும் பயனு ணர்ந்து கொள்க. தகைமையறிந்து தம்பேறாக ஒன்று நல்குவார் உள்ளம் வருந்தாமல் மகிழ்தற் பொருட்டு ஒருகாற் கொள்ள நேரினும் அக்கொண்டதனை விரும்புதலாகாதென்று கருதி 'விரும்பேல்' என்றாரென்க. இனிக் கைவினை கைத்தொழில் என்றதற்கேற்ப அத்தொழிலை அறிவித்தற்கண்ணும் அத் தொழிலைப் புரிதற்கண்ணும் மிகுதியாகப் பொருள் கோடலை விரும்பற்க என்றாலும் பொருந்துவது காண்க.

பிறர்க்குக் கொடுப்பதையே விரும்புக என்பது இதற்கு நோக்கமாம்.

42. கோஒதர்ட் டொழி

பிறர் தருவதுங் கொள்ள விழையாத நீ துப்புரவுடையனா தற்கு முயன்றீட்டுவையன்றே; அங்ஙன முயல்வுழிப் பயனற்றன புரியாது பாதுகாக்கின்ற திஃதென்க.

இதன்பொருள் : பயன்கொண்டொழிந்த துராலை ஆலையிட்டாட்டுதலை ஒழிக என்றவாறு.

ஆட்டிற் சாறு கொள்ளாயாய் வீணே வருந்தினாயாவை என்பதாம். இதுபோன்றதோர் வினையும் புரியற்க என்ற தனாலிது பிறிதுமொழித லென்னும் அலங்காரம். கோது, 'நானிலம் வாய்க்கொண்டு நன்னீ ர்றமென்று கோது கொண்ட, வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை' என்னும் திருவிருத்தத் திற் போலச் சாறொழிந்த சக்கையை உணர்த்திற்று. ஆட்டு—ஆட்டுதல்; முதனிலைத் தொழிற்பெயர்.

இனிப் பிறர் தருவதுங் கொள்ளாயாகியும் தருவது கொள் வாரை இகழ்வையாவையன்றே. அங்ஙனமிகழாமையை வேண்டு வது இஃதென்று கொண்டு பிறர் குற்றத்தைச் சாற்றுதலை ஒழிக எனினுமமையும். 'கோது சாற்றித் திரிவார்' என்பது திருப்பாட்டு.

நல்வினை புரிதலும், நலம் பாராட்டலும் இதற்கு நோக்கு என்க.

43. கௌவை யகற்று

மேற் பயனில் வினை புரியற்க என்றார். இது பயனுடையன புரிதற்கட் பழிபடுவ செய்யாமை கூறுகின்றதென்க.

இதன்பொருள் : பழிக்குக் காரணமாயினவற்றைப் புரியாது அகல்விடுக என்றவாறு.

இதனைப் 'படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார்' (குறள். 172) என்ற திருவள்ளுவனார் கருத்தொடு வைத்து நோக்கிக் கொள்க. கௌவை—பழி. கௌவைக்குக் காரணமாயினவற்றைக் கௌவை என்றுபசரித்தார்.

''பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை'' (குறள். 637)

என்பதனால் பழிமலைந்த ஆக்கம் விளக்கப்பட்டது காண்க.

பழியில் வினையே மீக்கொள்க என்பது இதற்கு நோக்கம்.

44. சக்கர நெறிநில்

மேற்கூறியவாறு பழிபடுவ புரியாது பழியில் வினையே புரிவா னாகியும் ஒருவன், 'அன்னவோர்க்குந் தெய்வ மிவைமுகப் பைம் பூணிறை' என்றவாறு உலகிலுள்ளவ ரெல்லார்க்கும் தெய்வ

மென்று வைக்கப்பட்ட அரசாணை நெறிகடந்தியல்வனாயின்,

''யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட்ட வர்'' (குறள். 895)

என்றவாறு கேடுற்றொழிதல் ஒருதலையாதலின் அங்ஙனம் கெடாது பாதுகாத்தற்கு எழுந்தது இஃது என்க.

இதன்பொருள்: அரசனுடைய ஆணை நெறியிலே வழுவாது நின்று ஒழுகுக என்றவாறு.

நெறி நிற்றல்—நெறியின்கண் வழுவாது நிற்றல் என்பது. 'நெறி நின்றார்' (குறள். 6) என்பதனானறிக. சக்கரம் அரசாணைக்கு அடையாளமாக இடப்படும் இலாஞ்சனை.

''முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'' (குறள். 388)

ஆதலால் உலகளிக்கும் அரசன் எல்லாவுலகும் ஒரு பெரு வீடும் காக்கும் இறைவன் அமிசமாதல் பற்றி அவ் விறைவனது அறமுயலாழிப்படையை நிக்கிரகத்தும் அநுக்கிரகத்தும் பொறித்து, வேத்தியல் நெறி இஃதென்று காட்டி, அதற்கு உலகம் அடங்கி ஒழுகி வாழச்செய்து வந்தான். அதனாலவ னாணைக்கு 'ஆஞ்ஞாசக்கர' மென்று பெயராயிற்று. 'சுடர்நேமி முழுதாண்டோர்' என்னும் புறநானூற்றுக்குச் 'சுடர்நேமியால் முழுதாண்டோர்' எனப் பழையவுரைகாரர் கூறியதனையு நோக்குக. இவ் வாஞ்ஞாசக்கரத்தை நடாத்த வல்லார் சக்கரவர்த்திகள் என்று வழங்கப்பட்டனர். வேத்தியன்முறை அரசர் தாமே விதித்ததொன்றன்று. தெய்வம் வேதத்தில் விதித்த முறையை உலகு செய்து வாழ்தற்கு ஏவுவதேயாம். தெய்வத்தின் திருவாழியையிட்டுத் தெய்வத்தின் ஆணையே இஃதென்று உலகை ஏவினா ரென்று துணியப்படும்.

''முறையும் வாய்மையும் முயலு நீதியும்
அறையு மேன்மையோ டறனு பாதியந்
துறையும் யாவையும் சுருதி நூல்விடா
இறைவ ரேவலான் இயைவ காண்டியால்''

என்றார் கம்பநாடரும். ஒருமகன் விதித்த நெறியென்னாது சக்கரநெறி என்ற ஆசிரியர் திருவுள்ளப்பாங்கு உய்த்துணர்ந்து கொள்ளப்படும். திருவாழிக்கு 'ஸுதர்சனம்' என்ற திருப்பெயருண்மையு நோக்கிக்கொள்க.

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"

என்ற பூவை நிலையால் உலகு காக்கும் அரசனை இறைவனாகக் கொண்டு உபசரித்தற்குத் தொல்காப்பியனாரும் உடன்பட்டார். கவிசார்வபௌமனாகிய காளிதாசன் இரகுவமிசத்தில் (6—16) 'நினைவினிற் செலவுய்க்கு மன்னவன் நேமிபின்செலுங் குடியுளரா, மனுமுதற்பயில் வழியினி றைவரையு மப்புற னேகலார்' எனத் தெளிவித்தலால் இது காவற்சாகாட்டுருளை செல்நெறி என்பதும் உண்டு. 'காவற் சாகாடு கைப்போன்' என்றார் புறத்தினும்.

இனிக் கீதையெனப்படு மேதைப் பனுவலுள் கன்மயோகத்தை விளக்கும் மூன்றாமத்தியாயத்தின்கண்,

"உணவா னுயிரின் னுடலுள் ளனவாம்
உணவு முகிலா னுளதா முகிலும்
பனும்வேள் வியினா னுளதா வதுதான்
பயிலும் வினையா னுளவேள் வியுமே, (14)
உடலான் வினையோ வுளதா மெனவோர்
உடலும் உயிரா னுளதா மதனால்
கிடன முழுது மடையும் முடலும்
எதுபோதி னும்வேள் வியினா னிலையும், (15)
எவனில் விதமே சுழலா ழியினை
இவனே தொடரா னவனா யுளெலாம்
பவமே வியவன் பொறியைம் பொழில்போல்
பவன்வாழ் வதுவீண் பிருதைக் கினியோய்" (16)

என்பவற்றால் உணரலாம். உயிர்க்கிடனாகிய உடலுண்டாய், உணவு முகிலா லுண்டாய், முகில் வேள்வியான் உண்டாய், வேள்வி வினையான் உண்டாய், வினை உடலானுண்டாய், உடல் உயிரா னிலைவதாய் உயிரோடு கூடிய உடல் இவ்வாறு வேள்வியா னிலைவதாகச் சுழல்கின்ற சக்கரத்தை எவன்றொடர்ந்து செல்கிலனோ அவன் ஆயுளெல்லாம் பாவம் செய்தவனும். தன்னைம்பொறியே பொழிலாய் மகிழ்ந்து மயங்கியவனும் வீண் வாழ்க்கையனும் ஆவன் என்று இகழப்படாமல் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் ஐம்பெரும் கேள்விகளையுஞ் செய்து நூல் விதித்த சக்கர நெறியிலே நின்றொழுகுக எனக் கருதினாரென்றலும் பொருந்தும். முதனூற்கண் 'ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் நாநுவர்தயதீஹய:' (கீதை. 3:16) என்று கூறியிருத்தல் காண்க. இறைவன் சக்கர நெறியிலேனும் நூல் விதித்த சக்கரநெறியிலேனும் நிற்றலன்றி நின்மனந் தோன்றியதோர் நெறியில் நில்லற்க என்பதும் இதற்கு நோக்கம்.

45. சான்றோ ரினத்திரு

மேற் கூறிய அரசாணையையும் நெறிப்படுத்தவல்ல தக்கா ரினத்தனாயிருக்க என்கின்றது இஃதென்க. 'அறிவுடை யோன ரசுஞ் செல்லும்' என்றார் பிறரும். சுழலும் சக்கர நெறியைத் தொடர்ந்து செல்கின்ற தக்காரெனினு மமையும்.

இதன்பொருள் : சால்புடையார் துணைமைக்கண் நிலைத்திருக்க என்றவாறு.

சான்றோர் — 'ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்' (புறம் 191) என்றபடி அறிவும் குணனும் அமைந்தோர். இவருள்ள ஊரில் வாழ்தல் மாத்திரையானே பிசிராந்தையார் யாண்டு பல வாகவும் நரையிலையா யின்புற்றா ரென்று கேட்கப்படுதல் கொண்டு இவர் துணைமையினுள்ளார்க்கெய்தும் பேறு உய்த் துணரலாகும். இனம்—துணை. 'இனனிலனாய்' (குறள். 868) என்புழிப்போலச் 'சான்றவர் கேண்மை சிதைவின்றா யூன்றி வலி யாகிப் பின்னும் பயக்கும்' என்றார் மூவாதியரும்.

46. சித்திரம் பேசேல்

இனி, அச்சான்றோர் துணைமைக்கட்டங்கி யொழுகுவாற்கு வேண்டுவன பலவுங் கூறுவானெடுத்துக் கொண்டார். இதுமுதல் 'தானமிட விரும்பு' ஈறாக வருவன ஒரு தொடராம்.

இதன்பொருள் : அச்சான்றோர் முன்னே கைவன்மை யால் எழுதிக்காட்ட வேண்டிய சித்திரம் போன்ற தொன்றை வாய்வன்மையாற் பேசற்க என்றவாறு.

சித்திரம் என்பது செய்தே காட்ட வேண்டியவற்றிற் கெல்லாம் உபலக்கணம். பேசுதல் — (செய்வலென்று) புகழ்ந்து ரைத்தல். 'பேசினே னேச மாட்டேன்' (திருக்குறுந்தாண்டகம்) என்புழிப்போல், 'அரியன செய்து மெனவுரைத்த லின்னா' என்றார் கபிலரும்.

சித்திரம் போலச் செயற்கரியதைச் செய்க என்பது நோக்கு. இதனாலிவ்வாசிரியர் சித்திர வினையைப் பெரிதும் மதித்தனர் என்பது உய்த்துணரலாகும்.

இனி, இதற்கு அர்த்தாலங்காரத்தைப் புகழ்தலல்லது சித்திராலங்காரத்தைப் புகழற்க என்றும், இடைப்பிளவு எனக் கொண்டு சான்றோரோடு பிளவுபடுதலைப் பேசற்க என்றும் சான்றோரைப்போல அநுகரித்து அவருககுப் பிரதிச் சந்தஸாகப் (படிச்சந்தம்—பிரதிபிம்பம்) பேசற்க என்றும் கூறினுமமையும்.

இனிச், 'சித்திரப் பாவையி னத்தக வடங்கி' என்பது பற்றிச் சான்றோர் முற் சித்திரமாகப் பேசுதல் செயயற்க எனினும் பொருந்தும். 'அறஞ் சொல்லான்', 'அறனோக்கி' என்னுமிடங் களில் அறமென்று சொல்லுதலும் செய்யாளெனவும் அறமாவ தென்று நோக்கி எனவும்வருதல் போல் ஈண்டுவந்தது. 'பொது வுண்பர்' பொதுவாக உண்பர் எனவருதலு நோக்குக.

47. சீர்மை மறவேல்

மேற் பேசேல் என்றார்; அங்ஙனம் பேசாது அடங்கி அவர் பாலொழுகற்கு அவர்பாலுள்ள உயர்வினை நினைவூட்டுகின்றது இஃதென்க.

இதன்பொருள் : அவர் விழுப்பத்தினை மறவாது எப்போதும் நினைத்திருக்க என்றவாறு.

விழுப்பம்—அறிவு, ஒழுக்கம், தவம், கடவுள் வழிபாடு இவற்றான் மேம்படுதல். கேட்பாருடைய சீர்மையினை மறந் தன்றே ஒருவன் அவர்முன் அரியன செய்தும் என்று பேசுவது. அங்ஙனம் பேசாதடங்கியிருத்தற்கு அவர் சீர்மை மறவாமை வேண்டப்பட்டது. அவர்பாற் சிறுமையுளதாயின் அதனை மறந் திருக்க என்பது இதற்கு நோக்கு. அவர் உயர்வை யுள்ளுவை யாயின் அதனை விழைந்து ஒருகால் எய்தினுமெய்துவை என்பத னால் மறவேல் என்றார்.

''உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து'' (குறள். 596)

என்றார் தேவரும்.

48. சுளிக்கச் சொல்லேல்

மேற் சான்றோர் சீர்மையினை மறவேலென்றார். அச் சீர்மை யினை மறவாதிருத்தல் காரணமாக அவர் சீர்மையினை அவர்

முன்னே சொல்லுதல் கூடுமன்றே; அதனைப் பரிகரிக்கின்றது இஃதென்க.

இதன்பொருள்: சான்றோர் சீர்மையினை அவர் முகஞ்சுளிக்கும்படி அவர் முன்னே யுரையற்க என்றவாறு.

'நன்புகழ் கேட்டான்போற் றலைசாய்ந்து மரந்துஞ்ச' என்றார் கலியினும். சான்றோர் முன் அவர் பெருமையினைக் கூறினும், கூறுவான் தன்பெருமை கூறினும், பிறர் திமை கூறினும் அச் சான்றோர்க்கு முகஞ்சுளித்தலுண்டாம். மேல் 'உடையது விளம்பேல்' என்பதனால், கூறுவான் தன் நன்மையினையும் பிறர் திமையினையும் கூறுலாகாதென்பது பெறப்பட்டதாதலின் ஈண்டு முகஞ்சுளிப்பதற்குக் காரணமாவது அவர் பெருமையினை அவர் முன் கூறுவதேயாமென்றுணர்க. சான்றோர் முகன் மகிழப் பேசுக என்பது இதற்கு அருத்தாபத்தியாம்.

49. சூது விரும்பேல்

இதுவும் அச்சான்றோர்பால் வஞ்சகமற்றொழுகுமாறு கூறுகின்றது.

இதன் பொருள்: அச் சான்றோர்பால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டி யொழுகுதலை விரும்பற்க என்றவாறு.

உள்ளும் புறமும் ஒத்து ஒழுகுக என்றவாறு.

வஞ்சக உபாயம் — சூது. 'பாவமு மஞ்சாராய்ப் பற்றுந் தொழின்மொழிச் சூதரைச் சோர்தலரிது'. சூது—வெற்றியுமாம் (சிந்தாமணி). 'ஊனங் கொண்டாடா ருறுதியுடையவை கொண் முறையாற் கோட லினிது' என்றார் பிறரும்.

'உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளல்' (குறள். 939)

என்பது பற்றிச் சான்றோரால் கற்றற்குச் சூது விலக்கப்பட்டது.

சான்றோர்பா லோரறிவு கொள்ளுமிடத்து குரங்கெறி விளங்காய் போலக் கொள்ளுதலாகாதென்று விலக்கியவாறாம்.

சூதிலொழுக்கமே விழைக என்பதிதற்கருத்தாபத்தியாம்.

50. செய்வினை திருந்தச்செய்

இது சான்றோர் புரியுஞ் சற்கருமங்களைப் புரிக என்கிறது.

இதன்பொருள் : *அச் சான்றோர்* செய்கிற வினையை உன் மனமொழி மெய்கள் திருந்துமாறு நீயுஞ் செய் *என்றவாறு.*

இதனானே மேலதலோடியைபு உய்த்துணரப்படும். செய் வினையை நித்தியகருமம் என்பாருமுளர்.

சான்றோர் செய்யா வினையை உன் மனமொழிகள் திருந் தாது கெடுமாறு செய்தலை யொழிக என்பதிதற்கருத்தா பத்தியாம்.

51. சேரிட மறிந்துசேர்

இது அச்சான்றோரவையினைச் சேர்க என்கிறது.

இதன்பொருள் : *அச் சான்றோர்* திரண்ட இடத்தினை அவ்விடத்திலிருத்தற்குரிய அதிகாரிக்கு அறிய வேண்டு வன அனைத்தும் அறிந்து கொண்டு சேர்க *என்றவாறு.*

அச்சான்றோர் சேரிடம் நல்லவை என்றவாறு.

அறியவேண்டுவன அனைத்தும் அறியாது சேரின்,
''கழாஅக்காற் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்'' (குறள். 840)
எனறு வெறுப்பாராகலின் 'அறிந்து சேர்' என்றார். 'சேரே திரட்சி' என்பது சூத்திரமாகலின் சேரிடமென்று சான்றோர் குழீஇய அவையினையே குறித்தாராவர்.

சான்றோர் குழுமாத தீயவையினை அறிந்தொருவுக என்ப திதற்கருத்தாபத்தியாம்.

52. சையெனத் திரியேல்

இது, அச்சான்றோரவையில் ஒருவன் நிலைத்திருக்குமாறு அறிவுறுத்துகின்றது.

இதன்பொருள் : அச்சான்றோர் உன்னை வெறுத் திகழ்ந்து தள்ளுமாறு திரியற்க என்றவாறு.

இகழ்ந்து தள்ளுதற்குக் காரணம் தீயொழுக்கமும், தீச்சார்பும் பேதைமையுமாம்.

சான்றோர் விழைந்து கொள்ளுமாறு ஒழுகு என்பது இதற் கருத்தாபத்தியாம்.

இனிச் சையென்பது கொச்சை என்பதன் முதற்குறையாகக் கொண்டு கொச்சை ஒரு செடியிலேனும் வயிறார இரையருந்தாது பச்சை கண்ட விடனெல்லாம் அலையுமாறுபோல நீயுமொரு சான்றோரிடத்தேனும் நிரம்பவறிவு கொள்ளாது கண்டவிட மெல்லாம் அலையற்க என்பதுமமையும். சிறப்பில்லதனைக் கொச்சை என்னும் வழக்கு நோக்குக. (தொல். சொல். 120 நச்சினார்க்கினியருரை).

53. சொற்சோர்வு படேல்

இது அச் சான்றோர் இகழாமற் கொள்ளுமாறு அவருபதேச மொழிகளைப் போற்றிக் கொள்க என்கின்றது.

இதன்பொருள்: அச் சான்றோருரைத்த சொல்லின்கட் சோர்வு படேற்க என்றவாறு.

''இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்''

என்பதனால் சான்றோர் சொல் ஒருவனை ஆபத்திற்றாங்குவ தொன்றாகலின் அதனைச் சோர்வுபடாது போற்றிக்கொள்க என்றாரென்க. 'கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொரு ளெனப் போயிற்று' எனக் கல்வியிற் பெரியார் கூறியதனான் கல்லாப் புல்லர்கண் நல்லோருபதேசம் சோர்வுபடுத லுணர்க.

தீயார்வாய்ச்சொல்லைக் கேட்கப்பெறின் அப்போதே சோரவிடுக என்பதிதற்கருத்தாபத்தியாம் இனிச் 'சொற் சோர்வினா லெச்சோர்வு மறிப' என்பவாகலின், சொல்லும் சொல்லின்கட் சோர்வுபடாதுரைக்க எனினுமமையும். அதுவுஞ் சான்றோர் விழைந்து கொள்ளுதற்குக் காரணமாம்.

''அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு'' (குறள். 847)

பெறுதற்கு அரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன்.

''எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்'' (குறள்: 429).

54. சோம்பித் திரியேல்

மேற் சான்றோருபதேசித்த சொல்லின்கட் சோர்வு படாத வாறு காத்தார். இதனால் அவருபதேசித்த சற்கருங்களின் கண்ணும் அவர் வழிபாட்டின்கண்ணும் சோர்வு படாது காக்கின்றார்.

இதன்பொருள்: அச் சான்றோருரைத்த சற்கருமங் களையும் அவர்க்குரிய அறத்திற்றிரியா வழிபாட்டினை யும் செய்யாது மடிந்து திரியற்க என்றவாறு.

மேற்கூறிய நற்கருமங்களை எப்போதும் முயன்று புரிக என்பது இதற்கருத்தாபத்தியாம்.

55. தக்கோ னெனத்திரி

இஃது அச் சான்றோர் மதிக்க ஒழுகுக என்கின்றது.

இதன்பொருள்: அச் சான்றோர் உன்னைத் தகுதி யுடையவனென்று கூறுமாறு இயல்க என்றவாறு.

'அவமதிப்பு மான்ற மதிப்பு மிகைமக்களான் மதிக்கற்பால' என்பதனாற் ஒருவனைத் தக்கான் தகவிலன் என்று மதித்துரைத் தற்குரியார் சான்றோரேயாதறெள்ளிது. சான்றோரால் தக்கோ ரெனப் பெறுபவரே உலகிலெச்சமுடையராவர்.

சான்றோர் தகவிலன் என்று உன்னை இகழுமாறு திரியற்க என்பதிதற்கு அருத்தாபத்தியாம்.

56. தானமிட விரும்பு

இஃது அச்சான்றோர்க்கு ஒருவன் தன்னுடைமைகளைத் தத்தஞ்செய்க என்கின்றது.

இதன்பொருள்: நீ உன்னுடைமைகளை அச் சான்றோர்க்குத் தானமாக இடுதற்கு விழைவாயாக என்றவாறு.

'தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்'

என்பவாகலான் முன்னைச் சூத்திரங்களில் சான்றோரை அதிகாரத்தாற் கொள்ளவைத்தார். அல்லார்த்தார்க் கீதல் செயின் அதன் பயனாகக் கேடுறுதல்,

'அடங்கலர்க் கீத்த தானப் பயத்தால்
தடங்கடற் றீவு பலவுள வவற்றுள்
உடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி
மாந்தி வாழ்வர்...............

என்பதனால் அறியப்படும்.

''தவம்புரிந் தடக்கி நோற்குந்
தத்துவந் தலைப்பட் டோம்பிப்
பவம்பரி கெமக்கு மென்று
பணிந்தவ ருவப்ப வீமின்'' (சிந்தாமணி.605).

சான்றோர்க்கு ஒன்று இடும் பாக்கியமிலா வறியையாயினும் அவர்க்கிட வேண்டுவதென்னும் விருப்ப முளதாயின் அதனானும் நீ பயனெய்துவாய் என்னுங் கருத்தான் இடுக என்னாது இட விரும்பு என்றாரென்க.

சான்றோரிடமேனும் தானங்கொள விரும்பற்க என்பது இதற்கருத்தாபத்தியாம். (சான்றோர்க்கொன்று செய்யா உலோபத்தை விழையற்க என்பதும் இதற்கருத்தாபத்தியாம்).

இங்ஙனம் சான்றோர்பாலொழுகி அவர்க்கு நன்றாற்றுவானாயினும் ஒருவனைத் தெய்வத்தானும், தன்னானும், பிறரானும் துன்பமெய்துவானாவனன்றே; அம்மூவகைத் துன்பமும் ஒருவனெய்தாது விலக்க உபாயங் கூறுகின்றார் மேல் மூன்று சூத்திரத்தானும் என்க.

57. திருமாலுக் கடிமைசெய்

இது சான்றோர்பால் நன்றொழுகியதன் பயனானும், அவர் உபதேச மொழியானும், ஒரு பெருங்கடவுளை யுணர்ந்து வழிபடுக; வழிபடவே எவரானும் விலக்கலாகா ஆதி தெய்விக மாய்த் துன்பங்களெய்தா; இறுதியில் நிரதிசய இன்பமே எய்து வாய் என்கின்றது.

இதன்பொருள்: திருவுடைய பெருங்கடவுட்கு மன மொழி மெய்களான் அடிமையினை எப்போதுஞ் செய்க என்றவாறு.

இதனால் நிரதிசய வின்பத்தை யெய்துவாய் என்றவாறு.

''ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி
வழுவிலா வடிமை செய்ய வேண்டும்நான்''

என்றார் பெரியாரும். 'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்' என்பவாகலின் திருவருட்செல்வமுமாம். திருவிலாச் சிறுதெய் வங்களை அநித்திய பலன்களை வேண்டி வழிபாடு செய்யற்க என்பது இதற்கு அருத்தாபத்தியாம். 'திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு' (நான்முகன். 53) என்றார் பெரியாரும்.

''திருமாலை யல்லாது தெய்வமென் றேத்தேன்
வருமால் என்மேல் வினை''

என்றார்க்கு இதுவே கருத்ததாதல் உணர்க.

இனித் திருமாற் கடிமை செய்யாதது முன்னைத் தீவினை யானன்றே, அதனை நீக்குக என்றார் எனினும் அமையும்.

''மாலைத்தாம் வாழ்த்தா திருப்ப ரதுவன்றே
மேலைத்தாம் செய்த வினை''

என்றார் பெரியாரும் (பெரிய திருவந்தாதி. 44).

58. தீவினை யகற்று

மேல் ஆதி தெய்விகமாகிய துன்பங்கள் எய்தாவாறு அறி வுறுத்தினார்: இதனால் ஆதியான்மிகமாய துன்பங்கள் எய்தாமை காக்கின்றார்.

இதன்பொருள்: உனக்கும் பிறர்க்கும் தீமைபயக்குஞ் செயல்களை நின்பா லணுகாவா றொழிக்க என்றவாறு.

ஆதியான்மிகமென்பது தன்னால் வருந்துன்பமாகும். தான் தீவினையே புரியாதொழியின் தனக்கெவ்வாற்றானும் தன்னாற் றுன்பமெய்தாதென்று காத்தவாறு.

நல்வினையொழியாது புரிக என்பது இதற்கருத்தாபத்தியாம்,

59. துன்பத்திற் கிடங்கொடேல்

இது ஆதிபௌதிகமாகிய பிறரான் வருந்துன்பம் வராமை பாதுகாக்கின்றது.

இதன்பொருள் : பிறராற் புரியப்படும் துன்பத்திற்கு உன்பா லிடங்கொடா தொழுகுக என்றவாறு.

காலத்துக்கும் இடத்துக்கும் தக்கவாறு தன்னையும் தன்னுடைமையையும் பாதுகாத்து ஜாகரூகனாயொழுகுக; ஒழுகவே பிறராற் புரியப்படும் துன்பத்திடங் கொடாவாறாம்.

இன்பத்திற் கிடங்கொடு என்பதிதற்கு அருத்தாபத்தியாம்.

60. தூக்கி வினைசெய்

மேல், மூன்று சூத்திரத்தானும் துன்பமெய்தாமைக்கு உபாயங் கூறினார்; இதனால் இன்பம் எய்தற்குபாயங் கூறுகின்றார்.

இதன்பொருள் :, உனக்கும் பிறர்க்கும் இன்பந் தருவதோ துன்பந்தருவதோ என்று சீர்தூக்கிப் பார்த்து இன்பந்தருவது என்று தெளிந்து வினைபுரிக என்றாறு.

''பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்'' (குறள். 505)

என்பவாகலின் உன்னைப் பெருமைப்படுத்துவதோ சிறுமைப் படுத்துவதோ என்று ஆராய்ந்து எனினுமமையும்.

'சீர் தூக்காது ஒன்று புரியற்க' என்பது இதற்கு அருத்தாபத்தியாம்,

61. தெய்வ மிகழேல்

அங்ஙனம் தெரிந்து வினைசெய்த விடத்தும் இன்பம் பயவாது துன்பமே ஓர்காற் பயப்பின் அது ஊழின் வலியானாயதென்றிருக்க என்று அதனை அறிவுறுத்துகின்றது இது.

இதன்பொருள் : ஊழுண்மையினை இகழற்க என்றவாறு.

தெய்வம்—ஊழுக்கு ஒரு பெயர். இனி, 'சாஸ்த்ராப்ரவ்ருத்தி' என்பதனால் இவன் செய்யும் வினை எல்லாம் ஒரு சாஸ்தர நெறி பற்றியதே யாகும். அதுகொண்டு அந்நிய சாஸ்திர தெய்வங்களை இகழ்வானாவான். அது செய்யற்க என்று இது கூறுகின்றதெனினுமமையும்.

ஊழில்லை என்பதாக இகழற்க என்பதிற்கருத்தாபத்தியாம்.

62. தேயத்தோ டொத்துவாழ்

இனி, அவ்வூழ் வேற்றுமையாற் பல்வேறு வகைப்பட்டுள்ள மக்களிறைந்ததன்றே இவ்வுலகம்; அவ் வேற்றுமைப்பட்ட பலரோடும் இவன் இவ் வுலகில் வாழுமாறு அறிவுறுத்துகின்றது இது.

இதன்பொருள் : பல்வேறு வகைப்பட்ட தேயத்தார் பலரோடும் மனமொத்து வாழ்க என்றவாறு.

ஒத்துவாழ் என்றதனால் தேயத்தர் பல்வேறு வகைப்பட்டு ஒவ்வாதிருத்தல் புலனாயது. ஊழாற் பல்வேறு வகைப்படுதலாவது உயர்சாதி தாழ்சாதி, அறிவு அறிவின்மை, செல்வம் வறுமை, உயர்மதம் தாழ்மதம் இவற்றானும் பிறவாற்றானும் பலதிறப்படுதல்.

''எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு'' (குறள். 466)

என்றார் தெய்வப்புலவரும்.

தேயத்தரோடு ஒத்தொழுகாமைக்கண் வாழ்வில்லை என்பதிதற்கருத்தா பத்தியாம்.

63. தையற்சொற் கேளேல்

அங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட தேயத்தர் பிறரோடும் ஒத்து வாழ்வான் தன் மனையாட்டியோடும் மனமொத்து வாழ்தலை வேண்டுமன்றே; அவ்வாறு வேண்டுவான் தன்சொல் வழியே மனையாட்டியை ஒழுகச் செய்வதல்லது தான் காமத்தால் அறிவு மயங்கி அவள் சொல்வழியே ஒழுகுவதாகாதென்று பாதுகாக்கின்றது இது.

இதன்பொருள் : பெண்டாட்டி சொல்லைக் கேட்டு ஒழுகற்க என்றவாறு.

''பெண்ணெனப் படுவ கேண்மோ
பீடில பிறப்பு நோக்கா
ஒண்ணிறை யுடைய வல்ல
ஓராயிர மனத்தவாகும்''

என்பவாகலின் இங்ஙனம் கூறினார். தையல்பால் வைத்த அன்பின் மேலீட்டால் அவளுடைய சொல்லிற் குற்றம் தோன்றாது ஒழுகுவான் என்பது கருதி அதனை விலக்கினார். இது பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மகனையே நோக்கிற்று.

இனி, மேல் 'ஒத்துவாழ்' என்றார், அங்ஙனம் ஒத்து வாழ்தற்குரிய சொல்லையல்லது சேர்த்தலல்லாத சொல்லை யார் வாயினுங் கேளற்க என்றாரெனினு மமையும். தைத்தல் — சேர்த்தல்; 'தைஇ' என்பதனானுணர்க. தையல் சொல்—சேர்த்தல் அல்லாத சொல்.

மேல், 'மேன்மக்கள் சொற்கேள்' என்பாராகலின் ஆண்டுத் தையலார் மேன்மக்களாயின் அச்சொற் கேட்டலமையுமென்று பெறப்படுதல் காண்க; மக்கள் என்றது இருபாற்கும் பொதுவாதலானென்க.

தையல் உன் சொல்லைக் கேட்குமாறு செய் என்பதும் யார் வாயினும் சேர்க்குஞ் சொல் கேட்க என்பதும் இதற்கருத்தாபத்தியாம்.

64. தொன்மை மறவேல்

இஃது ஒருவன் மனமொத்து வாழுந் தேயத்தார் தன்மனமொவ்வாதன சில புரிந்த இடத்தும், தன் சொல்வழி யொழுகும்

பெண்டாட்டி ஒவ்வார்த சில கூறிய இடத்தும் அவர்பா லிங்ஙன மொழுகுக என்கின்றது.

இதன்பொருள் : பழகியார்பாற் கண்ட சில குற்றங் காரணமாக அவர் பழைமையினை மறவாதொழுகுக என்றவாறு.

தொன்மை மறந்தாயாயின் மேல் 'கூடிப்பிரியேல்' என்ற அறவுரைக்கு மாறாக ஒழுகினாயாவை எவ்றவாறு. இனித் தையல் சொற் கேட்டுக் கெட்டார் பலருடைய பழைமையான இதிகாசங் களை மறவற்க என்றாரெனினும் அமையும்.

பழகியாற்பாற் கண்ட குற்றங்களையே மற என்பதிதற் கருத்தாபத்தியாம்.

65. தோற்பன தொடரேல்

மேல், சூத்திரங்களானும் ஒருவன் உலகில் எல்லாருடனும் ஒத்து வாழுமாறறிவுறுத்தினார், இதனால் பிறர் மனமொத்து வாழாமைக்குக் காரணமான சிலவற்றை இவன் புரியா தொழுகுதலை யுணர்த்துகின்றார்.

இதன்பொருள் : பிறரேனும் நீயேனும் தோற்பதற்கே காரணமான செயல்களைத் தொடங்கற்க என்றவாறு.

ஒட்டம் வைத்துப் பொருஉம் எச்செயலும் பிறரேனும் நீயேனும் தோற்பனவேயாகும். அவையெல்லாம் பிறரொடு மனமொர்த்து வாழாமைக்கே ஏதுவாம் என்றவாறு.

''மருவு மொருவனோ டன்பழிக்கு மொன்றல்லசூது
பொருவரோ தக்கோர் புரிந்து''

என்றார் பிறரும். சூதாடல் முதலான ஒட்டம் வைத்துப் புரிவன எல்லாம் அடங்கத் 'தோற்பன' என்றொழிந்தார். 'வென்றதூஉந் தூண்டிற் பொன்மீன் விழுங்கி யற்று' என்பவர்களின் தோற்பன என்றார் எனினுமமையும்.

நீயும் பிறரும் தோலாத செயலையே தொடங்குக என்பது இதற்கு அருத்தாபத்தியாம்.

66. நன்மை கடைப்பிடி

இனி அங்ஙனம் தோலாத செயல் யாவையெனின் அவை இவை என்கிறது இது.

இதன்பொருள்: உனக்கும் பிறர்க்கும் நன்மை பயப்பன வற்றையே நீ முடியும் வரையும் பற்றிக்கொள் என்ற வாறு.

நன்மை பயப்பனவற்றையே நன்மையென்றார். அவ்வவ் வருணத்தார் தத்தம் வருணத்திற்கும் பிறவருணங்கட்கும் நன்மை யாவன இவையென்றாராய்ந்து கொண்டு அவற்றை முடிவளவும் பற்றிக்கொளக என்றறிவுறுத்துமுகத்தான் ஒத்து வாழ்தற்கேதுக் காட்டினார். கடைப்பிடியாவது கற்றுங் கேட்டுமுள்ள பொருள் களை மறவாமை (சிலப். அரும்பதவுரை).

தீமை பயப்பனவற்றை நினைந்த போதேவிடுக என்பது இதற் கருத்தாபத்தியாம்.

67. நாடொப்பன செய்

மேல் நன்மை கடைப்பிடி என்றார்; அந் நன்மையுள்ளும் நாடொவ்வாதனவற்றைச் செய்யின் அவற்றாற்றானும் பிறரும் பயனெய்தாமையான் அவற்றை விலக்கி இந்நாடொப்பன வற்றைச் செய்க என்று ஒத்து வாழுமாறு கூறுகின்றார்.

இதன்பொருள்: உன் நாட்டார் மனமொப்பன வற்றைச் செய்க என்றவாறு.

'சனங்க ளுவப்பனசெய் யாவுஞ் செய்க' (பழமொழி. 230).

நாட்டார் மனமொப்பன உன்னறிவாற் றீமையேயாயினும் அதுசெய்க என்று இதனாற் கூறியவாறாயிற்று. நாட்டார் மன மொவ்வாதன உன்னறிவால் நன்மையேயாயினும் அது செய்யற்க என்பது இதற்கருத்தாபத்தியாம். இக்கருத்தானன்றே ஸஹஜ தருமங்கள் தோஷமுடையனவாயினும் புரிக என்று கீதையில் பகவானும் அருளிச்செய்தான். ஊர்கள் பலவுடையது நாடு, நாடு பலவுடையது தேயம் என்றுணர்க.

ஒருவன் கொல்லாமை மேற்கொண்டொழுகுவானாயினும் வேள்வியின் கண்ணும் சிலதெய்வக் கோட்டத்தின் கண்ணும் அவியாகவும் பலியாகவும் இடுதற்கண் கொலைபுரிதற்கு நாடு ஒப்பதாயின் அது போல்வன புரிதல் வேண்டுவதேயாமென்றும், தத்தம் சாதி நிலையினிழிந்து இழிசாதித் தொழில்பல செய்து பொருளீட்டுதல் ஒருவனறிவால் நன்மையேயாயினும் நாடொப்பதன்றாயின் அதுபோல்வன பிறவும் புரியாமை வேண்டுவதேயாம் என்றும் கூறுவானாயிற்று.

இனி, நாட்டாரனைவரும் ஒரு தன்மையராதற்குரிய காரியங்களைச் செய்க என்றும் இவையே பலவகைய நன்மையுள்ளும் தலைசிறந்தன என்றும் உரைத்து மேலதனோடியைப்பினும் அமையும்.

''வேத வேதியர்தாம் வேள்விவாய் விட்டவும்
பூத தேவர்கட்கெனாப் புல்லியோர்கள் சொல்லவும்''
(நீலகேசிதருமவுரை 105).

68. நிலையிற் பிரியேல்

இனி, நாடொப்பன செய்தற்கண் அந் நாடு நிலைத்தற்குக் காரணமான நிலையினின்று செய்க என்கிறார்.

இதன்பொருள் : அந் நாடு ஒத்து நிலைத்தற்குக் காரணமான சமயநிலையினின்று வேறுபடேல் என்றவாறு.

ஒரு நாடு முழுதும் ஒத்து நிற்பதுக்குக் காரணமாதலால் சமயமே ஈண்டு 'நிலை' எனப்பட்டது. துன்புறு காலத்துத் துன்பமே யின்றி இன்பமெய்தி வாழ்தற்கு இச்சமயத்து ஒத்து ஒழுகுதலையே பெரியாரும் வேண்டினர். அவர் 'ஒக்கத் தொழுகிற்பிராகிலொன்றுங் கலியுகமில்லையே' என்றருளிச் செய்தவாற்றானிதனை யறிக.

ஒன்றினும் நிலையாமையினின்றும் பிரிக என்பதிதற்கருத்தாபத்தியாம்.

நிலை என்பது வருணாச்சிரமநிலையெனவும், நடுநிலை எனவும், உயர்நிலை எனவும் கூறுதலுமுண்டு.

69. நீர்விளை யாடேல்

அங்ஙனம் நிலையிற் பிரியாருடன் வாழுமிடத்து இது கடிந் தொழுகுக என்கின்றது.

இதன்பொருள் : *பிறருடைய நீர்மையாகிய சௌலப் பிய குணத்தின்கண் நீ விளையாடுதல் செய்யற்க.*

'என்னீரறியாதீர்' என்புழிப்போல நீர் நீர்மையாம். அது நீர்மை சௌலப்பியம் என்னும் பொருளில் வந்தது. சமய நிலை யிற் பிரியாப் பெரியோரெல்லாம் சிறியோர்க்கு மொப்ப விளங்கும் சௌலப்பியமென்னும் பெருங்குணமுடையவராவர். அக்குணங் காரணமாக அப்பெரியாரும் உன்னோடொத்தாராகக் கருதி அவர்பால் விளையாடுதலைச் செய்யற்க என்று பாதுகாத்தவாறு. 'நீரறிந் தொழுகாதா டாரமல்லள்' என்னும் முதுமொழிக் காஞ்சியினும் 'நீர்' என்பது குணத்துக்குப் பெயராய் வழங்கியது காண்க. 'மாண்டார் நீராடி' (குறள். 278) என்பதற்கு மாட் சிமைப்பட்டாரதுநீர்மையை யுடையராய் எனவுரைப்பாருமுளர்.

''செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்லல நீத்த உவகை நான்கே'' (தொல். பொருள். 255)

என்பதன்கண் விளையாட்டு என்பதனால் யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து வருதல் ஒருவனுக்குவகை வேண்டப்படுவதாக வும் அதனை விலக்குதல் ஆசிரியர் மதவிரோதமாம். 'விளையா டாயமோ டோரையாடி' (நற்றிணை).

பிறர் நீர்மைக்கண் அன்பும் அச்சமும் உடையனாயிருக்க என்பது இதற்கருத்தாபத்தியாம்.

70. நுண்மை நுவலேல்

இஃது, அச் சமயநிலைக்குரிய இரகசியங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கூறுகிறது.

இதன்பொருள் : *சமயநிலைக்குரிய இரகசியங்களைத் தஞ்சமயத்தார் அல்லார் பலரறியச் சொல்லற்க என்ற வாறு.*

சொல்லின் அங்கணத்துக்க அமிழ்து போலப் பயன் படாதாம் என்பது. பிறர் பயன்பட நுண்மை யல்லாதவற்றை நுவல்க

- என்பதிதற்கு அருத்தாபத்தியாம். 'நுவலேல்' என்பதே பழைய ஏடுகளிற் கண்ட பாடம். 'அருமறை சோரு மறிவிலான்' (குறள். 847) என்றார் தேவரும். 'கல்விக்...............' என்பது வளையாபதி.

71. நூல்பல கல்

நீ கண்ட அளவேதான் சமயத்தின் நுண்மை என்றிராமல் மேலும் அறிக என்கிறது இது.

இதன்பொருள்: சமயநூல் பலவற்றையும் கற்றறிந்து கொள் என்றவாறு.

மனக்கோட்டந் தீர்த்தல் காரணம்பற்றி நூலென்றார். நூல் பஃறிறப்படுதலின் பல என்றார். நூலல்லாத பலவற்றைக் கற்ற லொழிக என்பதிதற்கருத்தாபத்தியாம். 'கறக கசடறக் கற்பவை' என்ற தேவர்க்குக் கற்கத் தகாத நூல்களைக் கற்காதொழிக என்பதும் கருத்தாதல் காண்க.

72. நெற்பயிர் விளை

இது, கற்றாங் கெரியோம்பி ஐம்பெரு வேள்வி வேட்க வேண்டுமாதலின் அவ் வேள்விக்கு இன்றியமையாததனை உண்டாக்கிக் கொள்க என்கின்றது. பல கற்பவன் உயிர் வாழ உபாயங் கூறுவது. கற்ற நூலறிவை விலை கொள்ளாதீந்து வாழ வழி கூறுவது.

இதன்பொருள்: நெல்லுடைய பயிரை விளைக்க என்ற வாறு.

மேற் பொதுப்படப் 'பருவத்தே பயிர்செய்' என்றார். அப் பயிர்களுள் நெல்லே தேவரவியும் மக்களுணவும் ஆதலால் அதனையே சிறப்பித்து விளைக்க என்று இதனாற் கூறினார். 'நெல்விளை' என்னாது 'நெற்பயிர் விளை' என்றது அதன் பயிர் எரியோம்பற்கின்றியமையாத நெல் உண்டாதற்குக் காரணமான ஆக்களுக்கும் அவ்விளைவி னுழவுக்கின்றியமையாத பகடுகட்கும் உணவாதல் கருதி.

நெல்லல்லாத பயிரினை மிகுத்து விளையற்க என்பதிதற்கு அருத்தாபத்தியாம். 'நெல்லுகுத்துப் பரவும் கடவுளு மிலவே'.

73. நேர்பட வொழுகு

சமய நூலுண்மை யுணர்ந்தும் வேள்வி கருதிய துப்புரவு பெற்றும், ஒழுக்கமிலராவர் பலருண்டன்றே; அங்ஙனமாகாமை பாதுகாக்கின்றது.

இதன்பொருள்: உலகு நேர்மைப்பட நீ சமய நெறியி லொழுகுக என்றவாறு.

நீ ஒழுகுவதைப் பார்த்து உலகு கோணாது ஒழுகுமாறு நீ நட என்பது கருத்து. நல்லொழுக்கத்திற்கு நீயே உவமையாக ஒழுகு எனினுமமையும்.

கோணல் பட நடவற்க என்பது இதற்கருத்தாபத்தியாம். 'நேர்கோலென நில்' என்பதூஉம் பாடம். நேர்கோல்—சமன் செய்து சீர் தூக்குங் கோல். தன்னுள் வைக்கும் பொருளைச் சமன் செய்து காட்டற்குரிய கோல் தான் சமனாக நிற்றல் போல நீ நிற்பது செய்க என்றவாறு.

74. நைவினை நணுகேல்

அங்ஙனம் நேர்படவொழுகுற்கண் இடுக்கண் வருங்கால் அத்னை நகுமாறு மனம் வாக்குக் காயங்கள் திடதரனாயிருக் குமாறு கூறக் கருதி முதற்கண் மனோதிடங் கூறுகின்றார்.

இதன்பொருள்: இடுக்கண்களுக்கு உள்ளந் தேய்தலை யமையற்க என்றவாறு.

இன்—சாரியை. நைவினை என்பதற்கு உன்னை நைவிக்கும் வினைஎனவும், முற்காலத்தநுட்டிக்கப்பட்டு இக்காலத்து நைந்து போய சில வினைகள் எனவும் கூறுதலுமுண்டு. நைவு—மலர்ந்த நோக்கமன்றி [illegible]ல் நோக்கம்

இடுக்கண் வருங்கால் உள்ளம் நைதலை நணுகற்க என்பதற்கு இடுக்கண் வருங்கால் உள்ளம் நகுதலை நணுகுக என்பது அருத்தாபத்தியாம்.

75. நொய்ய வுரையேல்

இது வாக்குத்திடங் கூறுகின்றது.

இதன்பொருள் : நொய்மையுடைய சொற்களைக் கூறற்க என்றவாறு.

நொய்மையுடையனவாவன—கேட்டாரைப் பிணிக்கும் வலியில்லனவும், அவரால் மறுப்படுவனவும் அவரைத் தீநெறி புகுவிப்பனவும், அவர்க்குத் துன்பம் விளைவிப்பனவுமாம். 'நொய்ய சொல்' (பாயிரம். 3) என்றார் கம்பரும்.

நொய்மையுடையனவல்லன கூறுக என்பதிதற்கருத்தாபத்தியாம்.

76. நோய்க்கிடங் கொடேல்

இது காயத்திடங் கூறுகின்றது.

இதன்பொருள் : வியாதிக்கு உன் உடம்பி லிடங் கொடாதிருக்க என்றவாறு.

கொடு என்னும் வினை வியாதியினிழிபும் உயிரினுயர்பும் தோன்ற நின்றது. நோய் புகாவாறு காத்தலும், நோய் புக்க காலை அதனை அப்போதே பரிகரித்தும் சுத்ததேகியா யிருக்குமாறு கூறிற்று. 'பிணிகிடந்தோன் பெற்றவின்ப நல்கூர்ந்தன்று' (முதுமொழிக்காஞ்சி), 'தமக்கு மருத்துவர் தாம்' (பழமொழி).

''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'' (குறள். 948)

என்பது திருக்குறள். சௌக்கியத்திற்கு இடனாயிருக்க என்பது இதற்கு அருத்தாபத்தியாம்.

77. பழிப்பன பகரேல்

கரணத்திரயமும், திடதராகவுள்ளாராய் நேர்பட ஒழுகுநர் பாலே அங்ஙனம் ஒழுகாதாருடைய குற்றங் குறைகளை அத்திடமிலாப் பிறர் எடுத்துப் பழிப்பாராயின் அவ்வுழி புரிவது கூறுகின்றது.

இதன்பொருள் : நீ ஒருவர் பிறரைப் பழிப்பனவற்றை உன் வாயாற் கூறற்க என்றவாறு

ஒருவர் கூறுவனவற்றையே நீ கூறுதலான் அவை வாய்மையுடையனவாயினும், குறளையாதலின் ஒழிக என்றார்.

ஒருவர் பிறரைப் புகழ்வனவற்றை உன் வாயாற் கூறுக என்பது இதற்கருத்தாபத்தியாம்.

78. பாம்பொடு பழகேல்

இது அங்ஙனம் பழிப்பனவற்றைக் கேளாதிருக்க வாயில் கூறுகின்றது.

இதன்பொருள் : உடம்பெல்லாங் குளிர்ந்து காட்டினும், வாயில் விடமுடைய பாம்பனையாரோடு பழகற்க என்றவாறு.

பாம்பனையாரோடு பழகாதொழியில், அவர் வாயினின்று வரும் விடமனைய பழிச்சொற்கள் நீ கேட்டலே இல்லையாம் என்று கருதி இங்ஙனம் கூறினார். பாம்பின்குணம் எட்டு என்ப.

''பொழிந்துநஞ் சுகுத்த லச்ச
மிரைபெரு வெகுளி போகங்
கழிந்துமீ தாடல் காலம்
பிழைப்பென வெட்டி னாகும்''

(சிந்தாமணி. 1286)

நச்சுத்தன்மையிலாது அமுதத் தன்மையுடையாருடன் பயிலுக என்பது இதற்கருத்தாபத்தியாம்.

79. பிழைபடச் சொல்லேல்

இது, அப் பாம்பனைய தீயார்க்கும் இதபரனாயிருக்க என்கின்றது.

இதன்பொருள்: தீயார்க்கும் குற்றமுண்டாக ஒன்று பேசற்க என்றவாறு.

பேசற்க என்றமையானே அவர்க்குத் தீங்கிழைத்தலா தென்பது வேறு கூற வேண்டாதாயிற்று.

தீயார்க்கு நன்மையுண்டாகச் சொல்க என்பதிதற் கருத்து பத்தியாம். இஃதன்றி விபரீதார்த்தத்தால் தவறுபட ஒன்றுரை யற்க என்பதுமுண்டு.

80. பீடுபெற நில்

மேற்கூறியவற்றை யெல்லாம் வழுவாதோம்பி ஒழுகுதலான் ஒருவனுளனாய போதே இது பயனெய்துமென்று கூறி அவ் வொழுக்கத்தின் கண்ணே நிலைக்க என்கின்றது இது.

இதன்பொருள்: பெருமையினை நீ பெறுமாறு மேற் கூறிய நல்லொழுக்க நெறியிலே நிலைத்திரு என்றவாறு.

''கருமஞ் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்'' (குறள். 1021)

என்றார் தேவரும். அஃதாவது சிறிதும் அச்சமின்றி எல்லாரினும் மிக்குத் தன்னைப் புலப்படுத்துந் தன்மை. இஃது ஒருவன் உளனாய காலத்தே உண்டாவது.

''அறம்புகழ் நட்புப் பெருமையிந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும். . . . .
அச்சத்தோ டந்நாற் பொருள்''*

---

* சரியான பாடல் வடிவம்:

''அறம்புகழ் கேண்மை பெருமைஇந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம்என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்'' (நாலடியார். 9:2)

என்னும் பாட்டில் அச்சத்திற்கும் மறுதலையாகப் பெருமையைக் கூறியதனானும் இப் பொருளுணர்ந்து.கொள்க. இதனை 'ஒளி' என்பர் பிறர்.

சிறுமை பெற நிற்றலைச் செய்யற்க என்பது இதற்கருத்தா பத்தியாம்.

81. புகழ்பட வாழ்

இஃது ஒருவனிலனாய காலத்தும் உண்டாம் பயன் கூறி அவ் வொழுக்க நெறியிலே வாழ்க என்கின்றது.

இதன்பொருள்: உனக்குப் பின்னும் இசையுண்டாக வாழ்க என்றவாறு.

புகழ் ஒருவனிலனாய காலத்தும் உளதாம் மீக்கூற்றம். 'உளதாகுஞ் சாக்காடும் வித்தகர்க் கல்லா லரிது' என்பதனானறிக.

வசைபட வாழற்க என்பது இதற்கருத்தாபத்தியாம்.

82. பூமி விரும்பு

அப் புகழ்பட வாழும் இல்வாழ்வாருட் சிறந்த வேந்தனுக்குரியன சில கூறுவானெடுத்துக்கொண்டார். இத்துணையும் பெரும்பாலும் இல்வாழ்வார்க்குரிய அறவொழுக்கமெல்லாம் கூறி, இனி அவ் வில்வாழ்வாருள்ளும் பூமியை ஆளும் வேந்தர்க்குரியன சில தொகுத்துணர்த்துவாராய் அவ்வேந்தர் தம் தேசத்தை நெறியின் வைத்துக் காத்தற்குத் தேசாபிமானமே முக்கிய காரணமாதலான் அதனை முதற்கண் வைத்துரைக்கின்றார். மேற்கூறிய புகழ் நிலைப்பது பூமியின்கண்ணாகலின், அதனோடியைபுணரப்படும்.

இதன்பொருள்: நீ பிறந்ததும், ஆளுவதுமான பூமியை அன்பு செய்க என்றவாறு.

அரசன் தன் பூமியில் அன்பிலனாயின் மரங்களைச் சுட்டு விற்று வாழும் கரி வாணிகனைப் போலாவன். அன்பு செய்வா

னாயின் மரங்களை வைத்து வளர்த்து வாழும் பூ வாணிகன் போலாவன் என்க. 'அரசும் இல்வாழ்வா ரில்வழி யில்லை' (சிந்தாமணி. 799).

அரசரை வேறு கூறுதல் நீ உன்னை விரும்பற்க என்பதற் கருத்தாபத்தியாம்.

இனிப் 'பூமி திருத்தி யுண்' எனப்பாடமோதுவாருமுளர். அதற்கு நீ பிறந்ததும் ஆளுவதுமான பூமியைத் திருந்தச் செய்து அதனாலுண்டாம் பலனை நுகர்க என்க.

''ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு'' (குறள். 740)

என்பதன்கட் குறித்த வேந்தமைவு என்பதனாற் கூறினார்.

83. பெரியாரைத் துணைக்கொள்

இஃது அப்பூமியை அன்பு செய்வான் அவ் வன்பினால் உலகாளும் முறை யின்னதென்று தனக்குக் காட்டித் தன்னை நெறிப்படுத்தும் அமைச்சர் புரோகிதராகிய பேரறிவுடையாளரைத் துணைக்கொள் என்கின்றது.

இதன்பொருள்: அறிவானும், சீலத்தானும், காலத்தானும் பெரியவராயுள்ளவரை உனக்குத் துணையாகக் கொள்க என்றவாறு.

நீயே தனியேயாளற்க என்பது இதற்கருத்தாபத்தியாம். தானே தனியே யாளப்புகின் 'யானை புக்க புலம்போலத் தானும முண்ணா துலகமுங் கெடுமென்க'

84. பேதைமை யகற்று

அப்பெரியாரைத் துணைக்கொள்வ ததன்பொருட்டெனின் இதன் பொருட்டென்கின்றது இது.

இதன்பொருள் : நீ அறியாமையை ஒழிக்க என்றவாறு.

அறியாமையாவது எதனையும் உள்ளவாறுணரா்மை. அரசன் நன்றுந் தீதும் உள்ளவாறு உணர்ந்தவழியன்றே அவன் முறையே அளியும் தெறலும் புரியலாவன். உள்ளவாறுணரானாயின் நன்று செய்தாரை ஒறுத்தும், தீது செய்தாரை அருளியும் முறைகெட்டு அரசனென்னும் பெயர்க்கும் உரிமை பெறாதவனாவான்.

''குற்ற மிலரைக் குறித்தொறுத்துக் குற்றமே
முற்று முளரை முனியாதான் — சுற்றுகடல்
ஆர்க்கும் புவியனைத்து மாண்டாலும் வேந்தனெனும்
பேர்க்கு முரிமை பெறான்''

என்பது யாம் பாடிய பாரத நீதி.

அறிவினைப் போற்றிக்கொள் என்பதிதற்கருத்தாபத்தியாம்.

85. பைதலோ டிணங்கேல்

மேற் பேதைமை யகற்றியதனோடு இது பேதையனோ டிணங்காமற் பாதுகாக்கின்றது.

இதன்பொருள் : இளம்பிள்ளையோடு நட்புக்கொள் ளற்க என்றவாறு.

பைதல் — இளம்பிள்ளைக்கொரு பெயரென்பது. 'சிறுகிளிப் பைதல்', 'குயிற்பைதல்காள்' எனத் திருவாய்மொழிக்கண் வருத லானுணர்க. அறிவுமுதிராது எப்போதுங் கல்லா இளம்பிள்ளை போலவே இருத்தலின் பேதையாயினான் ஈண்டுப் பைதல் எனப் பட்டான் என்க. இப்பேதையாயினானுடைய மிகச்செறிந்த நட்பினும் அறிவுடையானது பகைமை கோடிமடங்கு நன் றென்பது.

''பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும்'' (குறள். 816)

என்னுந் திருக்குறளானுணர்க.

''பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்'' (குறள். 751)

என்பதுபற்றி அறிவில்லார் பொருளுடையராயிருப்பின் அவர் பொருளுடைமை பற்றிப் பொருளுடைய நீ இணங்கற்க என்று அறிவுறுத்தினார்.

''பைதற் பிணக்குழைக் காளிவெங்
கோபம் பங்கப் படுப்பான்'' (தேவா...

பைதல்—வருத்தம். 'பாடின்றிப் பசந்தகண் பைதல்பனிமல்க' (கலி), 'பாழ்பட்ட முகத்தொடு பைதல்கொண் டமைவாளோ (கலி).

துன்பம் வருங்கால் அதனை அடுத்தூர்வதல்லது அது வருத்து தற்கு இணங்கி வருந்தலாகாது.

பைதல்—இளையன் எனக்கொண்டு, 'அது யான்கண் டனைய ரென் னிளையரும்' (புறம்) என்பது பற்றி ஏவற்றொழில் செய் வானைக் குறித்தது என்று கருதினும் அமையும். தன் ஏவற் றொழில் செய்வானோடு அரசன் சிரித்திருத்தலும் ஆகாது என்பது வியாசபாரதத்துட் கண்டது.

''ஏவற் றொழிற்செய் யிளைய ருடன்சிரிப்பைக்
காவற் சகடுகைப்பான் காதலிப்பின்—ஏவுற்ற
பாசம் பிணித்த பறவைபோ லாமவர்தம்
நேசம் பிணிக்க நெடிது''

என்பது யாம் பாடிய பாரத நீதி.

86. பொருடனைப் போற்றிவாழ்

இது பைதலோடிணங்காது பெரியரைத் துணைக்கொண்டு பேதைமையை அகற்றிப் பெற்ற அறிவால் அறத்தையும் இன்பத் தையும் தரவல்ல பொருளைக் காக்க என்கின்றது.

இதன்பொருள்: எல்லாச் சிறப்புக்கு மூலகாரணமாகிய பொருளைப் பேணிக் கொண்டுய்த்து வாழ்வாயாக என்றவாறு.

பொருடனைப் பேணாது விடின் நீ வாழ்தலில்லை என்ப திதற்கருத்தாபத்தியாம்.

''பொன்னினாகும் பொருபடை யப்படை
தன்னி னாகுந் தரணி'' (சிந்தாமணி)

என்பவாகலின் அரசற்குப் பொருள் சிறத்தல் கண்டு கொள்க. போற்றி—பேணி.

''ஆற்றி னளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி'' (குறள். 477)

87. போர்த்தொழில் புரியேல்

பொருள் போற்றிய காரணமாக இது செய்யற்க என்கின்றது இது.

இதன்பொருள் : பொருள் போற்றிய காரணமாக அறனும் இன்பமும் வளர்ப்பதல்லது படையை வளர்த்து வேற்றரசனென்று போர்செய்தலை விரும்பற்க என்றவாறு.

வேற்றரசரோடு நட்புச் செய்தலை விரும்புக என்பதிதற் கருத்தாபத்தியாம்.

''யாரொ டும்பகை கொள்ளல னென்றபிற்
போரொ டுங்கும் புகழொ டுங்காது''

என்றார் கம்பநாடர். வெற்றிப் புகழொடுங்கும் போரொர்டுங்கு தலாற் போர்த்த புகழொடுங்காது.

88. மனந்தடு மாறேல்

இது போரெழின் மனம் தடுமாறாமை கூறுவது. இவன் போர்த்தொழிலை விரும்பானாயினும் வேற்றரசனிவனோடு நட்புச் செய்தலை விரும்பாது இவனோடு போர்க்கெழுவானாயின் ஆண்டிவன் செய்யுமாறு கூறுவார் முதற்கண் இவன் மனவலியுடையனாகுக என்கின்றார்.

இதன்பொருள் : உன் உள்ளம் நிலைகுலையற்க என்றவாறு.

படைவலி, துணைவலி எல்லாம் பயன்படுவது அரசன் மனவலியுடையனாய போதேயாம் என்பது இதனாற் குறிப்பித்தார்.

தலைமையுடைய நீ நிலைகுலையின் உன்னைச் சார்ந்தன வெல்லாம் நிலைகுலையுமாதலின் நீ மனங்கலங்காதிருக்க என்றார். இம் மனந்தடுமாறாமையே வீரம், மறம் என்னும் பெயர்களாற் கூறப்படும். பகைவர் படைநடுவே தன்னகத்துப் புகுமாறு போலப் புகவல்ல மனோதைரியமே அரசர்க்குச் சிறந்த வீரம் என்ப.

மனோதைரியஞ் சிறந்திருக்க என்பது இதற்கருத்தாபத்தியாம்.

மேலே 'நைவினை நணுகேல்' என இடுக்கணழியாமை கூறிற்று; இது போர் நேர்ந்த இடத்து மனவலி குன்றா வீரம் கூறிற்று.

89. மாற்றானுக் கிடங்கொடேல்

மேற்கூறிய மனோதைரியத்தின் பயனாக இது செய்க என்கின்றது.

இதன்பொருள் : நின்னொடு மாறுபட்ட பகையரசனுக்கு உன்னாட்டி விடங்கொடாதிருக்க என்றவாறு.

மாற்றரசன் நாட்டில் நீ இடங்கொள்க என்பதிதற் கருத்தாபத்தியாம்.

இடங்கொடேல்—நீ யாளும் நாட்டில் ஓரிடமும் கொடாதொழிக. பொருள் கொடுத்து விடுக; பொருட்குக் காரணமான இடத்தைக் கொடாதொழிக.

மாற்றான்—மாறுபட்டான். உக்கு—சிதைந்து எனப் பிரிக்கவும் ஆம்.

90 மிகைபடச் சொல்லேல்

பகைவற் கிடங்கொடாமையன்றி வேறு பகைஞனை உண்டு பண்ணாமையும் வேண்டுவதாதலின் அதனை இது கூறுகின்றது.

இதன்பொருள் : மற்றை அரசர்களினும் உன்னை வீரத்தால் மிகுதிப்படக் கூறற்க என்றவாறு.

இங்ஙனம் ஓரரசர் தம்மை வீரத்தால் மிகுத்துக் கூறுவது மற்றை அரசர்க்குச் செற்றம் விளைத்துப் பகைமையே யுண்டு பண்ணுமென்பது வடவாரிய அரசராகிய கனகவிசயர் தம்மை வீரத்தால் மிகுத்துக் கூறித் தமிழரசரையிகழ்ந்த செய்தியைச்

சேரன் செங்குட்டுவன் கேட்டுச் செற்றங்கொண்டு அவர்மேற் போர்க்கெழுந்து பொருததனாலும் உணர்க.

''சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலும் சொல்லார் மிகுதிச் சொல்'' (நாலடி)

கூறாமலே உன்னை மிகுதிப்படுத்துக என்பது இதற்கருத்தாபத்தியாம். பிறர் உன்னை மிகுத்துச் சொல்லும்படியிருக்கப் பிற அரசர்க்குக் குற்றமுண்டாக உரையற்க எனினும் அமையும்.

மிகை என்பது கல்லாமையும், செல்வமும், இளமையும் முதலாக வரும் உள்ளமிகுதி என்றார் பேராசிரியரும்.

91. மீதூண் விரும்பேல்

மேல் வேற்றரசர்க்குச் செற்றமுண்டாகாதவாறு கூறினார்; இது அரசன் தன்னாடு செற்றங் கொள்ளாதவாறு கூறுகின்றது.

இதன்பொருள்: நீ அளவின் மேல் அநுபவிப்பதனை விழையற்க என்றவாறு.

ஒருவற்குத் தாரகபோஷக போக்கிய ரூபமாக அநுபவிப்பன வெல்லாம் அடங்க 'ஊண்' என்றார். அரசன் அளவுக்கு மேல் அநுபவ பதார்த்தங்களை விழையின் தன்னாட்டில் இறை அதிகங் கொண்டு குடிகள்பொருள்களைக் கொள்ளை கொள்பவனாவ னென்றுணர்க.

''உண்டற் குரிய வல்லாப் பொருளையும்
உண்டன போலக் கிளத்தலும் மரபே''*
(தொல். பொருளியல். 18)

என்பதனால் 'ஊண்' என்றார்.

அளவுக்கே குறையாக அநுபவிப்பதை விரும்புக என்பது இதற்கருத்தாபத்தியாம்.

---

* சரியான நூற்பா வடிவம்:
'' உண்டற் குரிய வல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே''
(தொல். பொருளியல். 18)

92. முனைமுகத்து நில்லேல்

வேற்றரசரும் தன்குடியும் செற்றங் கொள்ளாவாறு கூறினார். இதனாற்றமரும் நட்டாரும் செற்றங் கொள்ளாவா ரொழுகுக என்கின்றார்.

இதன்பொருள்: தமரேனும் நட்டாரேனும் தம்முள் கலாய்த்துப் பொருகின்ற போர்முகத்தில் நீ யொருபால் நிற்காம லொழுகுக என்றவாறு.

> ''இருவர் புதல்வ ரிகலிப் பொருத
> செருமற் றறிந்து திருத்தாயோ—ஒருவர்க்கும்
> சார்பாகா வாறு தமர்க்கெல்லா மொத்தியல்க
> பார்பா லனஞ்செய் பவர்''

என்பது யாம்பாடிய பாரத நீதி.

தமரும் நட்டாரும் உன்னைச் செற்றங் கொள்ளாவாறு அவர்தம்முள் நட்புச் செய்யுமிடத்து இருவர்க்கும் ஒத்து நிற்க என்பது இதற்கருத்தாபத்தியாம்.

93. மூர்க்கரோ டிணங்கேல்

மற்று இவன் தமரும் நட்டாரும் மூர்க்கராயின் என் செய்வ தெனின் இது செய்க என்கின்றது.

இதன்பொருள்: தாங்கொண்ட தீக்குணத்தைக் குற்ற மென்றுணர்ந்தும் விடாத புல்லறிவாளரொடு நட்புக் கொள்ளற்க என்றவாறு.

மேல், இணக்கமறிந்திணங்கென்றார். ஈண்டு, மூர்க்கர் நின்னை நட்புச் செய்தாலும் நீ அவரை நட்புச் செய்யற்க என்றார். இவ் வியல்பினராய மூர்க்கரே தாம் பிடித்தது சாதிப் பாராய்த் தம்முள் முனைவாரென்பது ஆனந்தரியத்தாற் கொள்ள வைத்தார்.

நல்ல குணமுடைய தமர் நட்பினர் இவரோ டிணங்குக என்பது இதற்கு அருத்தாபத்தியாம்.

மேல், 'பைதல்' என்றதற்கும் ஈண்டு 'மூர்க்கர்' என்றதற்கும் வேற்றுமை என்னையெனின் பைதல் பேதையாதலின் யாதும் அறியாதவன் ஆவான். மூர்க்கர் குற்றம் என்று உணர்ந்தும் திக்குணத்தை விடாத புல்லறிவினராவர் என்க. 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்' என்ப.

94. மெல்லினல்லாள் தோள்சேர்

மேற்கூறியவாறு பூமியை விரும்பி ஆளுகின்ற நீ விரும்பிய பூமியை உன் பின்னும் காக்கப்படுதலை வேண்டி அரசனைத் தோற்றுவித்தற் பொருட்டும் உன் இன்பத்தின் பொருட்டும் இது புரிக என்கின்றது.

இதன்பொருள்: மென்மையுடைய இற்கிழத்தியாகிய நல்லவள் தோள்களைப் புணர்க என்றவாறு.

மென்மை—ஐம்பொறியானும் நுகரப்படும் மென்மை (சிந்தாமணி. 7 நச்சர். உரை).

''எச்சம் விளையு மிகுநிலனாக் கொண்டாற்கு
நிச்சம் மகிழ்பழுக்கு நீடருவாய் — வைச்ச
நிதியா யறிவாய் நிறையான் மறுத்தீர்
மதியாய் வதிவாள் மனை''

என்பது யாம் பாடிய பாரத நீதி. இக்கூறிய குணமெலாமுடையாள் எல்பார் 'நல்லாள்' என்றார். மென்மை — தலைவனைப் பிரிதலைப் பொறுக்க மாட்டாத மார்த்தவம். 'உலகெலாம் ஒரு நாயகமாய் ஆளும் பெருமுடி வேந்தனுடைய இன்பம் அவன் ஆட்சிக்குள்ளாகிய பேருலகின்கண் யாண்டுள்ளது என்று ஆராயப் புகின் வேறெங்குமின்றித் தன் கோயிலிலே பள்ளியறையிலே பட்டமகஷியின்பாலே யுள்ளது என்று தெளியலாம்' என்று மகா கவியாகிய காளிதானும் கூறினார். மக்கட்பெறலின் மனைக்கிழத்தி என்றார் பிறரும்.

இற்கிழத்தியில்லாதாள் தோள் சேரற்க என்பதிதற்கு அருத்தாபத்தியாம்.

95. மேன்மக்கள் சொற்கேள்

மேற்கூறியாங்கு அவள் தோள் புணர்தலே யன்றி அவள் சொல்வழியே யொழுகுதலாகாதென்பது 'தையல்சொற் கேளேல்'

என்பதனாற் பொதுவாக விலக்கியதனாற் பெறப்பட்டதாகலின் மற்றி யார் சொற்கேட்பதென்றாற்கு இவர் சொற்கேட்க என்கின்றது இது.

இதன்பொருள் : உயர்குடிப் பிறந்தாருடைய சொல்லைக் கேட்க என்றவாறு.

குடிப்பிறந்தார் ஆக்கத்தில் ஒரு படியாகவும் கேட்டில் ஒருபடியாகவும் இல்லாமல் எப்போது முயர்குணமுடையோராகவே காணப்படும் மாட்சியால் அவர் சொற் கேட்க என்றார்.

மேன்மக்கள் அல்லார் சொற் கேளற்க என்பது இதற்கருத்தாபத்திடாம்.

96. மைவிழியார் மனையகல்

மேன்மக்கள் சொற்கேட்டதன் பயனாக இக் குற்றம் நீங்கும் என்கின்றது. திருநீக்கப்பட்டார் தொடர்பாகிய இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும் என்னும் மூன்றனுள் கள் 'அனந்தராடேல்'* என்பதனானும், கவறு 'தோற்பன தொடரேல்' என்பதனானும் கூறப்பட்டனவாதலின் எஞ்சியதனை ஈண்டுக் கூறுகின்றார் என உணர்க.

இதன்பொருள் : மை தீட்டிய கண்ணினையுடையார்க்குரிய மனைகளை நெருங்காமற் செல்க என்றவாறு.

மனை — கணிகைக் கிருகமாயிற்று; அல்லது மகளிர்க்குரிய தாகாமையின். மைவிழியார் என்றது கணிகையர்க்கு வைதவ்வியமே யில்லாமை பற்றி 'மைவிழியார்' என்றார்.

உலகுடைய வேந்தனேயாயினும் இப் பொருட்பெண்டிராற் பொருட் கேடுற்றுப் பூரியனாமென்ப தறிவுறுப்பானிதனை ஈண்டு வைத்தார்.

பொருள் காரணமாக ஒளிமங்கப் பொய்யே காட்டி மயக்கும் பேதையர் மனையினை யகல்க என்பதற்கு அருள்காரணமாக

---

* மேல் 'அனந்த லாடேல்' என லகர ஈறாகப் பாடங் கொண்டுள்ளதால் இங்கு அவ்வாறே கொள்ளுதல் சிறப்பு.

அறத்தை மெய்யே காட்டித் தெளிவாக்கும் அறிவரகத்துச் செல்க என்பது அருத்தாபத்தியாம். 'மாயப்பொய் கூட்டி மயக்கும் விலைக் கணிகை' என்றார் பரிபாட்டினும். 'மனையகல்' என்ப தனானே அவரை அகறல் கூறவேண்டாதாயிற்று. 'கடைகழி மகளிர்' (சிலப். ஊர்காண் காதை) ஆதலான் அவர் மனைப் பக்கத்துப் போயினும் அவரைக் காணுமாகலின் 'மனையகல்' என்றார். வஞ்சமும் களவுமுடைய விழியார் எனினுமையும்.

97. மொழிவ தறமொழி

இங்ஙனம் குற்றமிலனாக நீயமர்ந்து பிறர்குற்றங் கண்டு நியாயம் சொல்லப்புக்குழி இவ்வாறு சொல்க என்கின்றது இது.

இதன்பொருள்: சொல்வதெல்லாம் தர்மமாகச் சொல்க என்றவாறு.

அரசன் சொல்வதே யாணையாய் உலகம் கொண்டு ஒழுக வேண்டுதலின் அறமாக மொழிக என்றார்.

நீ பின் சொல்வ தற முன்சொல்க என்றும் வழக்கைத் தீர்த்து முடிபுரை கூறுமிடத்துப் பின் வழக்கறப் பேசுக என்றும் வேறொ ருவன் உன் சொல்லுக்கு மேல் சொல்வதில்லையாகச் சொல்க என்றுங் கூறினுமமையும்.

பாவமாக எதனையும் பேசற்க என்பது இதற்கருத்தாபத்தி யாம்.

98. மோகத்தை முனி

இத்துணையும் இல்வாழ்வார்க்குரியனவும் அவ்வில்வாழ்வா ருள்ளும் அரசர்க்காவனவும் கூறிய முகத்தான் அறத்தின் பகுதி யாகிய இல்லறங் கூறி முடித்து, ஏனைத் துறவறங் கூறுவா னெடுத்துக் கொண்டு முதற்கண் இல்வாழ்க்கையின்கட் பயின்ற வாசனை வயத்தா லுள்ளத்தூன்றிய பற்றினை யறுக்குமாறு கூறு கின்றார்.

இதன்பொருள்: உன் உடம்பின் மேலும் பொருள்கள் மேலும் உள்ள பற்றினை வெறுத்துத் தள்ளுக என்ற வாறு.

மேற் பொதுவகையாற் காமத்தை 'இயல்வதுகரவேல்' என்பதனானும், குரோதத்தை 'அவ்வியம்* பேசேல்' 'ஈவதுவிலக்கேல்' என்பவற்றானும், லோபத்தைத் 'தானமிட விரும்பு' என்பதனானும் கூறினாராதலின் ஈண்டு அவையொழிந்த மோக மத மாற்சரியம் முறையே கூறுவான் எடுத்துக்கொண்டு முதற்கண் மோகம் ஒழிக என்கின்றார். முனிதலென்பது வெறுத்தலாம். (தொல். மெய்ப்பாடு).

99. வல்லமை பேசேல்

மேல் மோகம் ஒழிக என்றார்; இதனால் மதம் ஒழிக என்கின்றார்.

இதன்பொருள்: மோகத்தை முனிந்தான் வேண்டாமை என்னும் விழுச்செல்வ முடையனாவனன்றே; அவ் வேண்டாமையா னுண்டாம் ஆற்றலை உன் வாயாற் புகழ்ந்துரையற்க என்றவாறு.

தன்னாற்றலைத் தான் கூறுவது மதத்தின் காரியமென்பது தெள்ளிது.

பணிந்து மொழிக என்பதிதற் கருத்தாபத்தியாம். 'தந்தையு நெடியவல்லது பணிந்து மொழியலனே' என்றார் பிறரும்.

100. வாதுமுற் கூறேல்

இது, மாற்சரிய மொழிக என்கின்றது.

தம் வல்லமையைப் பிறரறியக் கூறாதாரும் பிறரொருவர் தாம் வல்லமையுடையரென்று கூறி னவரோடு வாதிப்பரன்றே; அங்ஙனம் வாதிப்பது மாற்சரியத்தின் காரியமாதலின் அதனை ஒழிக என்கின்றது.

இதன்பொருள்: முற்பட வாதங் காரணமாக ஒன்றைக் கூறாதொழிக என்றவாறு.

---

* மேல் 'ஔவியம் பேசேல்' (12) என்று செய்யப்பெற்றுள்ளதால் இங்கும் 'ஔவியம்' என்றே பாடம் கொள்ளல் வேண்டும்.

'அதிவாதந்தவிஜேக்ஷு' என்பது வேதமாதலின் துறவிகட்கிது ஆகாதென்றார்.

விவாதமல்லவற்றையே முற்படக் கூறுக என்பது இதற்கு அருத்தாபத்தியாம். 'யார்திறந்தும் வாது வல்லான்' (ஏலாதி).

101. வித்தை விரும்பு

மோக மத மாற்சரியம் நீங்கியவன் பிரமஞானமெய்துமாறு கூறுகின்றது.

இதன்பொருள் : பிரம வித்தையினை அன்பு செய்க என்றவாறு.

பிரம சூத்திரமுதற்கட் பிரமஞான இச்சையே வேத வியாச பகவானுங் கூறினார். பிரமத்தையறியும் வித்தையே வித்தை; மற்றவையெல்லாம் 'சில்ப நைபுணமென்று' பராசரபகவான் கூறினார்.

துறவியாய நீ பிரமவித்தை யல்லாதவற்றை விரும்பற்க என்பதிதற் கருத்தாபத்தியாம். 'கற்பக் கழிமட மஃகும்' (நான்மணி).

102. வீடுபெற நில்

பிரம வித்தையை விரும்பிய நீ யதற்குத் தக நிற்க என்கின்றது.

இதன்பொருள் : நீ வீட்டைப் பெறுமாறு ஞான மார்க்கத்திலே நிற்க என்றவாறு.

வீடு—விடுதலானுண்டாவது. வீடு பெற என்பது வீடுடையான் அவ் வீடு தருதலைக் குறிப்பா னுணர்த்திநின்றது.

''நாறிணர்த் துழாயா னல்கி னல்லதை
யேறுத லெளிதோ வீறுபெறு துறக்கம்''

என்றார் பரிபாடலினும். 'நெஞ்சமடங்குதல் வீடாகும்' என்றார் பிறரும். வீடு பெறுமாறு பிரமவித்தைக்கு மாறான நெறியி னில்லேல் என்பதிதற்கு அருத்தாபத்தியாம்.

103. அம்ம வுத்தமனா யிரு

இது, வீடு பெற நிற்கு நீ அவ் வீடு பெறுதற்குரிய அதிகாரி யாகுக என்கின்றது.

இதன்பொருள் : வீடு பெறுதற்கேற்ற உத்தம அதிகாரி விசேடணமுடையவனாக இருக்க என்றவாறு.

உத்தம ஆச்சிரமியாகிய நீ உத்தமாதிகாரியாயிரு என்றபடி. தரம், தமம், உத்தமம் என மூன்றாம். ஈண்டுப் பாவமில்லாமை தரம். புண்ணியமுடைமை தமம். பாவ புண்ணியமிரண்டுமின்மை உத்தமமென்று கொள்க. பாவ புண்ணியங்களை உதறினவனே உத்தமாதிகாரியென்ப.

நெஞ்சிற் றுறவாத அதமனாயிராதே என்பதிதற்கருத்தா பத்தியாம்.

104. அம்ம வூருடன் கூடிவாழ்

இது, அத்துறவி உலகில் வாழுமாறு கூறுகின்றது.

இதன்பொருள் : துறவுநிலையில் வீடுபெற நிற்கின்ற உத்தமனான நீ மற்ற நிலையிலுள்ள ஊரார் எல்லா ருடனும் பகைமையும் ஏதின்மையுமிலனாகி நட்டானா யொழுகுக என்றவாறு.

கூடி வாழ் என்றதனால் நின்றுறவுக்குக் கூடாதார் மலிந்தவூர் என்பது பெறப்படும்.

கூடாவிடிற் றுறவின்கண் நீ வாழுமாறில்லை 'என்பதிதற் கருத்தாபத்தியாம். தாமரையினீர் போல் ஒட்டியும் ஒட்டாமலு மிருக்க என்பதாம். 'சனங்க ளுவப்பன செய்யாவுஞ் செய்க' (பழமொழி), 'ஓடுகவூரோடு மாறு' (பழமொழி).

105. வெட்டெனப் பேசேல்

ஊருடன் கூடி வாழென்றார்; அங்ஙனம் வாழுமிடத்து அவ் வூராருடன் உரையாடுதல் கூடுமன்றே; அதனை இங்ஙனம் புரிக

என்கின்றது. இது உள்ளம், உரை, செயல் என்ற இம்மூன்று என்று கூறியவற்றுள் உரை என்பதாம்.

இதன்பொருள்: வாளா உரையாடற்க என்றவாறு.

அநுசித விஷயங்களில் வாய் திறவாமையே மௌனமென்ப. 'வெட்டெனன் மற' என்பதூஉம் பாடம். வாளாவுரையாடலை உள்ளத்தாலும் நினையற்க என்றவாறு. வெட்டெனல் என்பது இப்பொருட்டாதல், 'கபட வெட்டென் றிருந்தான்' எனவரும் பெரியார் திருவாக்கானுணர்க. (பட்டினத்தார்—திருவேகம்ப) 'வெடுவெடன்று'. 'மௌனியாக விருக்க' என்பதிதற்கருத்தா பத்தியாம்.

''வெட்டெனப்..............

....

இனி, அவ்வூரார்க்கு ஒன்றுரைக்கப்புகின் அவர் கடுமையாகக் கருதும்படி உரையற்க எனினுமமையும். உற்றது கூறுமிடத்தும் இதமாகக் கூறுவதல்லது வெட்டெனக் கூறின் அது கடுஞ்சொல் லாகிய வாக்குப் பாவமாமென்க. இதனுண்மையினைக்

''கெட்டகழு தைக்குரல தென்பகுயில் கூவின்
நட்டவர்கள் போன்மகிழ்வர் நண்பதனோ டென்னை
பட்டபொருள் சொல்லலுற லுண்டெனினும் யாரும்
வெட்டென வுரைத்தலை விடுத்திடுமி னென்றான்''

(நீலகேசி விருத்தி) என்ற பழைய பாடலான் அறிக. 'அறமனத் தார் கூறுங் கடுமொழியு மின்னா' என்றார் பிறரும்.

106. வேண்டி வினைசெயல்

அங்ஙனம் மௌனஞ் சாதிக்கும் உன்செயல் இங்ஙனமாகுக என்கின்றது இது.

இதன்பொருள் : பயன் கருதி யொருசெயலும் செய் யற்க என்றவாறு.

ஈண்டு வினை என்றது துறவிக்கே சிறப்பாக விதிக்கப்பட்ட அநுட்டான தர்மங்களை. தனக்கென ஒருபயன் வேண்டினனா யின் அவன் தானறப் பெறாதவனாம்.

பயன் வேண்டாது பகவத் கைங்கரியமாகப் புரிக என்பதிதற்கு அருத்தாபத்தியாம். துறவிகளாகிய தெளிந்த ஞானிகள் கடவுளடிப்பத்திமையன்றி வீடும் வேண்டா விறலுடையார் என்பது, வீடு பெறினுங் கொள்ள வெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே என்னுந் திருவாக்கானுணர்க.

''வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்'' (குறள். 265)

தம்மிஷ்ட சித்தி பெற வேண்டித் தவஞ் செய்தலுண்டன்றே; அங்ஙனம் ஒன்று வேண்டித் தவவினை செய்யற்க எனினுமையும்.

107. வைகறைத் தொழுதெழு

மற்றுச் செய்வதியாதென்றாற்கு விடையாக எழுந்தது இஃதென்க.

இதன்பொருள் : அற்றை நாளறுதற்குரிய கடையாமத்தே கடவுளைத் தொழாநின்றெழுக என்றவாறு.

துயிலப்புகும்போதும் கடவுளைத் தொழுதலே வினையாதலின் எழும்போதும் அதுவே தொழிலாயிற்றென்க.

இதனைத்'தொழுதெழுவார் வளநீறெழ நீறணி யம்பலவன்' என்புழிப் பேராசிரியர் கூறியவுரையானுணர்க. 'முற்பகலெல்லா முயல்க வறப்பயனே' என்ப.

108. அம்ம வொன்னாரைத் தேறேல்

இங்ஙனம் உரையுஞ் செயலும் ஆளுகின்ற நீ உன் மனத்தை யிங்ஙனம் ஆளுக என்கின்றது.

இதன்பொருள் : துறவுக்கு விரோதியரான செல்வர், பெண்பாலார், விடர், தூர்த்தர், விட்டேற்றாளர், நடகாயகர் முதலியோரை அநுகூலராகத் தெளியற்க என்றவாறு.

இஃது 'ஊருடன் கூடிவாழ்' என்றதற்கோர் புறனடையுமாம். இனி சத்ருநோ நித்யசத்ருக்ந' என்பதன்கட்போல ஒன்னார்

என்பது நித்ய சத்ருக்கள் என்று கொண்டு அஷ்டவர்க்கங்க ளெனவும் பகவத்பாகவத கைங்கரிய விரோதிகளெனவும் கூறினு மமையும்.

ஸந்யாஸத்துக்கு அநுகூலரைத் தெளிந்து கொள்க.

109. அம்ம வோர்ந்து வழிபோ

இது மேற்கூறியவற்றான் மெய்யுணர்ந்தே மேனெறிச் செல்க என்கின்றது.

இதன்பொருள் : மெய்யுணர்ந்து வீடியல் வழியிற் செல்க என்றவாறு.

ஓர்தல்—மெய்யுணர்தல். வழி—மோக்ஷமார்க்கம். 'திருமாலே நின்னடியை வந்திப்பார் காண்பர்வழி' என்பவைபோல(பொய்கை யார். 75), 'வீடியல் வழியதாக்கும்' என்றார் கல்வியிற் பெரியாரும்.

மெய்யுணராது அதோகதியிற் செல்லற்க என்பது இதற் கருத்தாபத்தியாம்.

இனி, 'ஓரஞ் செல்லேல்' என்பது பாடமாயின் வீட்டு நெறி யாகிய இருவினை ஒழிப்பின் இயங்குகின்ற நீ அவ் விருவினை யொப்புநெறிக்கு இரண்டருகுமாகிய பாவ புண்ணியங்களிற் செல்லற்க என்க.

பாவம் நரகத்தும், புண்ணியம் சுவர்க்கத்தும், இருவினை யொப்பு வீட்டின் கண்ணும் புகுவிக்கு மென்க.

ஆத்திசூடியுரை நிறைவேறியது

உரைவேறுபாடுகள்

உரைவேறுபாடுகளுள் பாடவேறுபாடுகளும் சுட்டப்பெற்றுள்ளன.

எண்கள் ரா. இராகவையங்கார் கொண்ட ஆத்திசூடி எண்களைக் குறிக்கின்றன.

ரா. இராகவையங்கார் [அ]
ஆறுமுகநாவலர் [ஆ]
வேங்கடசாமி நாட்டார் [இ]

உரைப்பாயிரம் அ : உரைப்பாயிரம் கூறப்பட்டுள்ளது.
ஆ : உரைப்பாயிரம் கூறப்படவில்லை.
இ : ,, ,,

கடவுள் வாழ்த்து அ : கடவுள் பெயர் சுட்டப்பெறவில்லை.
ஆ : விநாயகக் கடவுள் என்று சுட்டப் பெற்றுள்ளது.
இ : ,, ,,

1. அ : அறத்தை செய்ய அறத்தை விரும்பு.
ஆ : அறத்தை செய்ய விரும்பு.
இ : ,,

2. அ : சினமாகிய தீ என உருவகஞ் செய்யப்பட்டுள்ளது.
ஆ : உருவகஞ் செய்யப்பெறவில்லை.
இ : ,,

3. அ : கரவேல் – ஒளியாமலுதவுக.
ஆ : – ஒளியாதே.
இ : – ,,

5. அ : உடையது – உன்னுடையதாகிய நன்மையினையும் பிறருடையதாகிய தீமையினையும்.
ஆ : – உனக்கு உள்ள பொருளை.
இ : – ,,

6. அ : ஊக்க மதுகை விடேல் எனப் பிரித்து ஊக்கமாகிய வலி என்று கொண்டார்.
ஆ : ஊக்கமது கைவிடேல் எனக் கொண்டார்.
இ : ,,

9. அ : உண் — எஞ்சியதை உண்.
ஆ : — நீயும் உண்ணு.
இ : — நீ உண்ணு.

10. அ : ஒப்புரவு — எல்லார்க்கும் உபகாரஞ் செய்வதாகிய நெறி.
ஆ : — உலகநடை.
இ : — ,,

11. அ : ஓதுவது — வேதம் ஓதுதலை.
ஆ : — அறிவு நூல்களை வாசிப்பதை.
இ : — எப்பொழுதும் படிப்பதை.

13. அ : சுருக்கேல் — அளவைச் சுருக்காதே.
ஆ : — அளவைக் குறைக்காதே.
இ : — விலையைக் குறைக்காதே.

16. அ : சனியின் நீர்மையில் சஞ்சாரம் செய்.
ஆ : சனிக்கிழமை தோறும் எண்ணெய் இட்டுக் கொண்டு நீரிலே முழுகு.
இ : ,,

17. அ : ஞயம்பட — விருப்பமுண்டாக.
ஆ : — இன்பம் விளையும்படி.
இ : — ,,

18. அ : 'வீடிடேல்' (பா. வே.)
ஆ : 'வீடெடேல்' (பா. வே.)
இ : ,,

அ : இடம்பட — பொருள்கெட.
ஆ : — இடமானது அளவுக்கு வெறுமையாய்க் கிடக்கும்படி.
இ : — ,,

அ : மனையெடுக்குங்கால் ஒருவற்குத் தன்னிராசி இடது புறத்தில் திக்கிலிருக்க எடுத்தலாகாது.
ஆ : அவ்வாறு கூறவில்லை.
இ : ,,

20. அ : பேண் — பேணாத போதும் விரும்பிப் போற்றுக.
ஆ : — எப்போதும் பூசித்துக் காப்பாற்று
இ : — அன்புடன் போற்றிக் காப்பாற்று.

21. அ : நன்றி — நன்மை.
ஆ : — உபசாரம்.
இ : — நன்மை.

22. அ : காலந்தப்பாது பயிரினை விளைவிக்க.
ஆ : பக்குவ காலத்தில் வேண்டும் முயற்சிகளைச் செய்.
இ : பருவமறிந்து பயிரிடு.

23. அ : உண்ணேல் — அநுபவிக்காதே.
ஆ : — சீவனம் பண்ணாதே.
இ : — உண்டு வாழாதே.
— லஞ்சம் வாங்காதே.

24. அ : இயல்பலாதன — உன் வருணத்திற்கும் நிலைக்கும் இயல்பல்லாதவற்றை.
ஆ : — தருமநூலுக்குப் பொருத்தமல்லாதவைகளை.
இ : — இயற்கைக்கு மாறான செய்கைகளை.

26. அ : 'கிட' (பா. வே.)
ஆ : 'துயில்' (பா. வே.)
இ : ,,

அ : இல் — உவம உருபு.
ஆ : — ஏழாம் வேற்றுமை உருபு.
இ : — ,,

அ : இலவின் பஞ்சு போலக் கிடந்துறங்குக.
ஆ : இலவம் பஞ்சு மெத்தையிலே நீ நித்திரை செய்.
இ : ,, ,,

27. அ : வஞ்சகம் — பிறர் உனக்குச் செய்த வஞ்சனையை.
ஆ : — கபட வார்த்தைகளை.
இ : — ,,

28. அ : அழகலாதன — பிறர் விரும்பும் தன்மையில்லாதனவற்றை.
ஆ : — நீ துன்பப்பட வந்த காலத்தும் இழிவுள்ள செயல்களை.
இ : — சிறப்பில்லாத செயல்களை.

30. அ : அறனை — அறக்கடவுளுண்மையை.
ஆ : — தருமத்தை.
இ : — ,,

31. அ : அனந்தல் — கட்செருக்கு.
ஆடேல் — அலையற்க,
ஆ : அனந்தல் — நித்திரை.
ஆடேல் — அதிகமாகச் செய்யாதே,
இ : — ,,

32. அ : கடிவது — கற்ற நூல்கள் கடிவதனை,
ஆ : — ஒருவரைச் சினந்து பேசுவதை,
இ : — ,,

34. அ : கிழமைப்பட — யாரும் உனக்கு உரிமை உடையா ராமாறு.
ஆ : — உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கு உரிமைப்படும்படி.
இ : — உன் உடலும் பொருளும் பிறருக்கு உரிமைப்படும்படி.

36. அ : கைவிடேல் — கொள்ளாதொழியற்க.
ஆ : — கைவிடாதே.
இ : — ,,

37. அ : கீழ்மையுடையாரைக் கூடிக் குணமுடையாரைப் பிரிதல் செய்யற்க.
ஆ : நல்லவரோடு சிநேகித்து நீ பின் அவரை விட்டு நீங்காதே.
இ : ,,

38. அ : அக் கீழ்மையரைக் கெடுக்க நினைப்பதை உன் நெஞ்சினின்றும் ஒழித்து விடுக.
ஆ : பிறருக்குக் கேடு செய்வதை நீ விட்டுவிடு.
இ : ,,

40. அ : கைவினை — ஆசாரத்தோடு கூடிய கருமங்கள்.
ஆ : — உனக்குத் தெரிந்த கைத்தொழில்.
இ : — ,,

41. அ : கொள்ளை — பிறர்பால் ஒன்றும் கொள்ளுதல்.
ஆ : — பிறருடைய பொருளைக் கொள்ளையிடுதல்.
இ : —

42. அ : 'கோஓதாட் டொழி' (பா. வே.)
ஆ : 'கோதாட் டொழி' (பா. வே.)
இ : ,,

அ : கோஒதாட்டு – பயன்கொண்டொழிந்த துராலை ஆலையிட்டாட்டுதல்.
ஆ : கோதாட்டு – குற்றம் பொருந்திய விளையாட்டு.
இ : – ,,

43. அ : 'கௌவை யகற்று'
ஆ : கொள்ளவில்லை.
இ : ,,

45. அ : இனத்து – துணைமைக்கண்.
ஆ : – கூட்டத்தில்.
இ : – ,,

46. அ : சித்திரம் – அச் சான்றோர் முன்னே கைவன்மை யால் எழுதிக்காட்ட வேண்டிய சித்திரம் போன்றதொன்று.
ஆ : – மெய்போலத் தோன்றும் பொய் மொழிகள்.
இ : – பொய்ம்மொழிகள்.

அ : சீர்மை – விழுப்பம்.
ஆ : – புகழுக்கு ஏதுவாகிய குணம்.
இ : – ,,

48. அ : சான்றோர் சீர்மையினை அவர் முகஞ்சுளிக்கும்படி அவர்முன்னே உரையற்க.
ஆ : கேட்பவர் கோபிக்கும்படியாக நீ ஒன்றையும் பேசாதே.
இ : ,,

49. அ : சூது – சான்றோர்பால் உள்ளொன்று வைத்துப் புற மொன்று காட்டி யொழுகுதல்.
ஆ : – சூதாடல்.
இ : ,,

50. அ : 'செய்வினை' (பா.வே)
ஆ : 'செய்வன' (பா. வே.)
இ : ,,

அ : சான்றோர் செய்கின்ற வினையை உன் மனமொழி மெய்கள் திருந்துமாறு நீயும் செய்.
ஆ : செய்யும் காரியங்களைச் செவ்வையாக நீ செய்.
இ : ,,

51. அ : சேரிடம்—சான்றோர் திரண்ட இடம்.
ஆ : —அடையத்தகும் நன்மையாகிய இடம்.
இ : — ,,

52. அ : சை—கொச்சை என்பதன் முதற்குறை.
ஆ : அவ்வாறு கொள்ளவில்லை.
இ : ,,

56. அ : 'தானமிட' (பா. வே.)
ஆ : 'தானமது' (பா. வே.)
இ : ,,

59. அ : பிறரால் புரியப்படும் துன்பத்திற்கு உன்பால் இடம் கொடாது ஒழுகுக.
ஆ : தொழில் செய்யும்பொழுது முயற்சியினாலே வரும் சரீரப் பிரயாசத்தால் ஆகிய துன்பத்துக்கு இடம் கொடாதே.
இ : ,,

60. அ : தூக்கி—உனக்கும் பிறர்க்கும் இன்பம் தருவதோ துன்பம் தருவதோ என்று சீர் தூக்கிப் பார்த்து.
ஆ : —முடிக்கும் உபாயத்தை ஆராய்ந்து.
இ : — ,,

61. அ : தெய்வம் — ஊழுண்மை.
ஆ : — கடவுள்.
இ : — ,,

62. அ : 'தேயத்தோ' (பா. வே.)
ஆ : 'தேசத்தோ' (பா. வே.)
இ : ,,

63. அ : தையல்சொல் — சேர்த்தல் அல்லாத சொல்.
ஆ : அவ்வாறு கொள்ளவில்லை.
இ : ,,

64. அ : தொன்மை — பழைமை.
ஆ : — பழமையாகிய சிநேகிதம்.
இ : — ,,

65. அ : தொடரேல் — தொடங்கற்க.
ஆ : — சம்பந்தப்படாதே.
இ : — ,,

68. அ : நாடு ஒத்து நிலைத்தற்குக் காரணமான சமய நிலை யினின்று வேறுபடேல்,
ஆ : நீ நிற்கின்ற உயர்ந்த நிலையிலே நின்று ஒருபோதும் நீங்காதே
இ : ,,

69. அ : பிறருடைய நீர்மையாகிய சௌலப்பிய குணத் தின்கண் நீ விளையாடுதல் செய்யற்க.
ஆ : ஆழம் உள்ள நீரிலே நீ நீந்தி விளையாடாதே.
இ : ,,

70. அ : 'நுவலேல்' (பா. வே.)
ஆ : 'நுகரேல்' (பா. வே.)
இ : ,,

அ : சமயநிலைக்குரிய இரகசியங்களைத் தஞ்சமயத்தார் அல்லார் பலரறியச் சொல்லற்க.
ஆ : நோயைத் தருகிற சிற்றுண்டிகளை நீ உண்ணாதே.
இ : ,,

71. அ : நூல் – சமயநூல்.
ஆ : – அறிவை வளர்க்கிற நூல்.
இ : – ,,

73. அ : உலகு நேர்மைப்பட நீ சமய நெறியில் ஒழுகுக.
ஆ : உன் ஒழுக்கம் கோணாமல் செவ்வைப்பட நீ நட.
இ : ,,

74. அ : நைவு + இன் + ஐ = நைவினை; இன் – சாரியை.
ஆ : நை + வினை = நைவினை
இ : ,,

அ : நைவினை – இடுக்கண்களுக்கு.
ஆ : – பிறர் கெடத்தக்க தீவினைகளை.
இ : – ,,

77. அ : பழிப்பன – பிறரைப் பழிப்பன.
ஆ : – அறிவுடையார்களாலே பழிக்கப்படு வனவாகிய இழிசொற்கள்,
இ : – ,,

79. அ : பிழைபட – தீயார்க்கும் குற்றம் உண்டாக.
ஆ : – வழுக்கள் உண்டாகும்படி.
இ : – ,,

81. அ : 'புகழ்பட வாழ்' (பா. வே.)
ஆ : 'புகழ்ந்தாரைப் போற்றிவாழ்' (பா. வே.)
இ : ,,

83. அ : 'விரும்பு' (பா. வே.)
ஆ : 'திருத்தியுண்' (பா. வே.)
இ :

84. அ : நீ அறியாமையை ஒழிக்க.
ஆ : பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தை நீ மெய்ஞ் ஞானத்தினாலே போக்கு.
இ : ,,

85. அ : 'பைதலோ' (பா. வே.)
ஆ : 'பையலோ' (பா. வே.)
இ : ,,

87. அ : போர்த்தொழில் – போர் செய்தல்.
ஆ : – சண்டையாகிய தொழில்.
இ : –

89. அ : நின்னொடு மாறுபட்ட பகையரசனுக்கு உன் னாட்டில் இடம் கொடாதிருக்க.
ஆ : பகைவனுக்கு உன்னை நெருங்கிப் பின் வருத்தும்படி யாக இடம் கொடாதே.
இ : ,,

90. அ : மற்றை அரசர்களினும் உன்னை வீரத்தால் மிகுதிப் படக் கூறற்க.
ஆ : அதிகப்படும்படி நீ சொல்லாதே.
இ : ,,

91. அ : மீதூண் – அளவின்மேல் அநுபவிப்பது.
ஆ : – அதிக போசனம்.
இ : – ,, –

92. அ : நில்லேல் – ஒருபால் நிற்காமல் ஒழுகுக.
ஆ : – போய் நில்லாதே.
இ : – ,,

95. அ : மேன்மக்கள் – உயர்குடிப் பிறந்தார்.
ஆ : – மேன்மையாகிய மனிதர்.
இ : – நல்லொழுக்கமுடைய பெரியோர்.

97. அ : அறமொழி – தர்மமாகச் சொல்க.
ஆ : – சந்தேகம் நீங்கும்படி சொல்க.
இ : – ,,

98. அ : முனி — வெறுத்துத் தள்ளுக.
ஆ : — கோபித்து விலக்கு.
இ : — ,,

100. அ : முற்பட வாதம் காரணமாக ஒன்றைக் கூறா தொழிக.
ஆ : வாதுகளைப் பெரியோர் முன்னே நீ பேசாதே.
இ : ,,

101. அ : வித்தை — பிரமவித்தை.
ஆ : — கல்விப் பொருள்.
இ : —

103. அ : 'அம்ம வுத்தமனா' (பா. வே.)
ஆ : 'உத்தமனா' (பா. வே.)
இ : ,,

அ : வீடுபெறுதற்கேற்ற உத்தம அதிகாரி விசேடண முடையவனாக இருக்க.
ஆ : நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரினும் மேலானவனாகி நீ இரு.
இ : ,,

104. அ : 'அம்ம வூருடன்' (பா. வே.)
ஆ : 'ஊருடன்' (பா. வே.)
இ : ,,

105. அ : வாளா உரையாட்டற்க.
ஆ : கத்தி வெட்டைப் போல நீ ஒருவரோடுங் கடின மாகப் பேசாதே.
இ : ,,

105. அ : வினை — செயல்.
ஆ : — தீவினை.
இ : — ,,

107. அ : 'தொழுதெழு' (பா. வே.)
ஆ : 'துயிலெழு' (பா. வே.)
இ : ,,

அ : அற்றை நாளறுதற்குரிய கடையாமத்தே கடவுளைத் தொழாநின்றெழுக.
ஆ : நீ தினந்தோறும் விடியற்காலத்திலே நித்திரையை விட்டு எழுந்திரு.
இ : ,,

108. அ : 'அம்ம வொன்னாரை' (பா. வே,)
ஆ : 'ஒன்னாரை' (பா. வே.).
இ :

அ : தேறேல் – அநுகூலராகத் தெளியற்க.
ஆ : – ஒருபோதும் நம்பாதே.
இ : –

109. அ : 'அம்ம வோர்ந்து வழிபோ' (பா. வே.)
ஆ : 'ஓரஞ் சொல்லேல்' (பா. வே.)
இ : ,,

சொல்லடைவு

அஃகம் 13
அகல் 96
அகற்று 35,43,58,84
அடிமை 57
அம்ம 103,104,108,109
அமர்ந்த க. வா.
அரவம் 24
அலாதன 25,28
அழகு 28
அறம் 1
அறமொழி–தர்மமாகச் சொல்க 97
அறனை–அறக் கடவுளுண்மையை 30
அறிந்து 19,51
அனந்தல்–கட்செருக்கு 31
ஆட்டு 42
ஆட்டேல் 24
ஆடு 16
ஆடேல்–அலையற்க 31
ஆத்தி க. வா.
ஆறுவது 2
இகழ்ச்சி 8
இகழேல் 7,61
இட்டு 9
இட 56
இடம் 51,89
இடம்–பொருள் 18
இடம் கொடேல 59,76
இடேல் 18
இணக்கம் 19
இணங்கு 19
இணங்கேல் 85,93
இயல்பு 25
இயல்வது 3
இரு 45,103
இல்: உவமஉரு 26
இலவம் பஞ்சு 26
இளமையில் 29
இனத்து–துணைமைக்கண் 45
ஈவது 4
உடையது 5
ஊண் 9
உண்ணேல்–அநுபவிக்காதே 23
உத்தமனாய் 103
உரை 17
உரையேல் 75
ஊக்கமதுகை 6
ஊருடன் 104
எண் 7
எழு 107
எழுத்து 7
என 52,55
ஏத்திஏத்தி க. வா.
ஏற்பது 8
ஐயம் 9
ஒத்து 62
ஒப்பன 67
ஒப்புரவு 10
ஒழி 38,42
ஒழியேல் 11
ஒழுகு 10,73
ஒன்று 14
ஒன்னாரை 108
ஓதுவது 11
ஓர்ந்து 109
ஔவியம் 12
கடிவது 32
கடைப்பிடி 66
கண்டு 14
கரவேல் 3,40
கல் 29,71
காப்பது 33
கிட 26
கிழமை–உரிமை 34
கீழ்மை 35

குணமது 36
கூடி 37,104
கூடுறேல் 100
கெடுப்பது 38
கேள் 95
கேள்வி 39
கேளேல் 63
கை—ஆசாரம் 40
கைவிடேல்—கொள்ளா தொழியற்க 36
கொடேல் 89
கொள்ளை—கொள்ளுதல் 41
கோஒது 42
கௌவை 43
ங 15
சக்கரநெறி 44
சனி 16
சான்றோர் 45
சித்திரம் 46
சினம் 2
சீர்மை 47
சுருக்கேல் 13
சுளிக்க 48
சூடி க. வா
சூது—உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டி ஒழுகுதல் 49
செய் 22,50,57,60,67
செய்வினை 50
செய 1
செயேல் 25,28,106
சேர்—அடைவாய் 51
சேர்—திரண்ட 51
சேர்—புணர்க 94
சை 52
சொல் 63,95
சொல்லேல் 14,48,79,90
சொற்சோர்வு 53
ஞயம் 17
தக்கோன் 55
தடுமாறேல் 88
தந்தை 20
தாய் 20
தானம் 56
திரி 55
திரியேல் 52,54
திருந்த 50
திருமாலுக்கு 57
தீவினை 58
துணைக்கொள் 83
துன்பத்திற்கு 59
தூக்கி 60
தெய்வம்—ஊழுண்மை 61
தேயத்தோடு 62
தேவனை க. வா.
தேறேல் 108
தையல் 63
தொடரேல்—தொடங்கற்க 65
தொழுது 107
தொழுவோம் கா. வா.
தொன்மை 64
தோள் 94
தோற்பன 65
நணுகேல் 74
நல்லாள் 94
நன்மை 66
நன்றி—நன்மை 21
நாடு 67
நில் 44,80,102
நில்லேல் 92
நிலையில் 68
நீர்—நீர்மை 16,69
நுண்மை 70
நுவலேல் 70
நூல்—சமயநூல் 71
நெற்பயிர் 72
நேர்பட 73
நைவினை—இடுக்கண்களுக்கு 74
நொய்ய 75
நோய்க்கு 76

பகரேல் 77
பட—உண்டாக 17,34,79,81
பட—கெட 18
படேல் 53
பயிர் 22
பருவத்தே 22
பல 71
பழகேல் 78
பழிப்பன 77
பறித்து 23
பாம்பொடு 78
பிரியேல் 37,68
பிழை 79
பீடு 80
புகழ் 81
புரியேல் 87
பூமி 82
பெரியாரை 83
பெற 82,102
பேசேல் 12,27,46,99,105
பேண் 20
பேதைமை 84
பைதலோடு 85
பொருள்தனை 86
போ 109
போர்த்தொழில் 87
போல் : உவமஉருபு 15
போற்றி 86
மற 32
மறவேல் 21,30,47,64
மன்று 23
மனம் 88
மனை 96
மாற்றானுக்கு 89
மிகைபட 90
மீதூண்-அளவின் மேல் அநுபவிப்பது 91
முயல் 39
முன்—முற்பட 100
முனி—வெறுத்துத் தள்ளுக 98
முனைமுகத்து 92
மூர்க்கரோடு 93
மெல்லில்—மென்மைத் தன்மையுடைய பெண்டாட்டி 94
மேன்மக்கள்—உயர்குடிப் பிறந்தார் 95
மைவிழியார் 96
மொழிவது 97
மோகத்தை 98
யாமே க. வா.
வஞ்சகம் 27
வல்லமை 99
வழி 109
வளை 15
வாது 100
வாழ் 62,81,86,104
விடேல் 6
வித்தை—பிரமவித்தை 101
விரதம் 33
விரும்பு 1,56,82
விரும்பேல் 41,49
விலக்கேல் 4
விளம்பேல் 5
விளை 72
விளையாடேல் 69
வினை 40,60,106
வீடு 18,102
வெட்டென-வாளாது 105
வேண்டி 106
107